Registered at the G. P. O. as a Newspaper

சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET, COLOMBO—12.

வாரப்பதிப்பு விலை சதம் 15

புத்தகம் 9 மன்மத வரு மாசி மாதம் 28 திகதி 11-3-56 ஞாயிற்றுக்கிழமை ரஜப் பிறை 27 இதழ் 41

The Registrar of Books & Newspapers, 1 MAR 1956 CEYLON

BEREC
TRADE MARK

ப்ளாஷ் லைட் பெரெக் பட்டரிகள் இங்கிலாந்தில் தயாரிக்கப் பட்டவை.

அதிகப்பிரகாசமான வெளிச்சத்தையும், நீண்ட உழைப்பையும் அளிக்கிறது.

இலங்கையின் எதிர்கால கல்வித் திட்டத்தில் தமிழுக்கு இடமிராது!

கல்வி இலாகா சமர்ப்பித்துள்ள ஆலோசனைகள்

கல்லூரியிலிருந்து தமிழ்ப் பேசுவோர் தொகை குறைக்கப்படும் விபரம்

(நமது நிருபர்)

இலங்கையின் எதிர்கால கல்வித் திட்டம் தமிழை புறக்கணிப்பதாகவும், தமிழ்ப்பேகம் மக்களுக்கு எதிராகவும்அமையும். இதற்கான திட்டத்தை கல்வி இலாகா அதிகாரிகள் வகுத்துள்ளனர் என்று நம்பகமுள்ள செய்தி ஒன்று நமக்குக் கிடைத்துள்ளது.

அரசாங்கம் தனிச்சிங்க (2) தமிழ் மொழியில் விருப்பதால் இன்றுள்ள கல்வி அமைப்பை அது மாற்ற இருக்கிறது. வருங்கால கல்வித் திட்டம் எப்படி அமையவேண்டும் என்பது பற்றிய முழுத்திட்டத்தையும் கல்வி இலாகாவகுத்திருக்கிறது.

இந்த திட்டத்தை அரசாங்கமேலிடம் பரிசிலனை செய்து வருகிறது. புதிய திட்டத்தில் தமிழ் பூரணமாக ஒதுக்கப் பட்டுள்ளது என்று கல்வி இலாகா அதிகாரிகள் சமர்ப்பித்துள்ள ஆலோசனைகளை பரிசிலித்த வட்டாரங்களிலிருந்து நாம் அறிகிறோம்.

கல்வித் துறையில் தமிழ்ப் பேசும் மக்களை ஒதுக்குவதற்கான திட்டத்தின் ஒரு பாகமாக பயிற்சிக் கல்லூரிகளில் தமிழ் பேசுபவர்கள் தொகை குறைக்கப்பட்டு வருவது எடுத்துக் காட்டப்படுகிறது. இலங்கையின் பிரதான ஆசிரிய பயிற்சிக் கல்லூரியான மஹரகம அரசினர் பயிற்சி கல்லூரி இதற்கு உதாரணம்.

சென்ற பல காலமாக இக் கல்லூரியில் பயிற்சி பெறும் மாணவர்களில் 40சத வீதத்தவர்கள் தமிழ்ப் பேசும்இனத்தைச் சேர்ந்தவர்களே. ஆனல் இந்த வருடத்தில் பயிற்சிக்கு எடுக்கப்பட்டவர்களில் 20 சத வீதத்தவர்களே தமிழ்ப்பேசும் இனத்தைச் சேர்ந்தவர்கள்.

எதிர்காலத்தில் கல்வித் துறையில் தமிழ்ப்பேசும் மக்கள் கதி என்னவாகும் என்பதற்கு இது ஒரு முன்னறிவித்தல் என்று கல்வி இலாகாவைச் சேர்ந்த பகுதிகள் கருதுகின்றன.

கல்வித் துறையில் தமிழ் புறக்கணிக்கப் படுவதற்கான மற்ற அறிகுறிகள் பின்வருமாறு:

(1) நாட்டிலுள்ள தமிழ் கனிஷ்ட பாடசாலைகள் பூரணமாக உதாசீனப்படுத்தப்படுகின்றன. சென்ற இரண்டு வருடங்களாக இந்தக் கல்லூரிகளுக்கு ஒழுங்கான முறையில் அரசாங்க உபகாரம் அளிக்கப்படவில்லை.

விக்கும் என்று வாதிக்கப்படுகிறது.

தமிழ்ப்படித்தவர்கள் ஆயிரக்கணக்கில் வேலையின்றித் திண்டாட நேரிடும் எனவும், இன்று வேலைகளிலுள்ள எராளமானோரை தமது வேலைகளை இழக்கவேண்டியிருக்கும் என்றும் கருதப்படுகிறது. சிங்களத்தை அரசாங்க மொழியாக மட்டுமல்ல நாட்டின் சகல பகுதிகளிலும் ஆரம்பப் படிப்புத் தொட்டு உயர்தரப் படிப்பு வரை சிங்களத்திலேயே நடத்த அரசாங்கம் அந்தரங்கமாக முடிவு செய்துள்ளது என்று கூறப்படுகிறது.

ஆருண்டுத் திட்டம் அரோகராவாகிறது

(நமது நிருபர்)

அரசாங்கத்தின் அடுத்த ஆருண்டுத் திட்டமும் வெறும் புஸ்வாணமாகிவிட்டது. திட்டம் அதன் எல்லாத்துறைகளிலும் தோற்றுவிட்டது.

அளிக்கப்பட்டிருக்கும் கால எல்லைக்குள் திட்டத்தின் இலக்குகள் எதுவும் நிறைவேற்றப்பட முடியாதென்று திட்ட கமிஷன் அரசாங்கத்திற்கு சமர்ப்பித்துள்ள ஒரு அறிக்கையில் கூறியுள்ளது.

இந்த நிலையில் ஆருண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பல நிர்மாண வேலைகளை கைவிடுவதவசியம் என்று கமிஷன் மேலும் தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தல் எதிரே வருவதால் கமிஷனின் இந்த யோசனையை ஆள்பவர்கள் விவாதத்திற்குக்கூட எடுத்துக்கொள்ளவில்லை எனத் தெரிகிறது. இந்த நேரத்தில் இது குறித்து பரிசீலனைகள் நடத்துவதாக இருந்தால் அது மக்கள் மத்தியில் யு. என். பிக்கு காணப்படும் அதிருப்தியை மேலும் வளர்ப்பதாகும் என்று இவர்கள் கருதுகிறார்களாம்.

என்றாலும் ஆருண்டுத் திட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமாக உலக வங்கியின் பொருளாதார நிபுணர்களை அழைப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

திடுக்கிடும் சம்பவங்களுள்ள

'வி.ஐ.டி.சந்துரு'

துப்பறியும் நாவலை

'ஆனந்த விகடனி'ல் படியுங்கள்!

அரசாங்க ஊழியர்களை வாக்களிக்க முடியாது செய்யச் சூழ்ச்சி

27000 பேர் வாக்குப்பதிவு செய்ய முடியாது போகும்

(நமது நிருபர்)

அடுத்த பொதுத் தேர்தலில் அரசாங்க ஊழியர்கள் வாக்களிக்க முடியாது போகுமா? இந்தப் பிரச்னை அரசாங்க ஊழியர் மத்தியில் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் சம்பந்தமாக திறைச்சேரி அனுப்பியுள்ள ஒரு சுற்றறிக்கை இந்த பரபரப்பிற்கு காரணம் என்று தெரிகிறது.

தேர்தல் வேலைக்கு 27 ஆயிரம் அரசாங்க ஊழியர்கள் அமர்த்தப்படுவர். இவர்களுக்கு விடுமுறை அளிக்கப்படமாட்டாது.

இந்த அரசாங்க ஊழியர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்வதெப்படி? இவர்கள் வாக்குப் பதிவு செய்வதற்கு உரிமை உள்ள தொகுதிகளில் தேர்தல் ஊழியத்திற்கு அமர்த்தப்பட மாட்டார்கள் என்றும் இந்த நிலையில் இவர்கள் அத்தனைபேரும் வாக்களிக்க முடியாது போகும் என்றும் கூறப்படுகிறது.

அத்தோடு அரசாங்க ஊழியரில் பெருவாரிப் பகுதியினரை எப்படியாவது வாக்களிப்பில் கலந்துகொள்ளாது செய்வதற்கான நடவடிக்கைகள் பலவற்றை எடுக்க அரசாங்கம் அந்தரங்கமாக திட்டமிட்டுள்ளதாம். வெவ்வேறு காரணங்கள் காட்டி இடம்மாற்றம் செய்யக் கூடியவர்களை மாற்றுவதற்கும் ஆள்வோர் யோசித்துள்ளனர் என்று தெரிகிறது. சுயபாஷை ஆசிரியர்கள் யு. என். பியின் பெரும் விரோதிகளாதலாலும், அவர்கள் பகுதி மக்களிடை பெரும்செல்வாக்கு வகிப்பதால் அவர்களை அந்தந்தப் பகுதிகளில் யு. என். பிக்கு ஆபத்தாக முடியும் என்று பயந்த அரசாங்கம் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களை இடமாற்றம் செய்திருக்கிறது என்று தெரிகிறது. இம்மாத ஆரம்பத்தில் ஏராளமான ஆசிரியர்கள் எத்தகைய முன்னறிவித்தலும் இன்றி தந்தி மூலம் மாற்றப் பட்டுள்ளார்கள்.

பிரதமரை எதிர்த்து சகல கட்சிகளின் முன்னணி

இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையை எதிர்த்து சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றுபட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக தொடங்கஸ்லந்தையில் சேர் ஜோனை எதிர்த்துப் போட்டியிடும் ரி. பி. ஹேரத்திற்கு ஆதரவாக எதிர்க்கட்சிகள் சக்தி மிக்க பிரசாரத்தை நடத்த விருக்கின்றன என்று தெரிகிறது. சகல கட்சிகளின் பிரசாரகர்களும் தொடங்கஸ்லந்தைக்கு விஜயம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமருக்கு பலம் பொருந்திய எதிர்ப்பு இந்தத் தடவையே இருக்கும் என்றும் சகல எதிர்க்கட்சிகளும் ஒரேமுகமாக பிரதமரை எதிர்த்து போராடுவதால் நிலைமை அவருக்கு சுலபமாக இருக்காது என்றும் சொல்லப்படுகிறது.

தொய்வு

ஓயாத இருமல் ஈளை—தொய்வு (Asthma) சளிக்கட்டு, மூச்சுத் திணறல், பீனிசம், கக்குவான், மார்பு வலி, தொண்டை ரணம் போன்ற கொடிய நோய்களுக்கென்றே பிரான்சில் (France) தயாரிக்கப்பட்டு வந்திருக்கிறது இந்தஅபூர்வ ஔஷதம். இரவு பகல் நித்திரையின்றி துன்புற்றோர் பலர் பூரண குணமடைந்திருக்கின்றனர் இந்த மருந்தினல்.

எங்கும் கிடைக்கும்.



உடனே வாங்கிச் சாப்பிடுங்கள்

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

ஒரேபோத்தலில் குணம் தெரியும்

கேட்லாக் இலவம்!

வெல்டன் ஏஜன்சீஸ்,
170, ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு. போன்: 2885

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர் பகுதி:

பெண்களுக்கு சமத்துவம் அர்த்தமற்றது

அடுப்பங்கரைக்கதவை அடைத்துவிட்டு வெளிக்கிளம்புவதே உய்யும் மார்க்கம் என்பது வெறும் பேதமை

செல்வி. சகிதேவி

காற்றுச் சுழன்று சுழன்று வீசிக்கொண்டிருந்தது. தெருவில் ஒருவன் ஓடிக்கொண்டிருந்தான். விளையாடிக்கொண்டிருந்த இரு குழந்தைகள் தம் விளையாட்டை அப்படியே விட்டுவிட்டு அவன் பின் ஓடின. விசேஷம் ஏதோ நடைபெறுகிறதென்ற எண்ணத்தில் தூர நின்றவர் சிலர் அவர்களைத் தொடர்ந்து ஓடினர்கள், அதற்கு தெரு முழுவதுமே அவன் பின் ஓடிக்கொண்டிருந்தது. முதலில் சென்றவன் ஒரு சந்தில் திரும்பினான், கூட்டமும் திரும்பியது; அவன் சற்றுக் குனிந்தான். கூட்டமும் குனிந்தது. காற்று அடித்துக்கொண்டு பறந்த அவன் கைக்குட்டை, செடியொன்றில் சிக்கி அவன் கைக்கெட்டியது. நிம்மதியுடன் மூச்சு விட்டுக்கொண்டே அவன் தன் பாதையில் செல்லத் திரும்பினான். அவனைச் சூழ்ந்து நின்ற கூட்டத்தைப் பார்க்க அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது! அவர்கள் ஏன் கூடினர்கள் என்பதை அவனால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் இன்றைய மக்களது மனோபாவத்தை அவன் உணர்ந்திருக்கவில்லை.

என்றோ பார்த்த இச்சிறு சம்பவம் இன்று என் நினைவில் எழுகிறது. சிறு விஷயங்களில் மாத்திரமல்லாமல், வாழ்வையே பாதிக்கும் பெரும் பிரச்னைகளிற்கூட மக்கள் நடந்துகொள்ளும் முறை இப்படித்தான் இருக்கிறது. ஏதோ ஒருவன் ஓடினால் நாமும் சேர்ந்து ஓடுவோம் என்ற கொள்கைதான் இன்று மேலோங்கி நிற்கிறது. அவன் எதற்காக ஓடுகிறான், நாமும் தொடர்ந்து ஓடுவதால் பயனுண்டா என்ற சிந்தனைக்கு இன்றைய உலகில் இடமில்லை. 'பெண்ணுக்குச் சமத்துவம்' என்ற பிரச்னையும் கூட இன்று இதே ரீதியில்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. "பெண்கள் சமத்துவம் என்றால் என்ன? பெண் சமத்துவத்திற்காகப் போராடி மடிவோம் என்று மார்தட்டும் 'முற்போக்காளர்' எவரையாவது பார்த்து இதைக் கேட்டால் என்ன பதில் கிடைக்கும்? "சமத்துவம் என்றால் ஆண்களோடு சரி நிகராகப் பெண்களும் நிற்க வேண்டும். உடைமுதல் உத்தியோகம் ஈறாக எல்லாத் துறைகளிலும் நாங்களும் அவர்களும் சமமே. இதை எல்லோரும் உணர வேண்டும். இதற்காக "நீங்களும் 'ஆண்கள்தானே?' என்று அவர்கள் பஸ்ஸில் எழுந்து இடந்தர மறுத்தாலும் எங்களுக்குக் கவலையில்லை. நாங்களும் அவர்களைப்போல் நின்று விடுகிறோம்" என்ற பதில் வருமா? அல்லது 'இந்த ஆராய்ச்சி எல்லாம் எதற்கு? "பெண்கள் சமத்துவத்திற்காகப் போராடுவதுதான் இன்றைய நாகரிகம். அப்படியானால்தான் நாமும் முற்போக்குக் கொள்கை கொண்டவர் என்று கௌரவிக்கப்படுவோம்" என்பார்களா? என்னைப் பொறுத்தவரையில் பெண்கள் சமஅந்தஸ்தைக் கோருவோர் எதை வேண்டுகிறார்கள் என்பது அன்றுபோல் இன்றும் புரியாத புதிராகவே இருக்கிறது.

சில விஷயங்களைப் பெண்களாற்றான் செய்ய முடியும்; அதேபோன்று சில விஷயங்களைச் செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றல் ஆண்களுக்குத்தான் உண்டு. இது மறுக்க முடியாத உண்மை. ஆசிரியத் தொழிலை எடுத்துக்கொண்டால், தாயின் இனிமையான அரவணைப்பைத் துறந்து, வீட்டின் கட்டுப்பாடற்ற சூழலை விட்டு, கண்ணீர் சிந்த மெல்ல வரும் சிறுர்களை, அன்பு காட்டி, இன்சொல் பேசி, பாடத்தைப் புகட்டும் பொறுமை பெண்களுக்குத்தான் உண்டு என்று துணிந்து கூறலாம். ஆனால் அறிவொன்றே பிரதானமாக வேண்டப்படும் மேல் வகுப்புகளில் இருதிறத்தாரும் வெற்றிபெறலாம். 'தாய்' என்ற உன்னத ஸ்தானம் பெண்களுக்கே சிறப்பாக அமைந்ததொன்று. இதை மற்றெவரும் கவரவோ, மேற்கொள்ளவோ முடியாது.

உடல் உரத்தின் திறன் கொண்டு செய்யப்படும் பல்வேறு தொழில்களில் பெண்கள் ஆண்களைப்போல் செய்து முடிப்போம் என்பது முடியாத விஷயம். இதில் தலையிடுவது புத்திசாலித்தனமுமன்று. மென்மையே பெண்ணின் செம்மை. மென்மையாக அமைந்து மணம், வீசிக்கொண்டிருக்கும் ரோஜா மலர், தன் மென்மையையும் இனிமையையும் விட்டு முள்ளின் வன்மை வேண்டுமென விரும்பினால் இறைவனது திருக்கழுத்தில் ஆரமாகத் திகழ்வதை ஒழித்து, கேட்பாரற்று மடிவதல்லாமல், அது பெறும் பயன் எதுவுமில்லை.

ஆண் பெண் சமத்துவம் என்பது எல்லாத்துறைகளிலும் சாத்தியமானதன்று. எல்லாத்துறைகளிலுமே சமத்துவம் வேண்டுமெனப் போராடுவது அர்த்தமற்றதாகக்கூட ஆகிறது.

அத்துடன், கழகங்கள் கூட்டி சங்கங்கள் சேர்த்து நாம் வேண்டும் சமத்துவம் நிலையானதன்று. எல்லோராலும் போற்றப்படுவதன்று. வெளிப்போராட்டத்தால் பெறும் வெற்றிக்கு அழிவுண்டு. உள்ளப் போராட்டத்தால் பெறும் வெற்றியோ அழிவற்றது, எல்லோராலும் போற்றப் படுவது. உள்ள உயர்வால், அன்பால் எவ்வுயிரையும் போற்றும் பண்பால், ஒழுக்கத்தால், அறிவால் சிறந்து விளங்கும் பெண், எவரது தயவையும் வேண்டாது தானாகவே எல்லோரது மதிப்பையும், கௌரவத்தையும் பெற்றுக் கொள்கிறாள். உலகம்தோன்றிய காலத்திலிருந்தே இந்தச் "சமத்துவத்தைப்" பெண்கள் பெற்றிருக்கிறார்கள். வேதங்கள் பாடிய பேரறிவு படைத்த பெண்கள், படைமன்னனின் பெருந்திறலைத் தன் ஆற்றல் மிக்க சில சொற்கள் கொண்டு வென்ற ஔவை, ஒற்றைச் சிலம்பின் ஒளிமணி கூட்டி அரசவையில் வெற்றிக்கொடி நாட்டிய பத்தித் தெய்வம், பாண்டிய நாடு முழுவதும் பரந்திருந்த சமண இருளைக் கிழித்துப் பரந்த பக்தி ஒளிமிக்க மங்கையர்க்கரசி, கணவன் கொண்ட அறப்போரில் முன்நின்று வெற்றி தந்த அன்னை கஸ்தூரிபாய் இவர்களை நாம் சிறிது நினைப்போமாக. இவர்கள் தங்கள் சமத்துவத்திற்காகப் போராடவில்லை, புகழைவேண்டவில்லை, இகழை வெறுக்கவில்லை. சமாசனங்கொடுத்து உயிர் காக்கும் நெல்லிக்கனியைக் கொடுத்துத் தன் அன்பைக் கொடுத்து ஔவையை மதித்தான். அதிகமான கண்ணகித்தெய்வத்தின் சிலையை அமைப்பதற்கு முடிமன்னர்கள் கல் சுமந்தனர். தமிழ் நாட்டின் ஞானக்குழந்தையின் செந்நா, "வளர்கோன் பாவையின்" பெருமையைப் பாடி மகிழ்ந்தது. அன்னை கிருஷ்ணபாய் இன்று பாரத நாட்டிற்கு மாத்திரமல்லாமல் மேல் நாட்டவர்க்குக் கூட தாயாக விளக்குகிறார். இவர்கள் உள்ளத்தால் உயர்ந்தார்கள், அன்பால் உயர்ந்தார்கள், உலகில் அவர்கள் புகளும் உயர்ந்தது, அந்தஸ்தும் உயர்ந்தது, இதற்கு மேலான ஒரு சமத்துவத் திட்டத்தை நாம் இன்று வகுக்க முடியுமா?

தன் உள உயர்வால், கடமைச் செம்மையால், எல்லாப் பெண்களுமே "சமத்துவத்தைப்" பெறலாம் என்பது திண்ணம். வீட்டின் ஜீவநாடியாகத் திகழும் மனைவிக்கு, தாய்க்கு, உயர்ந்த மதிப்பு—வீட்டுத் தலைவனிலும் பன்மடங்கு உயர்ந்த மதிப்பு இருக்கத்தான் இருக்கிறது. பொதுநல சேவையில் தன் பங்கைச் செவ்வனே செய்து முடிக்கும் பெண் பல்லோராலும் நல்லோராலும் போற்றப்படத்தான் செய்கிறாள். இருப்பது ஒன்றை இல்லையெனக் கருதிப் போராடுவதே இன்றைய சமத்துவப் பிரச்னையின் அடிப்படை பெண்ணின் பெருமையைப் பேசிப் பொங்கிய திரு வி. க. புதுமைப் பெண்ணின் புகழ்பாடி மகிழ்ந்த பாரதி, தாயென மதித்துப் போற்றிப் பெருமை செய்த அடியார்கள் ஆழ்வார்கள், இவர்கள் எமக்குக் கொடுத்திருக்கும் மதிப்பைக்கூட அல்லவா மறந்து விடுகிறோம் நாம். ஆண்மகனுக்குப் பிறந்தும், அன்பை வளர்த்தும், பொறுமையை வளர்த்து, உள்ளத்தால் பெண்ணாக மாறுவதையே தன் வாழ்வின் பெரு நோக்காகக் கொண்டார் நம் காந்தி அண்ணல். இவர்கள் பெண்ணின் சமத்துவத்தை வேண்டவில்லை. பெண்ணின் மென்மையையும் ஒப்பில் தன்மையையும் போற்றினார்கள், புகழ்ந்தார்கள், தாயெனக் கைகூப்பித் தொழுதார்கள்.

பெண்கள் தங்கள் உயர்வை வெளி நாகரிகத்தின் உயர்வாலோ, தான்தோன்றித் தனமாகத் திரியும் முறையாலோ ஸ்தாபித்து விட முடியாது. இது பிற்போக்குக் கொள்கை கொண்ட தமிழ் நாட்டாரது பிற்போக்குக் கொள்கையன்று. மேல் நாட்டுக் கதைகள் பல இந்தத் "தான்தோன்றிப்" பெண்களது வீழ்ச்சியைச் சித்தரிக்கின்றன. நாகரிகம் மிக்க தற்காலப் பெண்களை வெவ்வேறு கோணங்களில் தன் கதைகளில் தீட்டியிருக்கும் முற்போக்குச் சிந்தனை மிக்க மாராட்டிய எழுத்தாளர் காண்டேகர்கூட "பெண் என்றும் பெண்ணாக இருக்க வேண்டியவள். நாகரிகத்தின் பெயராலோ, சூழ் நிலையின் மீதிலோ பழியைப் போட்டுத் தவறி நடப்பாளாயின் என்றும் அழிய வேண்டியவளே!" என்று ஆணித்தரமாக கூறுகிறார்.

கரையை உடைத்துக் கொண்டு பாயும் வெள்ளத்தை அணைகட்டித் தடுத்து, குறுகிய எல்லைக்குள் வைத்திருக்கத்தான் கமக்காரன் முயல்வான். அமைதியாக நெளிந்து செல்லும் நதியைத் தடுத்து நிறுத்த அவன் என்றும் முன்வரான். அதன் அமைதியும், அழகும், தன் பயிரைப் புறந்தரும் அன்பையும் பார்த்து அவன் உள்ளம் குதூகலிக்குமே அன்றி பயத்தால் நடுங்காது. பெண் என்றும் வற்றாத ஜீவநதியாகத் திகழ வேண்டியவளே. எக்காரணம் கொண்டும் பயங்கரக் காட்டாற்று வெள்ளமாக அவள் மாறக் கூடாது.

அடுப்பங்கரைக் கதவை இழுத்துச் சாத்திக்கொண்டு வீட்டைவிட்டு வெளிக்கிழம்பினால்தான் நாம் உய்வோம் என்று முயல்வது பேதமையே. "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர்" ஆவர். உயர்வென்பது செய்யும் தொழிலில் தங்கி இருக்கவில்லை. செய்வோரின் உளச் சிறப்பிலேயே தங்கி இருக்கிறது.

மேல் நாடுகள் பெண்களை மனிதர்கள் ஆக்கினர். ஆனால் எம் தமிழ் நாடோ பெண்களைத் தெய்வமாக்கியது. இந்த உன்னத பரம்பரையில் வந்த நாம் புதுப்புது அர்த்தமற்ற பிரச்னைகளைப் படைத்து, அவற்றிற்கு விமோசனம் தேடும் திண்டாட்டத்தில் சிக்கிச் சுழன்று பொன்னான நேரத்தைப் பயனில் செயலில் கழிக்காமல், உலகம் உருப்பெற்ற அன்று தொட்டு இன்றுவரை, பெண்களுக்கு மக்கள் கொடுத்திருக்கும் உன்னத ஸ்தானத்தைக் காப்பாற்றி வளர்ப்பதில் செலவிடுவோமாக. அன்பால் ஒவ்வொரு பெண்ணும் தாயாக வேண்டும். தொண்டால் அவள் ஒரு தியாகியாகி எல்லோரது துன்பத்தையும் துடைத்து இன்பம் பெருக்கவேண்டும். அறிவால் உய்நெறி காட்டும் மந்திரியாக அவள் விளங்க வேண்டும். நெறியில்லா நெறியில்வேண்டும் "சமத்துவத்தி"லும் மேலான உயர்வை அது அவளுக்குக் கொடுக்கும்.

நகைச் சுவைக் கட்டுரை:

'கியூ' வரிசைகள்!

(ரீ பாக்கியநாயகம்)

அன்றொருநாள் என் மனைவியின் பிறந்தகத்திலிருந்து தந்தியொன்று வந்திருந்தது. எம் இனபந்துக்களில் ஒருவருக்கு கடுமையான நோயென்றும், உடனடியாக எம்மிருவரையும் வந்து சேருமாறும் அத்தந்தியிற் கண்டிருந்தது. எனவே புறப்படுவதற்கேற்ற ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தோம்.

உடுத்துக்கொள்ள அறைக்குட் சென்ற அவள் என்னை நோக்கி "இங்க பாருங்க, தலையில் வைக்க எண்ணெய் முடிந்துவிட்டது. கடைக்குப் போய்க் கொஞ்சம் வாங்கி வர்றீங்களா?" என்றாள். நானும் மணி பர்ஸைத் தடவிப் பார்த்துக்கொண்டு கடையை நோக்கி விரைந்தேன். அங்கே பொருட்கள் வாங்குவதற்கென ஓர் பெரிய 'கியூ' வரிசை நின்று கொண்டிருந்தது கடைக்கு முன்னால். கியூவில் அங்கத்தவனாகி எண்ணெய் பெற்று வீடு திரும்ப சுமார் அரை மணி நேரம் பிடித்தது.

ஒருவாறாக உடுத்துக்கொண்டு பஸ் நிலையத்தை நோக்கிப் புறப்பட்டோம். அங்கே பஸ் ஏற நிற்கும் பிரமாணிகளின் பிரமாண்டமான கியூ, பாம்புபோல் வளைந்து சென்றுகொண்டிருந்து. நாங்கள் பஸ் ஏறி ரெயில்வே ஸ்டேஷனுக்குச் செல்ல மீண்டும் ஒரு அரை மணி நேரம் சென்றது. ரெயில் வண்டிக்கு டிக்கெட் பெற ஸ்டேஷனிலும் கியூ வரிசைதான். இவ்வாறாக அன்று முழுவதும் வெவ்வேறு கியூ வரிசைகளில் தவங்கிடந்து அன்ன நடை நடந்து மனைவியின் பிறந்த வீடு செல்ல பொழுதடைந்து விட்டது!

'கியூ' என்பது நமது வாழ்க்கையிலே ஓர் சர்வசாதாரண அன்றாட, அம்சமாகிவிட்டது. ரேஷன் கடைக்குச் சென்றாலும் அங்கு கியூதான். ஓர் நல்ல படம் வந்துவிட்டது; பார்க்கலாமென்று தியேட்டருக்குச் சென்றால் அங்கேயும் இந்தக் கியூ வரிசைதான். மற்றும் வங்கி, வைத்தியசாலை முதலியவைகளும் சர்வம் கியூ வரிசை மயமாகவே காட்சியளிக்கின்றன. எனவே 'கியூவின்றி மானிடரில்லை; மானிடரின்றி கியூவில்லை' என்றும் நாம் வைத்துக்கொள்ளலாம்.

ஆனால் 'மானிடரின்றிக் கியூவில்லை' என்பதைப் படித்துவிட்டு எறும்புகள் நம்மீது கியூ வரிசையில் வந்து படையெடுக்கவும் கூடும். ஏனெனில் கியூ வரிசையை உலகிற்கு முதன்முதலில் எடுத்துக்காட்டிய பெருமை எறும்புகளையே சாரும்! எனவே "எறும்பின்றி எந்நாளும் இல்லையே கியூ வரிசை' எனக் கூற நிர்ப்பந்திக்கப்படுகிறோம்!

"கல்லூரி கியூ"வைப்பற்றி உங்களுக்குத் தெரியுமென நம்புகிறேன். கொழும்பில் வதியும் வாசகர்களில் அநேகர் இதில் அனுபவமடைந்திருப்பீர்கள். இவ்வகைக் கியூ கல்லூரிகளிலேதான் காணப்படுகிறது. வருட ஆரம்பத்தில் தமது பிள்ளைகளைக் கல்லூரிகளிற் [illegible] முற்றுகையிடுவோர் [illegible]கர்?

களே இதன் அங்கத்தவர்கள்.

தற்போது உலகின் பல பாகங்களிலும் வேலையில்லாப் பிரச்னை தாண்டவமாடுகிறது. ஒவ்வொரு ஆபீஸ் வாசல்களிலும் நிற்கும் வேலையற்றோரது கியூ வரிசைகளைக் கலைக்க 'வேலை காலி இல்லை' என்ற போர்ட்டால் மட்டுமே முடிகிறது!

கியூ வரிசைகள் மக்களை ஒழுங்காகச் செல்வதற்கு மட்டுமே உதவுவதில்லை. கியூவில் பல ரஸமான சம்பவங்களும் நடைபெற்றுவருகின்றன. முன்பின் அறிமுகம் இல்லாத நபர்களுடன் கியூ வரிசையிலிருக்கும்போதுதான் நாம் பேசிக்கொள்ள அவகாசம் கிடைக்கிறது. கியூவிலிருந்து நாம் குறிப்பிட்ட இடத்தை அடையும்போது அத்தியந்த நண்பர்களாகிவிடுகிறோம். ஏன்; என் மனைவியை நான் முதன்முதலாகச் சந்தித்ததும் இது மாதிரி ஓர் கியூ வரிசையிற்தானே! மேற்படி சந்திப்பு இப்படிக் கலியாணத்தில் வந்து முடியுமென நான் அந்நேரம் எண்ணியிருந்தால் அந்தக் கியூவில் போய் நின்றே இருந்திருக்கமாட்டேன்!

இப்போது பத்திரிகைகளில் கட்டுரைகள் பிரசுரமாவதற்கும் கியூவில் நிற்க வேண்டிய காலம் வந்துவிட்டது. எனவே இக்கட்டுரையை எழுதிவிட்டு அது பிரசுரமாகும்வரை காத்து நிற்பதுதான். என்ன....? இதைப் படிக்க நீங்களுமா [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலபாமாவில் நிறத்திமிர் வெறி

வெறியர்களை எதிர்த்து லூசியின் போராட்டம்

(எழுதியவர்: ஒதேறைன் லூசி).

உலகிற்கு ஜனநாயகம் போதிக்கிறார்கள். தனி மனித உரிமை பற்றித் தம்பட்டமடிக்கிறார்கள். எம் மக்களின் முன்னேற்றத்தையும் ஆட்சிமுறையையும் காணீர் என்று அறை கூவுகிறார்கள். அந்த நாட்டிலேதான் இந்த நிறத்திமிர் தாண்டவமாடுகிறது. அந்த நாட்டின் வளத்திற்காக வியர்வையும் இரத்தமும் சிந்திய கோடிக் கணக்கான மக்களின் உரிமைகள் நிற பேதங் காட்டி நசுக்கப்படுகின்றன. நிறத்திமிரின் கோரப் பற்களிடையே ஒரு ஏழைப் பெண் அடைந்த கொடுமைகளைக் கேளுங்கள். அவளே தன் கதையை—இரத்தக் கண்ணீர் வடிக்க வைக்கும் கோரக் கதையை கூறுகிறாள்.

அவளின் இந்தக் கண்ணீர் அவளது இனத்தவர்கள் வடிக்கும் இந்தக் கண்ணீர் அமெரிக்க நிற வெறியை அழிக்கும் பெரும் படை என்பதை அந்த நாட்டின் ஆளும் வர்க்கம் தெரிந்து கொள்ளும்.

அலாபமா பல்கலைக் கழகத்திலே என்னை வகுப்பறையில் விட்டுக் கதவை அடைத்துவிட்டனர். வெளியே வெள்ளை மாணவர்கள் கூட்டம் என் உயிரைக் குடிக்கத் துடித்துக்கொண்டிருந்தது.

அவளைக் கொல்லுங்கள் வெளியே இழுத்து வந்து கொலை செய்யுங்கள்"—கதவை உதைத்துக் கொண்டே கூச்சலிட்டனர்.

ஏன் தெரியுமா? என் தோலின் நிறம் கறுப்பாம்! நானே ஒரு நீக்ரோ. ஐந்து ஆண்களையும். நாலு பெண்களையும் கொண்ட ஒரு குடும்பத்திலே நானே இளையவள்.

தான்பெரியவளானபோது தான் என் நிறம் காரணமாகப் பல உரிமைகள் ஒதுக்கப்படுவதைக் கண்டேன். இது நீதியற்றது என்பதை உணர்ந்தேன். வாழ்விலே கிட்டக் கூடியவற்றுள் ஒரு பகுதியாயினும் எமக்குக் கிடைக்க வேண்டும் என எண்ணினேன்.

எம்மவர்கள் உயர் நிலைப் பள்ளியில் சுருக்கெழுத்திலும் தட்டெழுத்திலும் பட்டம் பெற்றேன்.

காரியதரிசி பதவி ஒன்று கிடைத்தது. அதோடு நான் நின்றுவிடவில்லை.

நான் உழைத்துச் சேமித்த சிறு தொகையோடு பேமிங்காமிலுள்ள மைல்ஸ் கல்லூரியில் சேர்ந்தேன்.

1952-ல் அங்கும் பட்டம் பெற்ற பின்னர் மேலும் படிக்க விரும்பினேன். படிப்பகப்பொறுப்பாளர் பதவிக்கும், பட்டம் பெறுவதற்காக இந்த வெள்ளையர்கள் கல்லூரியில் நுழைவதற்கு சென்ற மூன்று ஆண்டுகளாக முயன்றேன்.

எதுவும் சுலபமானதல்ல என்பதைப் போராட்டத்தின்மேல்தான் உணர்ந்தேன். அலாபமா பல்கலைக் கழகத்தில் நுழைந்தபோதுதான் நான் கற்பனை செய்தே பார்க்க முடியாதபடி நிலைமை இருப்பதைக் கண்டேன்.

என் மேல் கல் எறிந்தார்கள். என்னைச் சபித்தார்கள். கொடும்பாவி கட்டி எரித்தார்கள். அவற்றைக் கண்டு என் உறுதியை நான் கைவிட்டுவிடவில்லை.

அமைதியாக இருந்து கொடுமையோடு போராடினேன். "தெய்வமே, என்னை இவர்கள் அடித்துக் கொலை செய்ய விட்டு விடாதே. அதனால் என்ன நன்மைதான் இருக்க முடியும். ஆண்டவரே, எனக்கு உதவும்" என்று வணங்கினேன்.

அலாபமாவிற்கு அன்று காலையில் உற்சாகத்தோடு பேமிங்காமிலுள்ள என் வீட்டிலிருந்து 50 மைல் கடந்து காரில் ஓடிவந்தேன். நல்ல நண்பராகியமிஸ்டர்குயினே என்னை அழைத்து வந்தார்.

பல்கலைக்கழக நிர்வாகக் குழுவினர் என்னை ஒரு மாணவியாக அனுமதித்தனர். ஆனால் விடுதி வசதியும், உணவும் அங்கு தர மறுத்து விட்டனர். வேறு வழியின்றி நான் ஏற்றுக் கொண்டேன்.

ஒன்பது மணிக்குப் பத்து நிமிஷங்களிருக்க நாம் அங்கு சேர்ந்தோம். அங்குள்ள புத்தக சாலைக்கு மிஸ்டர் குயின் என்னை அழைத்துச் சென்ற போது யாவும் நலமே நடைபெறப் போகிறது என நான் எண்ணிக் கொண்டேன்.

மூன்று நான்கு நாட்கள் மிகப் பொறுமையோடு கழித்தேன். எல்லாம் அமைதியாக அடங்கிவிட வேண்டும் என ஞாயிறு பூராவும் கிறிஸ்தவ ஆலயத்தில் வழிபாடு செய்தேன். ஆனால் என் தோத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

கல்லூரிக்கு அமைதியாகக் காரை ஓட்டிச் செல்லும் போது இரு மருங்கும் வரிசையாக வெறிகொண்ட மாணவர் கூட்டம் நிற்பதைக் கண்டோம். பெரும்பாலோர். ஆண்கள் பெண்களும் இருந்தனர். வலது புறத்தே கூக்குரல் கேட்டது. என்னுடன் சம்பந்தமானது என நான் முதலில் எண்ணவில்லை. ஒரு மாணவன் என்னைக் காட்டிக் கூக்குரலிட்டான். அவன் அகத்தைமுகம் காட்டியது. மிருக வெறியை அங்கு கண்டேன்.

வகுப்பறையின் எதிரே இறங்கி படிக்கட்டின் வழியே மேலே ஏறினேன். ஒரு இளைஞன் வழிமறித்தான். மன்னிக்கவும் என்று கூறியபடியே திரும்பிப் பாராது மேலே சென்றேன். அவன் ஏதோ உளறிக் கொண்டிருந்தான்.

சில நிமிஷங்கள் கழிந்தன. பூகோளப் பேராசிரியர் சோர்ந்த முகத்தோடு வந்தார். அவர் கதவைச் சாத்தியபோது வெளியே பயங்கர சத்தம் கேட்டது. பேச்சுகள் தெளிவாகக் கேட்கவில்லை. ஆனால் உணர்ச்சி வெறியை உணர முடிந்தது.

வெறி என் எதிரே தாண்டவமாடுவதைக் கண்டேன். நான் சஞ்சலப்பட்டேன்.

பாடம் முடிவடையும் போது திருமதி கீலே என்னிடம் வந்தார். "உன்னைப் பின்புற வழியாகக் கூட்டிச் செல்ல வேண்டியுள்ளது. வெளியே வெறி கட்டுக்கு மீறிவிட்டது. ஆபத்து" என்று கூறினர்.

பின்புற வழியே அவர்களைத் தொடர்ந்தேன். ஆனால் மாணவர்கள் இதை ஊகித்தறிந்துவிட்டார்கள். வெளியே காத்துக் கொண்டு நின்றார்கள். வெளியே இறங்கியதும் கல் எறியத் தொடங்கினர்கள். முட்டைகளும் வீழ்ந்தன. ஓடிப்போய் காரில் ஏறிக் கொண்டோம். கதவுக் கண்ணாடிகளில் எறிகள் வீழ்ந்தன. கண்ணாடி நொருங்கியது.

நான் திகிலடைந்தேன். இருதயம் படபடத்தது. 'இப்படி எத்தனை நாள் பொறுத்திருக்க முடியும்' என்று நடுங்கியபடியே எண்ணிக்கொண்டேன்.

எனக்கு ஏதாவது சம்பவித்தால் என் இனத்தைச் சார்ந்த மற்றொருவர் என் இடத்தை எடுத்துக்கொள்வார் என்பதை எண்ணினேன்.

இது என் போராட்டமல்ல. என் இனத்தைச் சேர்ந்தவர்களின் போராட்டம்.

"இது ஒரு சோதனையே. தேவனின் உதவியோடு தலை நிமிர்ந்து நில்" என்று என்னுள் கூறிக்கொண்டேன்.

கூக்குரலிட்டவர்களை ஏமாற்றிக்கொண்டே வளைந்து வளைந்து காரை ஓட்டி திருமதி கீலே எனது அடுத்த பாடம் நடைபெற வேண்டிய வகுப்பறைக் கட்டடத்திற்கு அழைத்து வந்துவிட்டார். அண்மையில் எவருமில்லை.

திடீரென ஒரு கூட்டம் ஓடி வந்தது. என் வலப்புறத்தே எறிபட்டது. என் சட்டையின் மேல் ஒரு முட்டை உடைந்து வழிந்தது. என்னைப் பிடித்து வகுப்பறைக்கு அழைத்துச் சென்றனர்.

என் வாழ்வில் முன்னெருபோதும் இப்படியாக நான் பதறியதில்லை.

யாரோ கதவை அடைத்துப் பூட்டிவிட்டனர். நான் பதற்றத்தோடு உட்கார்ந்தேன்.

அப்போதுதான் அந்தக் குரல்கள் கேட்டன. "அவளைக் கொல்லுங்கள். வெளியே இழுத்து வந்து கொலை செய்யுங்கள்"

வகுப்பை வழமைபோல நடத்த முயன்றனர். மாணவர்கள் என்னைப் பார்க்காது இருக்க முயன்றனர். எவரும் கதைக்கவில்லை. ஏதோ சம்பவத்தை எதிர்பார்த்து இருந்தனர்.

"அந்த நீக்ரோ எங்கே" என்ற குரல் இடையிடையே கேட்டது. என்உடல் குளிர்ந்தது.

ஒரு மணிவரையில் திருமதி கீலே யாவும் ஓய்ந்து விட்டதாக எண்ணினார். பொலீஸ் காரை நோக்கி நாம் மெதுவாக நடந்தோம்.

"அங்கே போகிறாள்" என்ற சத்தம் ஒலித்தது.

வெறுப்பும் வெறியும் அவர்கள் முகத்திலே குடிகொண்டிருந்தது. என்னை நோக்கி வந்துகொண்டிருந்தனர். ஒரு பாறாங்கல் என் தலையின்மேலால் பறந்தது. காரின் பின் சீட்டில் கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டே நான் உட்கார்ந்தேன். கார் ஓடியது.

வெறிக் கூட்டத்தைத் தாண்டிவிட்டோம். அப்போதுதான் என் இனத்தவரைக் காண நான் தப்பிப் பிழைத்துவிட்டேன் என்று நினைத்தேன்.

பயங்கர நாள் கழிந்தது. ஆனால் அதுதான் போராட்டத்தின் ஆரம்பம் என்பதை உணர்ந்தேன்.

"பல்கலைக் கழக நிர்வாகக் குழுவினரிடமிருந்து ஒரு தந்தி வந்தது.

பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஆசிரியர்கள், மாணவர்களது பாதுகாப்பை மட்டுமல்ல உம்முடைய பாதுகாப்பையும் முன்னிட்டு கல்லூரியிலிருந்து தற்காலிகமாக உம்மை நிறுத்தி வைக்கிறோம். மறு அறிவித்தல் தொடரும்"

சட்டப் போராட்டம் இப்போது தொடர்ந்துள்ளது. என் நிலையையும், அமெரிக்காவின் தென் பகுதியைச் சேர்ந்த மாகாணங்களிலுள்ள கல்லூரிகளில் நுழைவு அனுமதி பெற்ற மற்றும் என் இனத்தவர்க

(11-ம் பக்கம் பார்க்க)

சிங்களம் வேண்டும் தலைவரைத் துரத்து!

'எங்கள் தாய்மொழி சிங்களம்' என்று
சங்கம் வைத்துப் பொங்கினர்; நாளை
ஆளவந்தார் தாளிடை குந்தி
வாழலாம் என்ற மூளையின் போக்கோ!
'சிங்களம் மட்டும்'—சிறுபாலார்க்கோர்
குட்டைநோ யெனக் கொள்வீராக!
உறுப்பொவ் வொன்றுய் ஒறுத்திடும், பின்னர்
உயிரைத் தனது பயிராய்த் தின்னும்!

எம்மவர் திரண்டு இனிதுற வாழ்ந்த
அடிநிலந்தோறும் குடியேற்றத்தின்
இடிவிழுந்தாச்சு! இன்று அன்னர்
ஒடிந்து சிதறி உருக்குலைந்தவராய்
மானங்காக்க வானேக்கின்றார்!
நாளை அன்னர் வாழ்வென்னாகும்...?
வந்தவர் கொள்கை சிந்தையிலேற
செந்தமிழ் சாயும்! சிவநெறி-இஸ்லாம்
வெந்திட, விகாரை வீதிகள் மலியும்!

'சிங்கள நாட்டில் தங்கிவாழும்
எம்மவரெல்லாம் நிம்மதியாக
இருக்கின் ரு'ரென இயம்புவீ ராயின்
அன்னவரெல்லாம் ஆயிரம்பேரிடை
ஐந்து பத்தாய் அமைந்திருக்கின்றார்.
அந்த அமைப்பே இந்த லங்கா
எங்கும் ஆவதை தங்கள் நெறியென
நாட்டிய பின்னர் நீட்டுவர் வாலை!

இன்று தமிழைத் தின்றிடச்சிறும்
எருமை நுழைய இசைவீரா யின்
வாழ்ந்த வீட்டை, வழங்கிய மொழியை
மேய்ந்த எருமை ஒய்ந்திருக்காது!
தழுவிய நெறியும், தலைமுறைகாத்த
விழுமிய பண்பும் விழுங்கியே தீரும்,
எனவே;
'எங்கள் தாய்மொழி சிங்களம்' என்ற
இழவு சூழ்தீர்ப்பை இன்றே கொளுத்துக!

புலிநகர் இளைஞர் பொன்னிலாமகளிர்
பொங்கியெழுந்து. புயலெனக்கிளர்ந்து
எங்கும் உணர்வை ஏற்றுக, திரள்க!
'சிங்களம் எங்கள் தாய்மொழி' என்ற
சங்கத்தலைமைத் தீர்ப்பை, அன்றேல்
தலைமையைத் துரத்தும் நிலைமையை ஆக்கு!

எம். எம். சாலி
(புரட்சிக் கமால்)
ஏறூர்

29—2—56

திடுக்கிடும் சம்பவங்களுள்ள
'ஹி.ஐ.டி.சந்துரு'
துப்பறியும் நாவலை
"ஆனந்த விகடனி"ல் படியுங்கள்!

தலைவலிக்கு
ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்

உபயோகத்திலுள்ள நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது. மேலும் இத்தைலத்தின் உபயோகத்தில் கண்சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண்அரிப்பு, கண்பார்வைகுறைவு, கண்கூச்சம், கண்ணிலிருந்து பீளை வடிதல், கண்வலி, கண்குத்து, வெள்ளெழுத்து, ஒருத்தலைவலி, கைகால்தேகளரிச்சல், மண்டையிடி, மூலச்சூடு, அஸ்திகாங்கை, கெர்ப்பச் சூட்டால் உண்டாகும் திரேககாந்தல், காதுநோய், காதுசெவிடு, காது இரைச்சல், காதில் சீழ்வடிதல், பீனிசம், தடுமல், மூக்கிலிருந்து நீர்வடிதல், மயக்கம், தலைமயிர் உதிர்தல், செம்பட்டமயிர், பித்தநரை முதலியவைகளை ஆச்சரியமாய் குணம் செய்யும். கூந்தல் நன்றாய் வளரும். இத்தைலத்தை உபயோகித்த எவரும் குணமில்லை என்று சொல்ல முடியாது. ஆகையால் நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். உண்மை விளங்கும்.

புட்டிக்கு ரூ. 3-00 தபால் செலவு சதம் 85.
யாழ்ப்பாணம் சோல் ஏஜண்ட்:
எஸ். சுப்ரமணியம் அன் கோ.,
53, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்

ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புத் தபால்:

கிழக்கிலங்கை கண்டறியாத கடும் வரட்சியும் தொற்று நோய்களும்

அநியாய நாட்டில் மழை பெய்ய வேண்டாமெனப் பிரார்த்தனை

இலங்கையெங்கும் ஏற்பட்ட கடும் வரட்சியால் கிழக்கு மாகாணம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. சுமார் ஒரு லட்சத்திற்கு அதிகமான வயல் நிலங்களும், பெருவாரியான காய்கறித் தோட்டங்களும், தென்னந் தோட்டங்களும் பாதிக்கப் பட்டதோடு பொது மக்களும் குறிப்பிடக் கூடிய அளவு பாதிக்கப்படுகின்றனர். ஏழைக் கமக்காரர்கள் தங்களிடமிருந்த பணமெல்லாவற்றையும் கொண்டு வேளாண்மை செய்தார்கள். பருவமழை சதிசெய்தமையினால் விவசாயிகள் உண்ண உணவின்றித் தவிக்கின்றனர். ஒரு சிலர் ஒரு சமயம் தற்கொலை செய்தாலும்கூடச் செய்வார்கள் எனக் கூறப்படுகிறது. நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கப்படவேண்டுமென்று இப்பகுதி மக்கள் சமூகசேவை மந்திரி காரியாலயத்தின் கவனத்திற்கு கொண்டுவந்த போதிலும் இன்றுவரை எவ்விதமான நிவாரணமும் அளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதனிடையில் பொதுத் தேர்தலில் போட்டியிடக் கிளம்பியுள்ள அபேட்சகர்கள் என்றுமில்லாத அக்கறையோடு உணவு விவசாய மந்திரி காரியாலயத்திற்கும், பிரதமரின் கவனத்திற்கும் தந்திக்குமேல் தந்தி அடிக்கிறார்கள். "கிழக்கு மாகாணப் பகுதிக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டுமென்று" ஆளுல் அவர்கள் முயற்சியும் இதுவரை பயன் அளித்ததாகத் தெரியவில்லை.

இப்படிக் கடுமையான கோடை கிழக்கு மாகாணத்தின் சரித்திரத்திலே ஏற்பட்டதில்லையென்று அனுபவம் வாய்ந்த பலர் கூறுகிறார்கள். மழைக்காக ஆலயங்களிலும், மசூதிகளிலும் விசேஷ பொங்கலும் பூஜையும் பிரார்த்தனைகளும்மாறி மாறி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இரு மொழிகளுக்கும் சமத்துவம் நிச்சயமாக அளிப்போம் என்று உறுதி கூறிவந்த சர்க்கார் கடைசி நேரத்தில் நீதி நேர்மையை இழந்து சிங்களத் தைமட்டும் இந்நாட்டின் அரசாங்கபாஷையென முடிவு செய்துவிட்டு ஒரு மொழியிருந்தால்தான் நீதி நேர்மை ஐக்கியம் தலை காட்டுமென்று மேடைகளில் முழக்கிவரும் அரசாங்க கட்சி இந்நாட்டில் இருக்கும் வரையும் மழை பெய்யக் கூடாதென்று ஒரு கோஷ்டியினர் பொது இடங்களில் பிரச்சாரம் செய்து வருவதோடு ஆலயங்களில் பூஜைகளும், பிரார்த்தனைகளும் நடத்தி வருகிறார்கள். இக் கோஷ்டியினர் கோரிக்கைக்கு தமிழ்ப்பேசும் மக்கள் போதிய ஆதரவு அளித்து வருகிறார்கள் என்பது ஞாபகமூட்டத்தக்கது. இக்கோஷ்டியினர் வெளியிட்ட ஒரு விசேஷ அறிக்கையில் "சிங்கள மொழிக்கும், சிங்கள அரசாங்கத்திற்கும் அடிமைப்பட்டு அல்லலுறுவதை விட நாட்டில் மழையில்லாது பசிபட்டினியால் மடிந்து மாள்வது சாலச்சிறந்தது. இன்றைய அரசாங்கம் ஒருபோதும் தமிழ் மொழிக்கு எந்தவிதமான பாதுகாப்பும் அளிக்கமாட்டாது என்பது நிச்சயம். இந்த நிலையில் தமிழ் பேசும் அரசியல் பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்துக்காகவும் பாடுபட முன்வருவார்களா என்பது சாத்தியமாகிக் கொண்டே வருகிறது. அவர்களுக்கு பட்டம் பதவி தேவையாக இருக்கும்போது மொழிபோனால் என்ன.....கிழக்குமாகாணத்திலுள்ள அரசியல் தலைவர்கள் பட்டம் பதவிக்கு முன்வரிசையில் நிற்பவர்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த காரியம். இப்படியிருக்கையில் தேர்தல் இருப்பதால்தான் நான் தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் உயிரைக்கூடத் தத்தம் செய்யத் தயார் என்று பொதுமேடைகளில் கூச்சல் போடும் ஒரு சில தலைவர்களுக்கு அரசாங்கம் வழங்கியுள்ள பட்டங்களை, பதவிகளை ஏன் தகர்த்தெறியமுடியாது. ஆளும் கட்சியினருக்கு காக்காய் பிடித்து பெற்றேர்களே பட்டங்கள், பதவிகள் இவைகளையெல்லாம் கையில் வைத்துக்கொண்டு அரசாங்கத்தை ஆபாசமாக பொது மேடைகளில் பேசும் தலைவர்கள் இருக்கும்வரை மழை பெய்யக் கூடாது. பொதுத் தேர்தலுக்காக தமிழ்ப்பேசும் மக்களை காப்பாற்றுபவர்கள்போல் நடித்து வருகிறார்கள். இவர்களில் ஒருவர் முன் ஒரு பொதுக் கூட்டத்தில் தமிழர்களின் வாலை வெட்டுவேன் என்று அரசாங்க கட்சியிலிருந்தபோது சவால் விட்டதை தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். இப்படியெல்லாம் சொன்னவர்கள் இன்று தமிழையும், தமிழ் இனத்தையும் காப்பாற்றுவோம் என்று சொல்வதை ஒருபோதும் நம்பவேண்டாம். கடையில் இன்று பட்டம் பதவி கொடுத்த அரசாங்கத்திற்கு பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக கட்சியில் இருந்து விலகி தமிழ் இனத்தைக் காக்க முன்வந்திருக்கிறோம் என்று சொல்லி ஆளும் கட்சியினர் முன்பு செய்த உதவிகளை எல்லாம் மறந்து அக்கட்சியை இப்போது அவதூறுகப் பேசுபவர்கள் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றதும் தமிழ் இனத்தை என்னமாதிரிப் பேசப்போகிறார்கள் என்பதை யூகித்துப் பாருங்கள்.....சமஷ்டிக் கட்சியின் சார்பாக வருகிறோம் என்று சொல்பவர்கள் தமிழ் இனத்தின் தீர்க்கதரிசியான திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் முன்னிலையில் பொது மக்கள் அறியச் சாத்திட்டு பொதுத்தேர்தலில் நிற்கவேண்டும் இப்படி இல்லாத பட்சத்தில் பொது மக்கள் எவரும் தங்கள் வாக்குகளை உபயோகிக்கக் கூடாதென்றும் அவ்வறிக்கைகூறுகிறது. இக்கோஷ்டியினர் சமஷ்டி ஆதரவாளர்களாக இருப்பதால் அவர்கள் பேச்சுக்கு பொது மக்களிடத்தில் போதிய ஆதரவு இருக்கிறது.

நாட்டில் பருவ மழையில்லாது கடுங்கோடையாக இருந்துவருவதால் பொது மக்களிடத்தில் பல்வேறு தொற்று நோய்கள் தலை காட்டியுள்ளது. இதுவரை நாலுபேர் கடும் வரட்சியால் ஏற்பட்ட மாரடைப்பு நோயால் மாண்டுள்ளதாக வைத்திய இலாகா அறிக்கையொன்று கூறுகிறது. கால் நடைகளுக்கு ஒரு புது விதமான நோய் தீவிரமாகப் பரவிக்கொண்டுவருகிறது. வரட்சியின் கொடுமையால் நாய்கள் வெறி கொண்டு கண்ட கண்ட இடமெல்லாம் இறந்துகிடக்கும் காட்சி இப்போது ஒரு சர்வசாதாரண காரியமாகிவிட்டது பொது மக்களிடையே தொற்று நோய்கள் தீவிரமாகப் பரவி

(12-ம் பக்கம் பார்க்க)

தமிழரசின் பொருளாதாரம்

"தமிழரசா? தனியரசா?" என்ற தொடரில் சுதந்திரனில் வெளியான கட்டுரைகள் தமிழ்ப்பேசும் மக்களின் ஒருமுகமான வரவேற்பைப் பெற்றனவென்பது அவர்களிடமிருந்து கிடைத்த பல பாராட்டுக் கடிதங்கள் மூலம் தெரியவந்தது. பாராட்டுகள் தெரிவித்த அனைவருக்கும் கட்டுரை ஆசிரியர் தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறார்.

அடுத்த பிரசுரம்

★ தமிழரசின் பொருளாதாரம் என்ன?

★ தமிழரசு ஏற்பட்டால் நாடு தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் பொருளாதார பலம் அதற்குண்டா?

★ தமிழரசில் சேரும் வரண்ட பிரதேசங்களான வடக்கு கிழக்கு மாகாணங்களும் இதர பகுதிகளும் அரசாங்க உத்தியோகங்களை நம்பியிராமல் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்துகொள்ளவழியுண்டா?

இந்த வினுக்கள் பலருடைய மனதைக் குழப்பிக்கொண்டிருக்கின்றன

இவற்றிற்கு பொருளாதார சாத்திரத்தில் விற்பன்னரான ஒரு நிபுணர் ஒரு பொருளாதார ஆராய்ச்சிக் கட்டுரைத் தொடர்மூலம் பதிலளிக்கிறார்.

அடுத்த வாரம் ஆரம்பக் கட்டுரையை எதிர்பாருங்கள்.

—ஆசிரியர்.

வட பகுதியில்

வீதிப் பாதுகாப்பு பிரசாரம் சிங்களத்தில்

வடபகுதியில் வீதிப்பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் பற்றிய பிரசாரம் ஆங்காங்கு அதி விமரிசையாக நடந்து வருகிறது. ஆனுல் பிரசார வெளியீடுகளெல்லாம் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே காணப்படுகின்றன. தமிழ் மொழிக்கு இடமளிக்காத இப்பிரசாரப் பிரசுரங்களையெல்லாம் பொது மக்கள் வேண்டா வெறுப்பாகப் புறக்கணித்து வருவதில் ஆச்சரியமெதுவுமில்லை.

சமீபத்தில்பருத்தித்துறையில் நடந்த மேற்படி வீதியொழுங்குப் பிரசாரமும் தொண்டர்படை மகாநாடும் வெறும் கேலிக்கூத்தாகவே காணப்பட்டது. அரசாங்கத்தின் கௌரவப் பட்டங்களை எதிர்பார்த்து காசைக் கரியாக்கும் சில கனவான்கள் இந்தக் கொண்டாட்டத்தில் நன்கு பயன் படுத்தப்பட்டனர். ஆடம்பரப் பந்தல், மாலை முதலானவற்றுக்குச் செலவிட்ட பணத்தை வைத்துக்கொண்டு கிராம முன்னேற்ற ஆக்க வேலைகளுக்குப் பயன் படுத்தியிருக்கலாமே யென்று சிலர் நேரடியாகவே குறை கூறினர்.

இந்தக் காலத்தில் சக்கரம் பிடிக்கத் தெரிந்தவர்கள் யாவரும் மோட்டார் வண்டி ஓட்ட அனுமதிப்பத்திரம் பெற்றுவிடுவது புதிய புதிராக இருக்கிறதென்று ஒரு பொலீஸ் அதிகாரியே குறிப்பிட்டு மகாநாட்டில் பேசியதானது அரசாங்கத்தின் கைலஞ்ச ஊழலை அம்பலப்படுத்துவதுபோலிருந்தது.

திருகோணமலைத் தபால்:

பிரசாரக் கூட்டங்கள் ஆரம்பமாகிவிட்டன "டாக்டர் வாபஸ் பெற்றார்"

சென்ற சனியும், ஞாயிறும் திருகோணமலை தமிழ் அரசுக் கட்சியினரின் பிரச்சாரக் கூட்டங்கள் பல திக்குகளிலும் நடைபெற்ற வண்ணமேயிருந்தன. சாம்பல்தீவு, நிலாவெளி, குச்சவெளி, திரியாய், புல்மோட்டை போன்ற ஊர்களில் சூறுவளிச் சுற்றுப் பிரயாணத்தில் இந்தக் கூட்டங்கள் நடைபெற்றன. திருவாளர்கள் வன்னியசிங்கம், இராஜவரோதயர், கந்தசாமி, ஜெயசிங்கம், பரஞ்சோதி, பண்டிதர் சச்சிதானந்தம், ஜனுப் மசூர் மௌலானு, அகமது, பதுறுதீன் முதலியோர்கள் கலந்து கொண்டனர். எங்கு சென்றாலும் மக்கள் பெருமிதத்துடன் வரவேற்று கூட்டத்திற்கு ஆதரவு கொடுத்தார்கள். குறிப்பாகளங்கும் அமோக ஆதரவு பொங்கி வழிந்தது என்றுதான் கூறவேண்டும்.

திருகோணமலைத் தொகுதிக்கு தானும் ஒரு அபேட்சகராகவர இருந்ததாகவும் சித்திரவேலு அவர்கள் விடத்தைவிட்டு அகன்றது தான் இம்முறை தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை என்றுகூறிவிட்டார். சென்ற ஞாயிறு பிற்பகல் பலவட்டாரங்களைச் சேர்ந்தபொது மக்கள் அடங்கிய கோஷ்டி ஒன்று டாக்டர் அவர்கள் இல்லத்திற்கு சென்று "இன்று நாடு இருக்கும் நிலையில் நீங்கள் தேர்தலுக்கு நிற்பதும் எங்களுக்குள்ளே பிளவு ஏற்படுவதும் அவ்வளவு விரும்பத்தக்கதல்ல என்று அமைதியாக—கண்ணியமாக எடுத்துரைத்தனர். டாக்டர் அவர்கள் பொதுமக்களாகிய உங்களின் விருப்பத்திற்கு மாறுகதான் ஒன்றும் செய்யப்போவதில்லை என்றும் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி, தான் தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை என்றும் உறுதி அளித்தார். இந்த பதிலைக் கேட்ட குழுவினர் டாக்டர் அவர்களுக்கு தங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு 'டாக்டருக்கு ஜே' [illegible] எல்லோரின் நன்மதிப்பைப் பெற்றிருந்த டாக்டர் இந்த சிறு விஷயத்தால் ஒரு சாரார் மிகவும் வேதனையுடன் எதிர்க்க வேண்டிய இக்கட்டான நிலை இதுவரை ஏற்பட்டிருந்தது. ஆனல் அவர் தேர்தலுக்கு நிற்பதில்லை என்ற முடிவு வெளிப்பட்டதும் டாக்டர் அவர்களை எதிர்க்க வேண்டிய நிலையில் இருந்து விடுபட்ட சந்தர்ப்பத்தை எண்ணி பலர் பரவசமடைந்தனர். தமிழருக்கு இன்று ஏற்பட்டிருக்கும் நிலைமையை நன்கு ணர்ந்து கண்ணியமாக ஒதுங்கிக் கொண்டது அவரின் பெருந்தன்மையை எடுத்துக் காட்டுவதுடன் மேலும் அவர்பால் பன்மடங்கு பரிவும் அன்பும் கொள்ளச் செய்திருக்கிறது. பொதுவாக இந்த இடைக்காலத்தில் அவர்பால் ஏற்பட்டிருந்த வெறுப்பு உணர்ச்சிகள் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிட்டது என்றுதான் கூறவேண்டும்.

—சேரன்.

திடுக்கிடும் சம்பவங்களுள்ள

'ஹி.ஐ.டி.சந்துரு'

துப்பறியும் நாவலை

"ஆனந்த விகடனி"ல் படியுங்கள்!

கோபால் பலபொடி
பல்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளை குணமாக்குகிறது.

ஸோல் ஏஜண்ட்ஸ்:

M. A. R. S. ராஜவேல்
நாடார் & கோ.,
34, செட்டியார் தெரு,
கொழும்பு.

தலைமைக் காரியாலயம்:

193, காலி ரோட்,
கொள்ளுப்பிட்டி
கொழும்பு-3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களம் அரசாங்க பாஷையானதும் தமிழ் ஆசிரியர்களின் நிலை என்ன? உயர்ந்த சம்பளத்திற்குப் போராடும் இவர்கள் உத்தியோகம் இழந்தே தத்தளிக்கப் போகிறார்கள்.

எதிர் வரும் பொதுத் தேர்தலில் தமிழ் ஆசிரியர்களின் நிலை என்ன?

ஆட்சி அதிகாரம் பெறுத மொழி அழிந்தொழிவது திண்ணம்

(எஸ். வி. பி. பிள்ளை தமிழ் ஆசிரியர்.)

அந்நிய ஆட்சியில் ஒதுக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்சங்கங்கள், விஞ்ஞான நூல்களையோ, அல்லது இலக்கிய வரலாறுகளையோ, ஆக்கித் தமிழ் மொழி வளர்க்க முடியாது போனலும், அம் மொழிகளை அழிவிலிருந்து காப்பாற்றி வந்தன. அந்நிய ஆட்சி ஒழிந்து இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது. இச் சுதந்திரம் தமிழரையும் தமிழ் மொழியையும் அழித்துச் சிங்களச் சர்வாதிகாரத்தை ஏற்படுத்தியது. அதிகார வர்க்கத்தினரால் தமிழ் மொழியை இலங்கையிலிருந்து அழிக்கக் கூட்டப்பட்டது களனி மகாநாடு. அம் மகாநாட்டிலே பேசிய சேர். ஜோன் கொத்தலாவலை அவர்கள் 1948-ம் ஆண்டிலிருந்தே சிங்களத்தை ஆட்சி மொழியாக்கக் கருமம் ஆற்றி வந்ததாகக் கூறினர். இவ்விதம் நெடுங்காலத் திட்டத்துடன் தமிழ் மொழியை அழிக்க முயற்சித்த இன்றைய யூ. என். பி. அரசாங்கத்திற்குத் தமிழாசிரியர் சங்கங்கள் நெடுங்காலமாக ஆதரவளித்துவந்தன. 1952-ம் ஆண்டில் இலங்கையில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அவ்வாண்டில் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம், "தேர்தலிலே தமிழாசிரியர்சள். அரசாங்கக் கட்சி அபேட்சகர்களையே ஆதரிக்கவேண்டும்" என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி நடை முறைக்குக் கொண்டு வந்தது. இதன் மூலம் தமிழ் இனத்தையும் தமிழ் மொழியையும், ஒழித்துக்கட்டப் பல திட்டங்களை வகுத்திருந்த அரசாங்கத்தின், அடிவருடிகளாக இருந்த தமிழ்த் தலைவர்களைத் தமிழ் ஆசிரியர் சங்கங்கள் குருட்டுத்தனமாய் ஆதரித்தன. இதன்பயனுய் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்த தமிழ்த்தலைவர்கள் வெற்றி பெற்றனர். நாளடைவில் தமிழ் மொழியும், தமிழ் இனமும் ஒதுக்கப்பட்டன. தமிழை ஒதுக்குவதில் ஒத்தாசை புரிந்து, பதவியென்ற பஞ்சணை மெத்தையில் மயங்கிக்கிடந்த தமிழ்த் தலைவர்களுக்குத் தேர்தல் இடியேறு காதில் கேட்டது. இதன் பின் தான் அவர்கள் விழித்தனர். தமிழர்கள் தம்மைக் கைவிட்ட நிலை கண்டு திகைத்தனர். கடைசியில் அரசியலின் அந்தகாரத்தில் குப்புற விழுந்தனர். இவர்களின் வீழ்ச்சி அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க அதிகாரபீடத்திற்குச் சோகத்தைக் கொடுத்தது. எஜமானின் மேசையிலிருந்து விழும் துண்டுகளை எதிர் பார்த்திருந்த அவர்கள் தமிழ் மொழியைக் காப்பாற்ற எவ்வித முயற்சியும் எடுக்காமல் மௌனியாக இருந்தனர். இந்நிலை தமிழ் மொழிக்கு ஏற்பட்ட துர் அதிர்ஷ்டமாகும். அடுத்த தேர்தல் அண்மித்துவிட்டது. ஆகவே திரும்பவும் மேசையிலிருந்து விழும் அப்பத் துண்டுகளையே அவர்கள் எதிர்பார்க்கப் போகிறார்களா?

தென் இலங்கையில் சிங்கள மொழியை அரியாசனத்தில் அமர்த்த முன் நின்றவர்கள் சிங்கள ஆசிரியர்களே. அவர்களுக்கும் சிங்கள ஆசிரியர் சங்கத்திற்குமுள்ள கடந்த காலத் தொடர்பை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

1946 ம் ஆண்டு ஆசிரியர்களின் சம்பளப் பிரச்னை தலையெடுத்தபொழுது அகில இலங்கையிலும் உள்ள தமிழாசிரியர்கள் தமக்குள்ளே வலிமைபொருந்திய சங்கத்தைக் கொண்டிருக்கவில்லை. தமது பெலவீனத்தை உணர்ந்த அவர்கள் அகில இலங்கையிலும் கிளைகளை ஸ்தாபித்துத் தமது ஆசிரிய சங்கத்தைப் பெலப்படுத்த முயன்றனர். அக்காலத்தின் ஆசிரியர்கள் தமிழின் நிலையை உணரவோ அல்லது அந்தஸ்தை அரசியல் ரீதியாகஅடையவோபெலமற்றவர்களாக இருந்தனர். நாளடைவில் பல பல ஆசிரியர்களின் விடாமுயற்சியினுல் பலமுள்ள தமிழ் ஆசிரியர் சங்கம் அமைக்கப்பட்டது. அதுவுமன்றிச் சிதறிக்கிடந்த சிங்கள ஆசிரியர் சங்கத்தையும் ஒற்றுமையாக்கிப் பலம் பொருந்திய ஸ்தாபனமாக்கவும் தமிழாசிரியர் உதவினர். பின்னர் ஆங்கில சிங்கள, தமிழ் ஆசிரியர் சங்கங்கள் ஒன்றுகச் சேர்ந்து முக்கூட்டு சபையை அமைத்து ஆசிரியர்களின் உரிமையைப் பெற முயன்றனர். ஆனல் ஆங்கில ஆசிரியர்கள் எப்பொழுதும் தமக்கு உயர்ந்த அந்தஸ்தும், உயர்ந்த சம்பளமும் வேண்டுமென்ற பிடிவாதங் காட்டியதினுலும் அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட சம்பளத்திட்டங்களில் சுயபாஷை ஆசிரியர்களும் ஆங்கில ஆசிரியர்களும் வேறுபட்டதினுலும், முக்கூட்டு சபை சீர்குலைந்தது. அக்காலத்தில் சிங்கள, தமிழ் ஆசிரியர்கள் தமக்குள்ளே ஒரு ஐக்கிய முன்னணியை அமைத்தனர். 1950ம் வருடம் கொழும்பிலே உள்ள சகிராக்கல்லூரியில் முதல் முதல் சிங்கள, தமிழ் ஆசிரியர்களுடைய சுயமொழி ஐக்கிய முன்னணி அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பேசியவர்களில் ஒருவர் சிங்களத் தேசிய ஆசிரியர் சங்கக் காரியதரிசி திரு பீட்டர் டி. சில்வா என்பவராகும். அவர் தமது பேச்சில் கூறியதாவது திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் அரசாங்கத்துடன் சேர்ந்து சிங்கள வருக்காகவும், தமிழருக்காகவும் உழைப்பதுபோல நாமும், ஒன்று சேர்ந்து தமிழ் சிங்கள ஆசிரியருக்காக உழைப்பது மாத்திரமன்றி சிங்கள, தமிழ்ப்பாஷையை அரசாங்கப்பாஷையாக்கப் பாடுபடுவோம். என்பதாகும். இக் கூட்டம் நிறைவேற்றிய தீர்மானங்களில் தமிழும், சிங்களமும் அரசாங்க பாஷையாக இருக்க வேண்டும் என்பதும் ஒன்றுகும். இக் கொள்கையையே தமிழ், சிங்கள, ஆசிரிய சங்கங்கள் பின்பற்றிவந்தன. இந் நிலையில் இலங்கை அரசியலில் எத்தனையோ மாற்றங்கள் உண்டாகி சேர் ஜோன் கொத்தலாவலை அவர்கள் பிரதம மந்திரியானர்.

முதல் முதலாக பிரதம மந்திரி சேர் ஜோன் கொத்தலாவலை யாழ்ப்பாணம் சுற்றுப் பிரயாணம்செய்தபோதுகொக்குவிலில் தமிழும்—சிங்களமும் அரசாங்க பாஷையாக இருக்கக் கூடிய தாய் சட்டத்தை மாற்றி அமைப்பேன். என்று கூறினர். இக் கூற்றை முதல் முதல் எதிர்த்து பிரமாண்டமான எதிர்ப்புக் கூட்டத்தை கொழும்பு நகர மண்டபத்தில் நடத்தியவர் சிங்கள தேசிய ஆசிரிய சங்கக் காரியதரிசி திரு பீட்டர்சில்வாவாகும். அதிலிருந்து சிங்கள ஆசிரிய சங்கங்கள் சிங்களப் பாஷையையே அரசாங்க பாஷையாக்க வேண்டுமென்று நாடு முழுதும் இளர்ச்சி ஆர்ப்பாட்டங்கள் செய்தன. துட்டகைமுனு சிலைக்கு முன் சென்று தமிழ் மொழியை அழிக்க சத்தியம் செய்தார்கள்.

இவ்விதம் தென் இலங்கை முழுதும் சிங்கள ஆசிரியர்கள் பாஷாபிமானம் கொண்டு வெறிபிடித்து ஆடித் திரிகையில், மொழி விஷயத்தில் தமிழாசிரியர்களின் சங்கங்கள் பெட்டிப் பாம்புபோல் அடங்கியிருந்தன. தமிழாசிரியர்கள் சிங்கள ஆசிரியர்களைப்போல வெறிபிடித்து அலைய வேண்டியதில்லை. ஆனல் ஒரு மொழிக் கொள்கையில் தமது எதிர்ப்பை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் காட்டியிருக்கலாம். சிங்களத்திற்கும் தமிழிற்கும் சமஅந்தஸ்து வேண்டும் என்ற பழைய தீர்மானத்தை மீண்டும் நிர்வாக சபையில் நிறைவேற்றிவிட்டு வாழாவிருப்பது முற்றிலும் பொருத்தமற்றதாகும். இந் நிலையில் தமிழாசிரியர் சங்கம் தமிழை வளர்க்காவிட்டாலும் அதனை அழிவிலிருந்து பாதுகாக்க முற்படவில்லையென்றே எதிர்காலச் சந்ததி கூறும்.

தமிழாசிரியர் சங்கங்கள், பேசாமடந்தையாக விருந்து சிங்கள ஆசிரியர்களுடன் சேர்ந்து தமிழ் சிங்கள ஆசிரியர்களுடைய சம்பளத்தை உயர்த்தலாம் என்று எண்ணுகின்றன. இது மிகவும் தவருன கருத்தாகும். தமிழ் எமது உயிர். உயிர் நீங்கிய பின் பணம் உயர்ந்தும் பயன் என்ன? அதுவுமன்றி சிங்களம் அரசாங்க பாஷையானதும் தமிழ் ஆசிரியரின் நிலையென்ன? ஆங்கிலம் அரசாங்க பாஷையாக இருந்த காலத்தில் ஆங்கில ஆசிரியர்களுக்கே உயர்ந்த வேதனம் அளிக்கப்பட்டது. இதேபோன்று சிங்களம் அரசமொழியானுல் சிங்கள ஆசிரியர்களுக்கே உயர்ந்த வேதனம் அளிக்கப்படும். தமிழ் ஆசிரியர்கள் குறைந்த வேதனத்துடன் மிகப் பெரிய வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சமாளிக்க வேண்டும்.

சிங்களம் அரசகருமமொழியானவுடன் பாதிக்கப்படுபவர்கள் அரசாங்க உத்தியோகஸ்தர் அல்ல, தமிழாசிரியர்களே. இன்று ஆங்கிலக் கல்லூரிகளாக விருப்பவையெல்லாம் ஒரு மொழி மாற்றத்தின் பின் சிங்களக் கல்லூரியாக மாறும். அப்பொழுது அங்குள்ள தமிழாசிரியர்கள் அனைவரும் படிப்படியாய் வேலை இழப்பர். வடகிழ் மாகாணங்களைத் தவிர்ந்த மற்றைய மாகாணத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளின் நிலை இப்பொழுதே ஆட்டங்காணத் தொடங்கி விட்டது. இப்பாடசாலைகள் காலகதியில் சிங்களப் பாடசாலைகளாக மாறுதிருக்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் கிடையாது. சிலாபம், நீர்கொழும்புப் பகுதி

(12-ம் பக்கம் பார்க்க)

திடுக்கிடும் சம்பவங்களுள்ள
'ஹி. ஐ. டி. சந்துரு'
துப்பறியும் நாவலை
"ஆனந்த விகடனி"ல் படியுங்கள்!

அறிமுகப்படுத்துகிறோம்

கலைஞர்: 43



மேடைப் பேச்சிற்கு ஒரு "புரட்சிக்குமரன்"

"கீரன்"

சிங்களமொழியே இலங்கையை ஆளவேண்டும் என்ற கர்ச்சனை கிளம்பும் இந்நாட்களில் "தமிழன் தரணியாளவேண்டும். அதற்குத் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் முடங்கிக் கிடக்கும் மூடக் கொள்கைகள் முறியடிக்கப்பட்டு பகுத்தறிவுப் பூங்காவாக எதிர்காலத் தமிழகத்தை மாற்றியமைக்கவேண்டும்" என்று முழங்குபவர் ஒருவரும் உள்ளார். அவர்தான் இன்று உங்களுக்கு அறிமுகமாகும் "புரட்சிக்குமரன்" என்ற புனைபெயர் படைத்த எப். ஜி. ஜெயசிங்கமாவார். 20 வயதை எட்டிப் பிடிக்கும் இவர் வெறும் எழுத்தாளர்மட்டுமல்ல?. 1953ல் நண்பரொருவருடன் சேர்ந்து "ஈழமுரசு" என்ற இதழையும், 1955ல் "போர் முரசு" என்ற இலட்சிய இதழையும் நடாத்திய பத்திரிகாசிரியருமாவார். புதுமைப்பித்தன் தமிழில் கூறுவதாலல் தமிழ்ப் பத்திரிகைகட்கு வழமையாக ஏற்படும் பொருளாதார கர்ப்பச் சிதைவு காரணமாக இவ்விதழ்கள் நின்று விட்டன.

ஆங்கிலத்திலும் தமிழிலும் திறமைபெற்ற "புரட்சிக்குமரன்" பல்கலைக் கழக நுழைவிற்குக் கற்றுக்கொண்டிருக்கிறார். இவர் இவ்விளம் வயதிற்குள்ளேயே ஆற்றிய செயல்கள் பல. சென்ற நான்கு ஆண்டுகளாக 200க்கு மேற்பட்ட மேடைகளில் சொற்பொழிவாற்றியுள்ளார். 150க்கு மேற்பட்ட கட்டுரைகளும் 10க்கு மேற்பட்ட கவிதைகளும் எழுதியுள்ளார். சுதந்திரன், வீரகேசரி, கலைவாணி ஆகிய இதழ்களில் இவை வெளிவந்தன.

ஈழத்தமிழ்க் கழகங்களின் கூட்டு மன்றத்தின் துணைச் செயலாளராகசென்ற நவம்பர் மாதத்தில் வெள்ளவத்தையில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்ச் சங்கங்களின் மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

என்னை எழுத்தாளனாக்கிய பெருமை சுதந்திரனையே சாரும்! என்று இவர் கூறுகிறார். ஆயினும் இவரது பேனு வன்மையிலும் நாவன்மையே மிகச் சிறந்தது என்று துணிபாகக் கூறலாம்.

கார்ல் மார்க்ஸ் முதல் பாரதிதாசன் வரையில் விரும்பிப் படிப்பதாகக் கூறும் இவ்விளைஞர் பகுத்தறிவுக் கொள்கையில் நாட்டம் கொண்டவர். மட்டக்களப்புத் தமிழரசு வாலிப முன்னணியிலும் ஊழியராக உள்ளார்.

இவருக்குப் பிடித்தவை: அறிஞர் அண்ணு, மேடைப் பேச்சு. பேச்சாளனுக்கு இருக்க வேண்டிய அம்சங்களை இவர் கூறுகிறார் கேளுங்கள்:

"தன் இதயத்தில் எழும் எண்ணங்களை நல்ல பாணியில் எடுத்துச் சொல்ல வேண்டும். பேச்சாளன் நிறையப் படிக்கவேண்டும். பிறர் கூறுவதைக் கேட்க வேண்டும். நாட்டிற்கு நலன் பயக்கவல்ல ஒரு இலட்சியத்திற்காக அவன் வாழவேண்டும். மக்களின் விருப்பறிந்து அவர்தம் [illegible]

VEL
வேல்
வேல் தைலம்
இது ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய சமயசஞ்சீவி. தலைவலி, ஜலதோஷம், வாதம், வாய்வு, பிடிப்பு, வீக்கம், ரத்தக்கட்டு, சூலுக்கு முதலிய வியாதிகளை ஆச்சரியமாய்க் குணமாக்கும்.
உபயோக விபரம் மருந்துடன் இருக்கிறது.
புட்டி 1-க்கு ரூ. 1-25 தபால் செலவு வேறு.
இலங்கை சோல் ஏஜண்டுகள்:
எம். ஏ. ஆர் எஸ். மனுவல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாலிய காதல் கதை:

அடிமையின் இருதயம்

மூலம்: ஜியாவனி பொக்காஷியோ ஆங்கிலத்திலிருந்து: எம்: செல்வன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

மறுநாள் வேவுகாரர் கூலி நியமித்தான். குகையின் உச்சியிலே கைஸ் காட்தோல் போர்வையுடனும் பிடிக்கப்பட்டு அரசனது முன்னிலையில் ரகசியமாகக் கொண்டு வரப்பட்டான். அரசனும் அவனைக் கண்டவாறெல்லாம் ஏசிவிட்டுத் தனது கண்ணுக்கெதிராகத் தனக்கு அவமானத்தை ஏற்படுத்தித் தான் செய்த நன்மைகளுக்கெல்லாம் முற்றும் எதிரான தீமைகளைத் தனக்கு விளைவித்திருப்பதாக அவனைக் குற்றம் சாட்டினான். ஆனால் காதலானது எந்த எஜமானனுக்கும் கீழ்ப்படியாத ஒரு சேவகன் என்றும் அதனால் தான் தான் இப்படிச்செய்ய நேர்ந்தது என்றும் கைஸ் காட் நியாயமாய் கூறினான். அவனை ஒரு அறையில்போட்டுப் பூட்டும்படி அரசன் ஆணையிட்டான்.

மறுநாள் அரசன் தன் மகளிடம் வந்தான். அவளுக்கோ நடந்த விஷயமொன்றுமே தெரியாது. அவளுடன் தனித்திருந்த சமயத்தில் கண்ணீர் சொரிய அவளைப் பார்த்து "என் குழந்தாய், எவ்வளவோ கௌரவமும் கற்பும் வாய்ந்த ஒரு பெண்மணி நீ என்று நான் கொண்டிருந்த நம்பிக்கை காரணமாகத்தான், உனது கணவனையல்லாத மற்றெருவனிடம் சென்றாய் என்பது உண்மையாக இருந்தபோதும் அதை நான் நம்பியிருக்கவும் மாட்டேன். ஆனால் நடந்ததை என் கண்ணால் காண நேர்ந்துவிட்டது. வெட்கம் கெட்ட உனது இந்த நடத்தை என்னை அளவற்ற சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. என் உயிர் உள்ளவரையும் இச்சோகவேதனை என்னை விட்டு அகலாது. இனி இவ்விதமான ஒரு மானங்கெட்ட செயலை நீ செய்ய எண்ணிய போதிலும் கூட நமது ராச சபையில் உள்ள இத்தனைப் பிரபுக்களையும் விட்டுவிட்டுத் தாழ்ந்த குலத்தில் பிறந்த இந்த ஏழையிடம் போயா நீ சகவாசம் வைப்பது? உன்னை என்ன செய்வதென்று எண்ண விடாமல் என்னைச் சோகம் கலக்குகிறது. என் மகள் பேரில் நான் கொண்டிருந்த அன்பானது அவள்மேல் இரக்கம் கொள்ளவே வைக்கிறது. ஆனால் லஜ்ஜைகெட்ட அவளது நடத்தையானது அவளைத் தக்கவாறு தண்டிக்கத் தூண்டுகிறது. கேடுகெட்ட உன் காதலனை என்னசெய்ய வேண்டுமென்பதில் எனக்குக் கிஞ்சிற்றேனும் தயக்கமில்லை. ஏற்கனவே அவனை இரும்புக் கதவுக்குள் போட்டு அடைத்து வைத்திருக்கிறேன். அவனது விதியும் என்னவென்பது எனக்குத் தெரியும். ஆனால் உன் விஷயமாகத்தான் எனக்கு. ஒன்றுமே தோன்றவில்லை உன்னை நான் மன்னிக்கப் போகிறேனே அல்லது என் கோபப்படி முடிவு செய்யப் போகிறேனே என்பதைத் தீர்மானிக்குமுன் நீ சொல்ல வேண்டியதை அறியவிரும்புகிறேன்" என்று கூறியவண்ணமே தலைகுனிந்து ஒரு பச்சைக் குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி அழுதான்.

தனதுகள்ளக்காதல்கண்டு பிடிக்கப்பட்டு கைஸ்காட் சிறைப்படுத்தப்பட்டான் என்பதை அறிந்த ஸிகிஸ்மோண்டா துக்கத்தினால் பல முறையும் கண்ணீர் வெள்ளம் பெருக்கினாள். ஆயினும் அவள் ஒரு உயர்ந்த குணபாவங்களுடைய ஒரு பெண்ணாதலால் அதிசீக்கிரத்திலேயே தனது துக்கத்தை அடக்கிக்கொண்டாள். அத்துடன் தன் காதலனை மீட்பதற்கான வழியாதும் இல்லையென்பதை அவள் அறிந்திருந்தபடியால் அவனது உயிரைக் காப்பாற்ற முயலுவதில்லையென்று உறுதிகொண்டு, அவனது உயிருக்காகத்தான் மன்றாடுவதில்லையென்றும் தீர்மானித்தாள். பின் கஷ்டத்தில் சிக்கிக்கொண்ட ஒரு பெண்ணைப்போலவோ, அல்லது தன் தவறுக்காகத் தன்னை நிந்திப்பவள் போலவோ இல்லாமல், சாந்தமும் நம்பிக்கையும் நிறைந்த குரலில் ஒரு துளி கண்ணீரும் வடியாமல் தன் தந்தையை நோக்கி "தந்தையே! நடந்ததை மறுப்பதற்கு ஒன்றும் இல்லை. அங்ஙனமே எங்களிடம் இரக்கங் காட்டும்படியும் உன்னை நான் கேட்கப்போவதில்லை. ஏனெனில் அது உபயோகமற்றதென்பதை நான் உணருகிறேன். அங்ஙனமே என்மேல் நீ கொண்டிருக்கும் அன்புக்காக உனது கோபத்தை நான் அவமதிக்கப்போவதுமில்லை. எனது கௌரவத்தை மட்டுமே நான் காப்பாற்ற விரும்புகிறேன். அதன்பின் என்னைத் தெரியப்படுத்திக்கொள்ள எனக்குத் தெரியும். ஆம். கைஸ்காட்டை நான் காதலித்தேன்; இனியும் காதலிக்கிறேன், சீக்கிரத்திலேயே மறையவிருக்கும் என் உயிர் உள்ளவரையும் அவனை நான் காதலிப்பேன். சாவுக்குப் பின்னரும் நாங்கள் உயிர் பெறுவோமேயாயின் அப்போதும்கூட அவனை நான் காதலிப்பேன் என்பதை இப்போதே உனக்குத் தெரிவிக்கிறேன். இவ்விளைஞனிடமுள்ள நற்குணங்களும் எனக்கின்னெருகாதலனைத் தேடுவதில் நீ கொண்டிருந்த அசிரத்தையும், என்னைப் பலவீனப்படுத்தும் பருவ உணர்ச்சியையல்லாது எனது காதலையே அதிகப்படுத்தியது. ஒருவகைப் பாறையாகவோ அல்லது இரும்புக் கட்டியாகவோ இல்லாத உணர்வுள்ள மனிதனே நீயாதலால், பருவ உணர்ச்சியும் காதலும் உன்மகளைப்போல் சொன்னபடியெல்லாம் கேட்காவென்பதை நீ உணர்ந்திருக்கவேண்டும். விருத்தாப்பியத் தசையை அடைந்துள்ள போதிலும் இளமையானது எவ்வளவுதூரம் மகாபலம் வாய்ந்தது என்பதை இனியும் நீ நினைவில் வைத்திருக்கவே வேண்டும். எவ்வளவுதான் போர்களிலும் சண்டைகளிலும் உன் இளமைப் பருவத்தை நீ கழித்தபோதிலும் ஆசையும் சோம்பலும் மனிதர்களை எவ்வளவு இலகுவில் அடிமைகளாக்கிவிடுகின்றனவென்பதை உணர உனக்கு அவ்வளவு கஷ்டமாக இருக்காது. அதுவும் சிறுபிராயத்தினரை இவை எவ்வளவு எளிதில் தம்வசமிழுத்துவிடுகின்றனவென்பதை அறியவும் உனக்கு எளிதாகவே இருந்திருக்கவேண்டும். அதே உணர்வுகள்தான் என்னையும் அடிமையாக்கின. கட்டிளம் பருவவயதினை நான் அடைந்துள்ளேன். ஆனபடியால் இந்தப் பருவ உணர்ச்சிகளுக்கு நான் இரட்டிப்பு மடங்கு ஆளானேன். எனது மணத்துக்குப் பின் அவை என்னை அதிகம் வாட்டின. ஆகவே அவற்றை எவ்விதத்திலாவது தணிக்க வேண்டியவளானேன். இத்தாகம் என்னில் காதல் தீயை மூட்டியது. ஒரு இளம் பெண்ணைப் பொறுத்தவரையில் இவை எல்லாம் ஆச்சரியப்படத்தக்கனவுமல்ல. மிகவும் அதிககாலமாக என் இயற்கைத் தொந்தரவுகளை நான் அடக்கி வந்தேன். ஆனால் எனது முயற்சியனைத்தும் முடிவில் பிரயோஜனமற்றுப்போயின. வேதனையை மேலும் என்னால் சகிக்க முடியாது என்பதை உணர்ந்ததும் எனது மானத்துக்கும் கௌரவத்துக்கும் பங்கமேற்படாவண்ணம் சகல ஏற்பாடுகளையும் செய்த பின்னரே, என்னை உருக்கிய பருவதாகத்தை ஒருவருக்கும் தெரியாமல் தணிக்க முற்பட்டேன். கைஸ்காட்டை நான் வெறும் அசம்பாவிதமாகக் காதலிக்கவில்லை. ராசப் பிரபுக்கள் அனைவரையும் நான் பரீட்சித்துப் பார்த்த பின்னரே அவனை நான் விரும்பினேன். அவனது ஜாதி, பதவி இவற்றைவிட அவனது நற்குணங்களே என்னை வசீகரித்தன. நீ சொல்லுவதுபோலிருந்து, என் காதலை செய்யவில்லை. வறுமையானது உலகப் பொருட்கள் இல்லாத குறைவேயன்றி புனிதத்தன்மைக்குத் தடையானதல்ல. இல்லாவிடில் அடிமைகளாயிருந்து விடுதலைபெற்றவர்களும், இழிசனங்களும் பெருஞ் செல்வம் ஈட்டியிருந்த காலத்தில் ஏழ்மையில் ஆழ்ந்திருந்த அரசரும் பிரபுக்களும் உயர்ந்தவர்களாகப் போற்றப்பட்டது எதனால்? மாட்டை மேய்த்தோ அல்லது காட்டை வெட்டியோ ஒருவன் பணக்காரனாகலாம். அப்படியே இப்போது கீர்த்தியுடன் செல்வம் பெற்று விளங்குவோரும் ஏதோ ஒரு நாள் நிந்திக்கப்பட்ட ஏழைத்தொழிலாளர்களாக மாறலாம்.

"என்னை என்ன செய்ய வேண்டுமென்று நீ கலக்க மடையவேண்டாம். என்னை நீ என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஏனெனில் நீ செய்யவிருக்கும் எதனையும் நான் எதிர்க்கமாட்டேன். உனது இந்தக் கிழவயதில் நீ ஒரு கொடியவனாயிருப்பது என்னவோ உன்னைப் பொறுத்த விஷயம். என் இரத்தத்தில் உன் கை பிரளவேணுமென்று நீ எண்ணியிருந்தாயாகில் அப்படிச் செய்யவேண்டாமென்று நான் மன்றாடுவேன் என்று நீ பயப்படத் தேவையில்லை. ஆனாலும் ஒன்று மட்டும் நான் உனக்குச் சொல்லுகிறேன். கைஸ்காட்டுக்கு நீ கொடுக்கப் போகும் தண்டனைக்கு நானும் ஆளாவேன். அதைச் செய்ய நீ விரும்பாவிடினும் நானே செய்து கொள்ளுவேன். ஆனால் மேலுமதிகக் கண்ணீரை மட்டும் வடிக்காதே, அப்படி நீ அழுவாயேயானால் பேடிகளின் மத்தியில் போய்விடு. நாங்கள் சாவிற்குத் தகுதியானவர்களாயிருந்தால் எங்களிருவரையும் கொன்றுவிடு."

தன் மகள் எவ்வளவு உறுதியும் வீரமும் கொண்டவளென்பதை இவ்வார்த்தைகளின்மூலம் அரசன் உணர்ந்தான். ஆயினும் அவள் கடைசியில் பயமுறுத்திப் பேசிய பிரகாரம் நடக்கக்கூடியவள் என்று அவன் நம்பவேயில்லை. அதற்கு மாறாக காதலனது பிரிவு அவளது காதலைத் தணிக்குமென்றே எண்ணினான். இந்த எண்ணத்துடன் அப்பாற் சென்று, அன்றிரவே கைஸ்காட்டைக் கொன்று அவனது இருதயத்தைத் தன் மகளுக்குக் கொண்டுபோய்க் கொடுக்கும்படி கட்டளையிட்டான். கட்டளைப்படி நடந்தது. ஒரு பாத்திரத்தில் கைஸ்காட்டின் இருதயத்தை எடுத்துவைத்து அதைத் தன் மகளிடம் கொண்டு போய்க் கொடுக்கும்படி சொல்லி, அத்துடன் அவள் இவ்வளவு காலமாகவும் தான் மிகப் பிரியமாக வைத்திருந்த ஒன்றின் மறைவால் ஏற்படும் துக்கத்தைத் தணிப்பதற்காக மகளுக்குத் தந்தை அனுப்பும் பரிசு அதுவென்னும் சேதியையும் சொல்லியனுப்பினான். தனது காதலனது மரணத்தை ஏற்கனவே எதிர்பார்த்திருந்த ஸிகிஸ்மோண்டா, அவசியமேற்பட்டால் வேண்டுமே என்று கொஞ்சம் விஷத்தையும் வாங்கி வைத்திருந்தான். தனக்கு அனுப்பட்ட பரிசு என்ன வென்பதையறிந்து தனது தந்தையின் செய்தியைக் கேட்ட பின்னரும் அது கைஸ்காட்டின் இருதயம்தான் என்பதை அவன் தெரிந்து கொண்டான். "எனது தந்தை தன்னைப் பற்றி அவர் எண்ணுவதைவிட அதிகம் விவேகத்துடனே நடந்துள்ளார். ஏனெனில் இந்த இருதயத்

(10-ம் பக்கம் பார்க்க)

திடுக்கிடும் சம்பவங்களுள்ள

'ஸி.ஐ.டி.சந்துரு'

துப்பறியும் நாவலை

'ஆனந்த விகடனி'ல் படியுங்கள்!

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை, என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ANANDA MEDICAL HALL 174 SEA STREET COLOMBO 11

ஆனந்தாலேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்புவலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சுளிவு, திரேகம்காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75 சிறியது ரூ. 3-00

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்தமயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50 சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

புரொப்ரைட்டர்: எஸ். பொன்னையா.

ஆனந்தா வைத்தியசாலை

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களின் தாய் மொழி அறபியா?

இப்னுபத்தூதாவை வரவேற்றவர் தமிழ் மன்னர்!

ஏன் சிங்களம்? என்ற நூலுக்கு மறுப்பு

(அல்-ஹாஜ் வி. எம். ஷம்சுத்தீன்)

ஏன் சிங்களம்? என்ற தலைப்புக் கொடுத்து ஒரு சிறிய புத்தகத்தை வேறுவிதமாக ஜனப் ஏ. டபிளியூ. எம். ராசிக் மரைக்கார் வெளியிட்டு அதை முக்கியஸ்தர்களுக்கு இலவசமாக அனுப்பிவருகின்றார். எனக்கும் அப்புத்தகம் கிடைத்தது. ஆனால் இப்புத்தகத்தை எழுதியவர் யாரென்று தெரியவில்லை. வெளியிட்டவர் "ராசிக் மரைக்கார்" என்பதிலிருந்து இதை எழுதியவர் ஒருவர் இருக்கவேண்டும். இத்துண்டுப் பிரசுரம், ஒருதலையாக எழுதப்பட்டிருக்கிறது. சிலர் இதை "யூ. என். பி. பிரசாரம்" என்றும் சொல்கின்றனர். அது எப்படியிருப்பினும், இதைக் கண்டித்து எழுதவேண்டியது மிக அவசியமாக எனக்குப்பட்டது. இந்நூலில் அதை வெளியிட்டவர், இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி அறபி என்றும், வீட்டுப் பாஷை தமிழ் என்றும், இலங்கைத் தமிழர்கள் முஸ்லிம்களின் துரோகி என்றும், இலங்கைத் தமிழர்களுக்கு மொழி விஷயத்தில் ஆதரவு கொடுத்தால் முஸ்லிம்களுக்கு உத்தியோகம் கிடையாது என்றும், இலங்கை முஸ்லிம்கள் தமிழர்கள் அல்லவென்றும் கூறியுள்ளார். அவர் கொடுத்த தலைப்பும் — என் பதிலும்:

இலங்கை முஸ்லிம்கள் தமிழர்களல்லர்!

"தமிழர்" என்ற பதம் மதங்களைக் குறிக்காது என்பதை இவர் அறியாமல் போனது மிகவும் விந்தை. தமிழர்: தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர் என்பது பொருள். சிங்களவர்: சிங்கள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர் என்பது பொருள். இப்படியே ஒவ்வொரு மொழிகளும் அவரவர்களின் தாய்மொழியைக் குறிக்கும். "இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி தமிழானபடியால் அவர்கள் தமிழர்கள்தான்" என்ற உயரிய கருத்துடன் ஸர் இராமநாதன் கூறியிருக்கவேண்டும். ஆனால் வழக்கில் இது காணப்படவில்லை. ஏனெனில், ஆதியில் குடியேறிய அரபு நாட்டு முஸ்லிம்களில் சிலர் காயல்பட்டினத்தில் வந்திறங்கினர்கள். அவர்கள் தங்கள் வர்த்தகங்களை தென் இந்தியத் துறைமுகங்களில் நடத்தியதுடன் அங்கு மதப் பிரசாரம் செய்து, முஸ்லிமல்லாதார்களை இஸ்லாத்தில் சேர்த்து மணமும் செய்துகொண்டார்கள். இவர்களைத் தென் இந்தியத் தமிழ் ஹிந்துக்கள், "எவனார்கள்", "துலக்கர்கள்", "சோனகர்கள்" என்று அழைத்ததின் காரணமாக, முஸ்லிம்களாகிய அவர்கள் ஹிந்துக்களை "தமிழர்கள்" என்று அழைத்தார்கள். இதன் காரணமாகவே இன்று இந்திய முஸ்லிம்கள் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தும்கூட ஹிந்துக்களைப்பார்த்து "தமிழர்கள்" என்று கூறுகின்றனர். ஹிந்துக்கள் முஸ்லிம்களைத் "துலுக்கர்கள்" என்று கூறுகின்றனர். அறபியர்களின் வழித்தோன்றல்களும், இடைக்காலத்தில் இஸ்லாத்தைத் தழுவியவர்களும் தென் இந்தியாவிலிருந்தே இலங்கையில் குடியேறியபடியால், அன்று முதல் இன்றுவரை இலங்கைத் தமிழர்களாகிய ஹிந்துக்கள் முஸ்லிம்களை "இலங்கைச் சோனகன்" என்றும், "இந்தியச் சோனகன்" என்றும் அழைக்கின்றனர். இலங்கை முஸ்லிம்கள் ஹிந்துக்களைத் "தமிழர்கள்" என்று அழைக்கின்றனர்.

இலங்கையில் ஆதியில் குடியேறிய ஒருசில அறபியர்கள் நேரடியாக இலங்கையில் குடியேறினர்களா? அல்லது மலையாளத்துக்குவந்து இலங்கைக்கு வந்தார்களா? என்பது திட்டமாகத் தெரியவில்லை. இந்த அறபியர்கள் முதன் முதலாக இலங்கைக்குவந்து "சீனங்கோட்டை வேறுவிதமாக யில் ஒரு பள்ளியைக் கட்டி இஸ்லாமியப் பிரசாரம் செய்ததுடன், தங்கள் வியாபாரத்தையும் செய்தனர்" என்பதற்குச் சரித்திர சான்றுகள் உள. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் "இந்தியாமீது ஸஹாபாக்களின் (தோழர்கள்) கண்ணோட்டம் ஏற்பட்டது" என்று "துஹ்பத்துல் முஜாஹிதீன்" என்ற நூல் கூறுகின்றது. இவர்கள் தான் இலங்கையிலுள்ள ஆதம் மலையைப் பார்க்க வந்தவர்கள் என்று சொல்ல முடியாது. ஏனெனில் இலங்கைக்கு வந்தவர்களில் எவரும் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்களல்லர். இத்தோழர்களில் ஒருவர் தமீம் அன்சாரி. இவர்கள் சமாதி சென்னபட்டினத்தில் (Madras) இருக்கிறது.

"ஹாஷீம் குலத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் கி. பி. 9வது நூற்றாண்டில் எகிப்து பட்டினத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். இவர்கள் பாண்டிய நாட்டின் துறைமுகமாகிய காயல்பட்டினத்தில் வந்திறங்கினர்கள். இவர்கள் இந்தியாவின் பல பாகங்களிலும் மலையாளத்திலும், இலங்கையிலும் பரவினர்கள். இந்த ஹாஷீம் குலத்து அறபியர்களை பாண்டிய மன்னன் மனமுவந்து வரவேற்று அவர்களுக்குப் பட்டயம் கொடுத்தான்" என்பதை திருகாசிச்செட்டியும், கால்ட்வெல் பாதிரியாரும் அவர்களது நூலில் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். காயல் பட்டினத்திலிருந்தும் கொல்லம் கண்ணனூர், போன்ற மலையாளக் கடற்கரைப் பகுதிகளிலிருந்தும் இலங்கைக்கு வந்தவர்களே இலங்கைச் சோனகர்கள். காலித்துறைமுகம் போன்ற இடங்களில் ஒருசில அறபியர்கள் குடியேறினர்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. 13வது நூற்றாண்டில் வாழ்ந்தவரும் பாண்டிய மன்னர் சுந்தரத்தேவரின் தோழருமான தென் இந்தியச் சோனகர் ஜமாலுத்தீன் அவர்களைப் பாண்டிய மன்னர் சேனாதிபதியாக நியமித்தார். பாண்டியர்கள் இலங்கைமீது படை எடுத்து பராக்கிரம பாகுவை எதிர்த்தபோது இலங்கையில்பாண்டியர்கள் சேனைத் தலைவர் ஜமாலுத்தீன் முஸ்லிம்கள் போர்த்திறமை கொண்டவர்களாகயிருந்தபடியால் பாண்டியர்கள் இவர்களை இராணுவத்தில் சேர்த்துக் கொண்டார்கள். இந்த இராணுவ யுத்தம் செய்கிறவர்கள் பிறகு "இராவுத்தர்" களாக மறுவினர் என்பர்.

நண்பர் சொல்கிறபடி அறபியர்கள் இலங்கையில் குடியேறி சிங்களப் பெண்களை மணந்து கொண்டதாக வைத்துக் கொண்டாலும், அந்த அறபியர்களின்மனைவிகள் சிங்களம் பேசியிருக்க வேண்டும். அவர்களின் வழித்தோன்றல்கள் சிங்களத்தை தாய்மொழியாகக் கொண்ட "சிங்கள முஸ்லிம்களாக"யிருந்திருக்கவேண்டும்? இன்று இலங்கையிலுள்ள எந்த முஸ்லிமாவது தன் வீட்டில் சிங்களத்தை அல்லது அறபி மொழியைப் பேசுகின்றனரா? என்று எவராலும் கூற முடியாது. இந்நிலையில் எப்படி இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி அறபியாகயிருக்கக் கூடும்?

இலங்கையின் சனத்தொகை மொத்தம் 8098637. சிங்களவர் 5621332. தமிழர் 908785. முஸ்லிம்கள் 541812 என்று எழுதியுள்ளார். ஆனால் அப்படியல்ல. மலைப்பகுதியில் வாழும் இந்தியத் தமிழர்களையும் சேர்த்தால் ஹிந்துக்களின் ஜனத்தொகை 1,892,089 ஆகும். அன்பர் ஜனத்தொகை கணித்தைப் பிழையாகஎண்ணி முஸ்லிம்களையும், ஹிந்துக்களையும் ஏமாற்றப் பார்க்கின்றார். இந்த 1,892,089ல் முஸ்லிம்களின் ஜனத்தொகையான (சோனகர்) 58,807ம் சேர்த்துக் கொண்டால், மொத்தம் தமிழ் மொழி பேசும் இனங்கள் 1,950,896 ஆகும். 5,621,332ல் சிங்களவர்களும், 1,950,896 தமிழ் பேசுவோரும் இருக்கின்றனர். ஆகவே தமிழ் மொழி பேசுவோர் சராசரி 24% சிங்களம் பேசுவோர்கள் சராசரி 56% ஆவர். ஆகவே தான் தமிழ் பேசுவோர்கள் தங்கள் மொழிக்கு அரசாங்கத்தில் சமத்துவம் வேண்டுமென்கின்றனர். டாக்டர் கலீலும், ஸர் ராஸீக் பரித்தும், சேனட்டர் அல் ஹாஜ் அஸீஸ் அவர்களும் சிங்களத்தை அரசாங்க மொழியாக ஏற்றுக் கொண்டதால் இலங்கைச் சோனக முஸ்லிம்கள் ஏமாற மாட்டார்கள். அவர்கள் ஏமாளிகளுமல்லர். (தொடரும்)

கற்குடாத் தபால்:

வந்தாறு மூலையில் திரு நல்லையாவை மக்கள் "வராதே" என்று விரட்டினர்

தனக்கு ஆதரவுதேடி திரு நல்லையா நடத்திய கூட்டம் குழப்பத்தில் முடிந்தது

கடந்த காலத்தில் தமிழ் இனத்தையும் மொழியையும் சிங்கள யு. என். பி அரசாங்கத்திடம் அடகு வைத்த ஒத்துழைப்பு ஊது குழல்களில் முக்கியமானவரான கற்குடாத் தொகுதியின் முன்னாள் பிரதிநிதி திரு பி. நல்லையா எதிர் வரும் பொதுத்தேர்தலில் "சுயேச்சை" என்ற போர்வையில் போட்டியிடவிருக்கிறார். கடந்த காலத்தில் தன்னை தெரிந்தது போலவே இம்முறையும் தன்னைப் பொது மக்கள் ஆதரிப்பரென்று மனப்பால் குடித்த திரு நல்லையா தனது "கோட்டை" என்று கருதும் வந்தாறுமூலையில் தனக்கு ஆதரவு தேடி ஒரு கூட்டத்தை கடந்த 26-2-56 ஞாயிறன்று மாலை வந்தாறுமூலை பிள்ளையார் கோவில் வீதியில் கூடினர். வந்தாறுமூலை கடந்த காலத்தில் திரு நல்லையாயை ஏகமனதாக ஆதரித்து வந்த கிராமமாகும். கூட்டத்தைக் கூட்ட திரு நல்லையா ஒரு "யு. என். பி." தந்திரத்தைக்கையாண்டார். நிலமில்லாதர்க்கு நிலம் வழங்கப்போவதாகவும் அதற்கு வருமாறும் விளம்பரம் செய்தார்.

ஒருபடியாக மக்கள் திரண்டிருந்தனர். அதில் பெரும்பாலோர் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள். கூட்டம் ஆரம்பிக்கும் போதே வந்தாறுமூலை பொதுமக்கள் சார்பாக ஏழு கேள்விகளை எழுத்து மூலமாகக் கேட்ட பொழுது கேள்விகளுக்கு கூட்ட முடிவில் பதில் தருவதாகக் கூறினர். திரு நல்லையா எழுந்து கரகரப்பான குரலில் பேசத்தொடங்கினார். "பாஷைப் பிரச்னை என்று ஒன்று கிடையாது. இதெல்லாம் யாழ்ப்பாணத்து அரசியல் வாதிகளின் போலிப்பிரசாரம். இவற்றையெல்லாம் நீங்கள் நம்பக் கூடாது. நாம் நமது [illegible] என். பியோடு ஒத்துழைக்க வேண்டியதவசியம். கறுப்புக் கொடிகளைக் கட்டுவதால் ஒன்றும் செய்துவிடமுடியாது. யாழ்ப்பாணத்தாரை நம்பாதீர்கள் என்றார்.

இப்படி நல்லையா பேசிய பொழுது கூட்டத்திலிருந்தவர்கள் "இந்தமனிதர் யாழ்ப்பாணத்தைத் தூற்றுகிறாரே இவரது மனைவி யாழ்ப்பாண மனுஷி என்பதையும் மறந்து விட்டாரோ?" என்று பேசிக்கொண்டனர்.

திரு நல்லையா தொடர்ந்து பேசிய போது இந்தியப் பிரதமர் நேருவைத் தமிழர் என்று குறிப்பிட்டார். "தமிழ்த்தலைவர் நேரு உலகப்பொது மனிதனாக விளங்குகின்றார்." என்று நல்லையா பேசியபொழுது கூட்டத்திலிருந்தவர்கள் இந்தமனிதருக்கு "நேரு யார்?" என்று கூடத்தெரியாத மயக்க நிலையில் பேசுகிறாரே என்று கிண்டல் செய்தனர்.

கூட்டத்தை விரைவாக முடிக்க விரும்பிய நல்லையா கேள்விகளுக்குப் பதில் கொடுக்காமல் நழுவ முயன்றார். அப்பொழுது வந்தாறுமூலை கிராமமுன்னேற்றச் சங்கக் காரியதரிசி எழுந்து கேள்விகளுக்குப் பதில் தருமாறு கேட்டார். அப்பொழுது திரு நல்லையாவும் சகாக்களும் மௌனம் சாதித்தனர். கி. மு. சங்கக் காரியதரிசி, "மக்களைப் பார்த்து, அன்று வந்தாறுமூலையில் தமிழரசுக் கட்சியினரை [illegible]" என்று பொழுது பொது மக்கள் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கு கட்சித் தலைவர் திரு வன்னியசிங்கம் அழகாகப் பதில் தந்து எங்கள் சந்தேகத்தைப்போக்கினர். ஆனால் திரு நல்லையாவோ எத்தகையகேள்விகளுக்கும் பதில் தராமல் இன்னு மின்னும் நம்மை ஏமாற்ற முயல்கிறார்" என்று கூறியதும் கூட்டத்திலிருந்தவர்கள் ஆமாம் சரி! சரி! நல்லையா நம்மை இன்னும் ஏமாற்ற முடியாது என்று கூக்குரலிட்டனர். நானூற்றுக்கு மேற்பட்ட மக்கள் "கூ" என்று கூச்சலிட்டுக் கேலிசெய்தனர் மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் திரு நல்லையாவும் சகாக்களும் திண்டாடினர். கூட்டத்திலிருந்து வீதிவரையும் திரு நல்லையாவை பின் தொடர்ந்து "இனிமேல் வந்தாறுமூலைக்குள் வராதே" என்று கூக்குரலிட்டனர். திரு நல்லையாவும் அவரது சகாக்களும் ஒவ்வொரு மூலைக்கு ஒருவருகூடி காருக்குள் ஏறிக்கொண்டு வேகமாக அவ்விடத்தை விட்டு நகர்ந்தனர். திரு நல்லையாவிடம் வந்தாறுமூலைமக்கள் தமிழரசுத் தலைவர்களுடன் ஒரே மேடையில் பேசவருமாறு கேட்க. "இப்பே இயலாது உங்களுக்குத் திகதியை அறிவிக்கிறேன் பிறகு." என்று கூறிக் கொண்டே போய்விட்டார். திரு நல்லையாவிடம் தாங்கள் கேட்ட கேள்விகளைத் துண்டுப்பிரசுரங்களாக அச்சிட்டு வெளியிடவும் தமிழரசுக் கட்சியினருடன் திரு நல்லையாவை ஒரே மேடைக் கழைக்கவும் வந்தாறுமூலை மக்கள் ஒழுங்கு செய்துவருகின்றனர்.

—ஜெயம்

'சுதந்திரன்'

சந்தா விபரம்

1--1--1956 முதல்

வருட சந்தா	ரூபா 8.00
ஆறு மாத சந்தா	ரூபா 4.50

விபரங்களுக்கு எழுதவும்.

சர்குலேஷன் மானேஜர்,
'சுதந்திரன்'
194 ஏ, தட்டாதெரு, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்தீரன்
SUTANTIRAN

1956 மார்ச் மாதம் 11ந் திகதி

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183

எப்போது வந்த வினை?

இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களின் தாய் மொழிக்கும், அவர் தம் வாழ்விடங்களுக்கும் அபாயகரமான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதென்பதை இன்று தமிழ்ப் பேசும் மக்களின் தலைவர்கள் எனப்படுவோர் அனைவரும் ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் இந்த அபாயம் எப்போது ஆரம்பித்தது? இந்த வினை எப்போது வந்தது?

இனிமேலும் பதவிகளில் ஒட்டிக்கொண்டிருந்தால் வாக்காளர் முகத்தில் முழிக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்ட பின் தமது பதவிகளை விட்டெறிந்த "தியாகசீலர்கள்" இந்த அபாயம் ஏதோ மின்னல் முழங்காமல் வானத்திலிருந்து நடு வீட்டுக்குள் வந்து விழுந்த இடியேறு என்று வர்ணித்து தப்பிக்கொள்ளப் பார்க்கிறார்கள்.

உண்மையில், தமிழ் மொழிக்கும் தமிழ்ப் பேசும் இனத்திற்கும் வந்திருக்கும் இந்த அபாயம் பெப்ரவரி 19ந் தேதி நடந்து முடிந்த களனி மகாநாட்டில், மந்திரவாதியின் மாங்கன்றுபோல், திடுதிப்பென்று முளைத்துக் கிளைத்த ஒரு விருட்சமல்ல.

1947ம் ஆண்டில் சுதந்திரம் என்ற முகமூடியோடு சோல்பரியின் ஒற்றையாட்சி அரசமைப்புத் திட்டம் அமுலுக்கு வந்தபோதே இந்த வினைக்கு வித்திடப்பட்டது. அப்போதிருந்து இந்த விஷ விருட்சம் வேரிட்டு கிளையிட்டு எத்தனையோ படிகளில் விசாலித்து வந்திருக்கிறது. தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம் முதலாவது படியென்று சொல்லலாம். தமிழ்ப் பேசும் மக்களை இந்த நாட்டில் சந்தேகப் பிரஜைகளாக்கிய குடியேற்ற, வெளியேற்ற, பிரஜாஉரிமைச் சட்டங்கள் இரண்டாவது படியெனலாம். இவற்றைத் தொடர்ந்து மற்றும் எத்தனையோ படிகள் ஒன்றன் பின் ஒன்றாக உருவாக்கப்பட்டிருக்கின்றன.

சோல்பரி அரசமைப்புத் திட்டத்தைத் தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரும் எதிர்த்து நின்ற போது அதை ஆதரித்து வாக்களித்து வரவேற்றவர் மாஜி மந்திரி திரு நடேசனர். இந்திய பிரஜாஉரிமை வாக்குரிமைச் சட்டங்கள் பாராளுமன்றத்தில் வந்தபோது அவற்றை ஆதரித்து வரவேற்றவர்கள் மாஜி மந்திரிகள் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு நடேசன் ஆகியோர். சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டபோதும் பின்பு அவை அமுல் நடத்தப்பட்டபோதும் கண்ணை மூடிக்கொண்டிருந்தவர்கள் மாஜி மந்திரிகளான திருவாளர்கள் எஸ். நடேசன், ஸி. சுந்தரலிங்கம், ஸி. சிற்றம்பலம், திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஆகியோர். மற்றும் திரு வி. குமாரசாமி, திரு வி. நல்லையா, திரு ஏ. எல். தம்பிஐயாபோன்ற சில்லறைகளும் அரசாங்கத்தின் அக்கிரமான நடவடிக்கைகளை ஆதரித்தே வந்திருக்கிறார்கள். அப்போதெல்லாம் இவர்கள் பதவிகளில் ஒட்டிக்கொண்டிருந்ததினால் எல்லாம் சரியாகவே நடக்கிறது, யாரும் கவலைப்பட வேண்டியதில்லையென்று கூறித் தமிழ்ப் பேசும் மக்களை ஏமாற்றி வந்திருக்கிறார்கள். உண்மையில் காலஞ்சென்ற திரு டி. எஸ். சேனநாயகாவின் காலத்திலேதான் தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்திற்கும் படுபாதகமான நடவடிக்கைகள் ஆரம்பமாயின. தமிழ்ப் பேசும் மாஜி மந்திரிகள் அனைவரும் பழைய சேனநாயகாவின் அரசாங்கத்தோடு உறவாடியவர்களாகையால் இந்த உண்மையை இப்போது மூடிமறைத்து மதிலெழுப்பிவிடப் பார்க்கிறார்கள். கொத்தலாவலை ஆட்சி வந்த பிறகுதான் ஆபத்தும் வந்ததாக திரு சுந்தரலிங்கம், திரு பொன்னம்பலம்போன்றார் கூறி வருவது புரளித்தனமான பிரசாரமாகும்.

களனி மகாநாட்டில் பேசிய பிரதமர் சேர் ஜோன் உட்பட பல பேச்சாளர்கள் 1948ம் ஆண்டிலிருந்தே சிங்களத்தை மாத்திரம் அரசியல் மொழியாக்கிவிட யு. என். பி. படிப்படியாகத் திட்டமிட்டு வந்துள்ளதெனப் பட்டவர்த்தனமாகக் கூறியிருப்பதைத் தமிழ்ப் பேசும் மக்கள் உன்னிப் பார்க்க வேண்டும்.

யு. என். பியின் இந்த அந்தரங்கத் திட்டத்தை அப்போதே, அதாவது 1949ம் ஆண்டிலேயே, கண்டறிந்து அம்பலப்படுத்திய பெருமை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒன்றினையே சார்ந்ததாகும்.

"யு. என். பியைக் கடைசிவரை நம்பியிருந்தோம். இன்று நட்டாற்றில் கைவிடப்பட்டோம்" என்று நீலிக் கண்ணீர் வடித்துப் பிரலாபிக்கிறார்கள் மாஜி யு. என். பி. தமிழ்த் தலைவர்கள். தமிழரசுக் கட்சியார் எச்சரிக்கை செய்து வந்துங்கூட யு. என். பியின் சதிச் செயலை உள்ளிருந்தே அறிய முடியாது போன இவர்கள், அரசியல் விவேகமற்ற இவர்கள், திரும்பவும் தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல் தலைவர்களாவதற்கு தகுதியானவர்கள் தாமா என்பதைத் தமிழ்ப் பேசும் மக்கள்தான் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தீர்மானிக்க வேண்டும்.

இந்த அதிமுக்கியமான தீர்மானத்தைத் தமிழ்ப் பேசும் பொதுமக்கள் சரியானபடி தீர்மானிப்பார்கள் என்று நம்புகிறோம்.

யு. என். பி. மீண்டும் ஆளும் கட்சியாதமா?

அரசியல் அவதானிகளிடை சந்தேகம்

(அரசியல் நிருபர்)

பொதுத் தேர்தலுக்கான அபேட்சகர் நியமனங்கள் தாக்கலாகிவிட்டன. ஆளும் கட்சியான யு. என். பி. மொத்தம் 76 தொகுதிகளில் போட்டியிடுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதனுடன் கூட்டு நிற்கும் ஸ்தாபனங்களும் 59 தொகுதிகளுக்கு தங்கள் அபேட்சகர்களை நிறுத்தியுள்ளன. இடதுசாரிகள் 31 ஸ்தானங்களில் போட்டியிடுகிறார்கள். தமிழரசுக் கட்சி 14 தொகுதிகளில் போட்டியிடுகிறது. 69 பல்வேறு சுயேச்சைகள் சிறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் போட்டியிடுகிறார்கள்.

வெவ்வேறு கட்சிகளினதும், அபேட்சகர்களினதும் தேர்தல் பிரசாரம் ஜோர் வேகத்தில் ஆரம்பித்துவிட்டது. தினசரி நாடு பூராவும் பல நூறு கூட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. பிரசார பிரசுரங்கள் புற்றீசல் போல் பரவுகின்றன.

இந்த தேர்தல் ஜோரத்தின் மத்தியில் அரசியல் அவதானிகள் பல்வேறு அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். "யு. என். பி. மீண்டும் அதிகாரத்திற்கு வருமா?" என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் இன்று எழுப்பப்பட்டுள்ளது.

யு. என். பியுடன் நெருங்கிய தொடர்புகொண்ட அரசியல் அவதானிகள் தேர்தலைப் பொறுத்து ஆளும்கட்சி பெரும் திகிலடைந்துள்ளது என்றே அறிவிக்கிறார்கள். யு. என். பிக்குள் உள்ள 'கழுத்தறு' படலங்களையும், 'ஏட்டி போட்டி'களையும் அறிந்த பலரும், இலங்கையின் யதார்த்த நிலையை நெருங்கிப் பார்க்கும் பலரும் யு. என். பி. அடுத்த முறை அதிகாரத்திற்கு வர மாட்டாது என்றே பெரும்பாலும் கருதுகிறார்கள்.

களனி மகாநாட்டில் தனிச் சிங்கள நாடகத்தை யு. என். பி. நடித்தபோதிலும் யு. என். எதிர்ப்பு மனோபாவம் நாட்டின் பல பகுதி மக்கள் மத்தியிலும் பிரமாண்டமாக வளர்ந்திருப்பதாகவும், அதன் எந்த அரசியல் தகடுதத்தமும் மக்கள் மத்தியில் அது இழந்த செல்வாக்கை திருப்பிக் கொண்டு வரப்போவதில்லை என்றுமே கூறப்படுகிறது.

யு. என். பி. ஆளும் கட்சியாவதற்கு தகுதியுள்ளதாக வராது என்று அவதானிக்கும் அரசியல் வட்டாரங்கள் தமது கணிப்புக்கு பின்வரும் காரணங்களைத் தெரிவிக்கின்றன.

(1) களனி மகாநாட்டுத் தீர்மானம் யு. என். பிக்கு சாதகமான எந்த சூழ்நிலையையும் சிருஷ்டிக்கவில்லை. யு. என். பி. பாஷைப் பிரச்னையை ஒரு தேர்தல் உபாயமாகவே கருதி வந்திருக்கிறது என்று பெருவாரி மக்கள் கருதுகிறார்கள். கடந்த பாராளுமன்றத்தில் 'கல்லு' வைத்திருந்த ஆளும் கட்சி தன் களனித் தீர்மானத்தை சட்டபூர்வமாக்காது அதை முன்வைத்து ஏன் தேர்தலில் நிற்க வேண்டும் என்று கேட்கப்படுகிறது. 18 ஆண்டுகளாக அதிகாரத்தில் இருந்து வந்த கூட்டம் அன்னிய மொழிக்கே ஆராதனை செய்துவிட்டு இன்று பாஷாபிமான வேஷம் போடுகிறதே எனவும் குற்றம்சாட்டப்படுகிறது. தனிச் சிங்களம் கோரும் சிங்கள பொதுமக்கள் யு. என். பி. தங்களது மொழி—கலாசாரத்தை [illegible]

(2) தமிழ்ப்பிரதேசங்களில் பெருவாரி 'கையாட்களை' வைத்திருந்த யு. என். பி. இந்த தேர்தலில் தன் ஆட்களில் பெரும் பகுதியை இழந்துவிடும். தமிழ்ப் பேசும் தொகுதிகளில் இருந்து யு. என். பி. எதிர்ப்பு அபேட்சகர்களே பெருவாரியாக வெற்றிபெறுவார்கள்.

(3) யு. என். பியின் தேச விரோத—ஜனவிரோதச் செயல்களை எதிர்த்து நாட்டு மக்களிடை அலை அடித்து வந்த யு. என். பி. எதிர்ப்பு மனோபாவம் எந்தவிதத்திலும் மாறிவிடவில்லை. தொழிலாளர்களும், இளைஞர்களும், மத்தியதர வர்க்கத்தினரும் பெரும்பாலும் யு. என். பி. விரோதிகளாகவே இருக்கிறார்கள்.

(4) வேலையில்லாத் திண்டாட்டம், நிலப் பசி, விலைவாசிகள் உயர்வு, வாழ்க்கைக் கஷ்டங்கள், கல்வி, சுகாதாரம்போன்ற மக்களின் ஜீவாதாரமான பிரச்னைகள் எதையும் யு. என். பி. தீர்க்கவில்லை. அதற்கு மாறுக மக்களின் வாழ்க்கைத் தரம் மோசமாகிக்கொண்டிருக்கிறது. இவற்றுல் பாதிக்கப்படும் பெருவாரியான மக்கள் யு. என். பி. விரோதிகளாக மாறியுள்ளார்கள்.

(5) நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கவும், வருவாயை உயர்த்தவும் இதுவரை யு. என். பி. எதுவும் சாதிக்கவில்லை. அதற்கு மாறுக பழைய கலோனியல் பொருளாதாரத்தை அப்படியே பேணி வருகிறது. அன்னிய முதலீடுகளின் நலன்களை பாதுகாத்து வெளியாரின் தொடர்ந்த சுரண்டலுக்கு நாட்டை வேட்டைத் தளமாக்கியது. உள்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கும், விவசாயத்தை யந்திர மயமாக்கவும் ஒரு திட்டத்தை பின்பற்ற மறுத்தது. இந்த தேசிய விரோத போக்கால் நாட்டின் பொருளாதாரத்தை நாசம் செய்தது. மக்களின் அவலத்தை கூட்டியது. இது தேசிய முன்னேற்றத்திலும், நலனிலும் அக்கறைகொண்ட மக்களிடையே யு. என். பி. எதிர்ப்பு மனோபாவத்தை வளர்த்துள்ளது.

(6) யு. என். பி. கடைப்பிடித்துவரும் வெளிநாட்டுக் கொள்கை பெருவாரி மக்களுக்கு அதிருப்தியையே அளித்துள்ளது. சுதந்திரமடைந்து சுயேச்சையான பாதையில் ஸ்திரமாக முன்னேறும் ஆசிய நாடுகளுடன் சேர்ந்து உறுதியான ஒரு சமாதான கொள்கையை பின்பற்றுவதற்குப் பதிலாக யு. என். பி. இலங்கையை ஒரு வல்லரசு முகாமுடன் "உறவு" கொண்டாடியது. அதன் மூலம் யுத்த ஆபத்தை நாட்டின் கதவண்டை இழுத்து வந்தது. தேசத்தின் உயிர் நாடியான ராணுவ—கப்பல் தளங்களை அன்னிய வல்லரசின் கையில் யு. என். பி. விட்டு வைத்துள்ளது நாட்டை ஆபத்தான நிலைக்கு கொண்டுபோய் விட்டது. பாண்டுங் மகாநாட்டில் ஆசிய நாடுகளில் இருந்து தனிமைப்பட்டு ஒரு வல்லரசு கோஷ்டியின் கையாள் என்ற நீதியில் யு. என். பி. ஆட்சி நடந்து கொண்டது நாட்டிற்கு அழியாத அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது என்று பெருவாரி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளார்கள். நாடுகளின் பொருளாதார ராஜ்ய வேறுபாடுகளை பொருட்படுத்தாது சகல நாடுகளுடன் நல்லுறவுபூண யு. என். பி. மறுப்பது பெரும் அதிருப்தியை உண்டாக்கியுள்ளது.

யு. என். பி.மக்கள்நலனின் அக்கரை கொள்ளாத கட்சி என்றே பெருவாரி மக்கள் கருதுகிறார்கள். அன்னிய முதலாளிகளினதும், பஸ் சொந்தக்காரர்களினதும், கறுப்புச் சந்தை கொள்ளைக்காரர்களினதும், சூதாட்ட மோசடிக்காரர்களினதும் கட்சியே என்று சாதாரண மக்கள் கருதுகிறார்கள்.

(8) யு. என். பி. நாட்டின் ஜனநாயகத்தை ஒழித்து ஒரு பாஸிஸ்ட் ஆட்சியை படிப்படியாய் புகுத்திக் கொண்டிருக்கிறது என்று மக்கள் எண்ணத் தலைப்பட்டுள்ளார்கள். ஹர்த்தாலில் அது மக்கள்மீது மிருகத்தனமான அடக்கு முறையை அவிழ்த்துவிட்டு பத்துப்பேர் களைக் கொன்றது. தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்களை சீர்குலைத்தது. அரசாங்க ஊழியரின் தொழிற்சங்க உரிமைகளை மறுத்து பழிவாங்கியது. இராணுவத்தினதும் பொலீஸினதும் பலத்தை கூட்டி நாடு பூராவையும் இராணுவ மயமாக்கி வருகிறது. மக்களின் பேச்சுரிமையிலும், பிரயாணம்செய்யும் உரிமையிலும், மற்றும் ஜனநாயக உரிமைகளிலும் தலையிட்டு வருகிறது. இவை சகல பகுதி மக்கள் மத்தியிலும் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளன.

(9) யு. என். பி. ஆட்சியின் மேலிடத்தில் காணப்படும் ஊழல் மக்களிடை அதிருப்தியை உண்டாக்கியுள்ளது.

மேற்கூறிய காரணங்களையும் அதேபோல பல வேறு காரணங்களையும் காட்டி யு. என். பி. மீண்டும் ஆளும் கட்சியாவது முடியாத காரியம் என்று வாதிக்கும் அரசியல் அவதானிகள் மக்கள் அரசியல் விழிப்பு அடைந்து வருகிறார்கள் என்றும் கருதுகிறார்கள்.

சென்ற தேர்தலில் தடந்ததாக கூறப்படும் சீர்கேடுகளை ஞாபகமூட்டும் மேற்படி அரசியல் அவதானிகள் இந்த முறையும் எந்தவிதமான தந்திரங்கள் கையாளப்பட்டாலும் யு. என். பி. தனித்து அரசாங்கம் நிறுவக் கூடிய பெரும்பான்மை பெற மாட்டாது என்றே சாதிக்கிறார்கள். ஆகக் கூடியது யு. என். பிக்கு 40 ஆசனங்களே கிடைக்கும் என்று இவர்கள் கணிக்கிறார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 35 ஆசனங்கள் கிடைக்கலாம் என்றும் இடதுசாரிகளுக்கு இப்போதுள்ள ஆசனங்கள் தொகை கிடைக்கலாம் என்றும் கருதுகிறார்கள்.

யு. என். பியுடன் தமிழ் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் சேர மறுக்கும் நிலையில் அது ஆட்சி நிறுவ முடியாது என்றும் ஒரு வேளை எதிர்க்கட்சிகளின் கூட்டாட்சி வருவது சாத்தியமாகலாம் என்றும் இந்த அவதானிகள் கூறுகிறார்கள்.

நிடுக்கிடும் சம்பவங்களுள்ள
'ஸி ஐ.டி.சந்துரு'
துப்பறியும் நாவலை
"ஆனந்த சாகரவி"ல் படியுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும? தமிழரசுக் கட்சி அபேட்சகர்கள்



திரு.என். ஆர். ராஜவரோதயம்
திருகோணமலை

திரு. ஸி. வன்னியசிங்கம்
கோப்பாய்



திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம்
காங்கேசன்துறை

டாக்டர் இ. எம். வி. நாகநாதன்
யாழ்ப்பாணம்

திரு.வி. ஏ. கந்தையா
ஊர்காவற்துறை



திரு. எஸ்.எம். இராசமாணிக்கம்
பட்டிருப்பு



திரு. ஏ. அமிர்தலிங்கம்
வட்டுக்கோடடை

திரு. எஸ். இராஜதுரை
மட்டக்களப்பு

கேட்முதலியார் எம். எஸ்.
காரியப்பர்
கல்முனை

திரு. வி. ஏ. அழகக்கோன்
மன்னார்

திரு. கே. துரைரத்தினம்
பருத்தித்துறை

திரு. பி. மாணிக்கவாசகர்
கல்குடா



திரு. இ. என். நவரத்தினம்
சாவகச்சேரி

திரு. எம். எம். முஸ்தபா
பொத்துவில்

"தமிழிற் பேச எனக்கு வல்லமை இல்லை யென்போர் என்னுடன் பொது மேடைக்கு வரட்டும்"

சரசாலைக் கூட்டத்தில் திரு. நவரத்தினம் முழக்கம்

சாவகச்சேரி—"தமிழ் எங்கள் உயிர். தமிழனின் கலை, கலாச்சாரம், பண்பாடு, மொழி ஆகியவற்றைக் காப்பதற்காக நான் எனது இறுதி மூச்சுள்ளவரை போராடியே தீருவேன். எனக்குத் தமிழிற் பேச வல்லமை இல்லை. நான் தமிழிற் பேச முடியாது திண்டாடுகிறேன் என்று கூறும் எவரையாவது என்னுடன் பேச ஒரு பொது மேடைக்கு வரும்படி அறைகூவி அழைக்கின்றேன்" இவ்வாறு நியாயவாதியும், எதிரே வரும் பொதுத் தேர்தலில் சாவகச்சேரித் தொகுதியில் தமிழரசுக் கட்சி அபேட்சகராக போட்டியிடுபவருமான திரு. வி. என். நவரத்தினம் சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற பிரமாண்டமான கூட்டமொன்றில் பேசும்பொழுது கூறினர்.

இக்கூட்டம் சாவகச்சேரித் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் நியாயவாதி திரு வி. என் நவரத்தினத்தை ஆதரிக்குமுகமாகக் கூட்டப்பட்டது. கூட்டத்திற்கு நியாயதுரந்தரர் திரு கே. கதிர் காமசேகரம் தலைமைவகித்தார். தலைவர் தமது தலைமையுரையில் "1947-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் யு. என். பி. கட்சியைச் சாம்பார் கட்சியென்றும், அலி பாவும் 40 திருடர்களும் போன்றவர்கள் என்றும் பொதுமக்கள் முன் கூறி வாக்குப் பெற்றுப் பாராளுமன்றம் சென்று யு. என். பி. யுடன் இரண்டறக் கலந்த தமிழ்த் தலைவர்கள்தான் இன்று சுயேச்சை வேடத்தில் வாக்குப் பெற மக்கள் முன் வருகின்றார்களென்றும் அவர்களிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும் கூறினர்.

திரு. என். அருணாசலம் ஆசிரியர் அடுத்துப் பேசுகையில் "தமிழர்களுக்கு ஒதுக்கும் திட்டங்கள் யாவற்றிற்கும் சிங்களவருக்கு ஆதரவு கொடுத்தவர்கள் மாஜி யு. என். பி.த் தமிழ்த் தலைவர்கள்தானென்றும் அவர்களின் உதவியுடன் மலைநாட்டு தமிழரின் பிரஜாவுரிமையை சட்டம் 10-12-48ல் பாராளுமன்றத்திற் கொண்டு வரப்பட்டபொழுது இன்று இந்தியத் தமிழருக்கு நாளை இலங்கைத் தமிழருக்கு" என்று எங்கள் தலைவர் கூறினரே அதைத் திரு குமாரசாமி எட்டு ஆண்டுகட்குப் பின்பாவது உணர்ந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைவதாகக் கூறினர்.

இன்னும் சாவகச்சேரி கிராமச் சங்கத் தலைவர் திரு எம். பரராஜசிங்கம், திரு ஸ்ரீ முருகன் (த. சுப்பிரமணியம்) ஆசிரியர் திரு ரி. வி. தியாகராஜா, பளை கிராமச் சங்கத் தலைவர் திரு என். எஸ். சேதுகாவலர், திரு ஏ. கே. இராமலிங்கம், ஆசிரியர் திரு ஏ. நடராஜா, செல்வி பத்மாவதி வேலுப்பிள்ளை, செல்வன் கே. ஞானப்பிரகாசம் முதலியோரும் பேசினர்.

தாளங்குடா தமிழ் அரசு
வா. மூன்னணி

தமிழரசு வாலிப முன்னணியின் பொதுக் கூட்டமொன்று சென்ற 26-2-56ல் தலைவர் திரு க. விஞ்ஞகமூர்த்தி தலைமையில் தாளங்குடாப் பகிரங்க வீதியில் ஆரம்பமானது. செயலாளர் தா. அருளானந்தம் கடந்த கூட்ட அறிக்கை சமர்ப்பித்தார். கூட்டத்தில் புதிய அங்கத்தவர்கள்சேர்ந்தனர். மற்றும் பல பெரியார்கள் சொற்பொழி வாற்றியதும் செயலாளர் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிவெய்தியது.

தமிழ உரிமைப்...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

றைய போக்கைத் தமிழ் மக்கள் சரியாகப் புரிந்துகொள்ளும் சந்தர்ப்பத்தில் வாழ்கின்றோம். இச்சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தத் தவறினோமாஞல் பிற்சந்ததியினரால் நாம் எள்ளி நகையாடப் படுவோம். அன்றியும் அவர்களின் துன்பத்துக்கும், அடிமைத் தனத்துக்கும் நாமே அத்திவாரமிட்டவர்களாகி விடுவோம்.

ஒரு மொழி தேசியமொழியாக்கப்படுவதாஞல் அம்மொழியில் ஏனைய மொழிகளைக் காட்டிலும் அதிக கலைகள்—அதிக காவியங்கள்—பண்புகள்—இருக்க வேண்டும். ஆராய்ச்சியாளர்களை—பேரறிஞர்களை அம்மொழி பெற்றிருக்கவேண்டும். ஒரு சிறந்த அகராதியை—கலைக்களஞ்சியத்தைத் கட்டாயமாக வைத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் அது தேசிய மொழியாக்கப்பட அருகதை உள்ளது. சிறப்பான இலக்கண இலக்கியமில்லாத ஒரு மொழி, காவியத்தைக் கனவில் கண்டிருக்காத ஒரு மொழி, திருக்குறள்போன்ற ஒரு ஒப்பான நீதிநூலை, தொல்காப்பியத்திற்கொப்பான ஒரு இலக்கணத்தை—சிலப்பதிகாரத்திற்கொப்பான காவியத்தைத் தன்னகத்தே இல்லாத ஒரு மொழி—பல கலையும், பல நூலும் பண்டைய நாகரிகமும் பெற்றிருக்கும் இன்னெரு மொழிமீது திணிப்பதானுல் திணிப்பவர்கள் புத்திசாலிகளா? இதைவிட முட்டாள்தனமும், வேறு உண்டா?

1938-ல் தென் தமிழ் நாட்டில்—தமது தாய்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. அதில் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் — ஆண்களும், பெண்களும் சிறை சென்றனர். இந்தியை எதிர்த்துப் போரிட்டு தாலமுத்து, நடராசன் போன்ற தமிழ் இளைஞர்கள் உயிரை நீத்தனர். அவர்தம் மனைவியர் விதவைகளாயினர். தமிழனுக்கு மானம்உயிரினும்பெரிதுஎன்பதற்கு உதாரணமாகவிளங்கும் இவ் இளைஞர் தம் தியாகத்தை ஈழத்தில் வாழும் தமிழ் இளைஞர்கள் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். எதையும் தாங்கும் இதயத்துடன் தமிழ் மக்களாகிய நாம் மானத்துடன் போராடுவோம். வீரத்துடன் போராடுவோம். மானத்திற்காக மரணத்தை ஏற்றுக்கொண்டாலும் பரவாயில்லை. அப்படியானுல் இனி வருவோரும் மறப்போர் புரிவார்கள்; மார்தட்டிப் போர்க்களம் போவார்கள். போராட்டம் காந்திஜி புகட்டிய அகிம்சைப் போராட்டம்தான்; வேறு இல்லை. வாழ்க தமிழ்! வாழ்க தமிழ் கூறும் நல்லுலகம்!

திடுக்கிடும் சம்பவங்களுள்ள
'ஸி.ஐ.டி.சந்துரு'
துப்பறியும் நாவலை
"தனந்த விகடனி"ல் படியுங்கள்!

தொய்வு நோயை ஒழிக்க
ரிச்லெட்ஸ்
பெக்டோரல்
சாப்பிடுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 24.

ரொக்கப் பரிசு-ரூ 1000.00

முதலாவது பரிசு ரூ. 600-00 | **இரண்டாவது பரிசு ரூ. 300-00**

அதிகப்படியான விடைகள் அனுப்புபவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00

முடிவு திகதி 14-3-56 பி. ப. 5 மணி | **சரியான விடை 18-3-56ல் பிரசுரிக்கப்படும்**

பரிசு பெற்றோர் விபரம் 25-3-56 ல் பிரசுரிக்கப்படும் | பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை 7-4-56 ல் செக் மூலம் அனுப்பப்படும்.

இடமிருந்து வலம்

1. இதை விட்டுக் குழப்பினால் மருந்தானாலும் குழந்தைகள் அருந்திவிடும்.
2. வானம்
4. இதன் பால் பிணியாளருக்கும் உகந்தது.
5. காலாற மெல்ல நடத்தல்.
6. இதன் காய் கறிக்குதவும்
7. பெண்களுக்கு இதன்மேல் உள்ள மோகம் அதிகம்
8. திருச்செந்தூர்
9. பாரதத்தின் பிரதமர்
10. இதற்குபதேசம் காதில் உரைத்தாலும் அவலக் குரல் போகாதென்பது பழமொழி
11. பலம்
13. இலக்குமி
14. எந்தச் சிறிய காரியத்திற்கும் இது படுபவர்களும் உண்டு.
16. குற்றம்
17. இது வேதனை தரும்
18. அழகான பெண்கள் இதனால் செய்த சிலையைப்போன்றவர்கள் என்று புலவர்கள் வர்ணிப்பார்கள்.
20. மதுரை
21. ஒப்பு
22. இது உள்ள இடத்தில் கார் ஓடாது
23. கண் மருந்து

மேலிருந்து கீழ்

1. பழங்காலத்து இராஜகுமாரர்கள் பல.....சுற்றிப் பார்த்த பின்னர்தான் பட்டந்தரிப்பார்கள்.
2. கலியாணப் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் இது எடுப்பது ஒரு சம்பிரதாயம்
3. சுமந்து செல்லல்
4. சிங்கோனாச் செடியின் இதிலிருந்து "குயினின்" என்ற மலேரியா மருந்து செய்யப்படுகிறது.
5. கதிர்காமத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு மலை
7. பெண்களின் இது பல புலவர்களின் பாடல்களுக்கு இலக்காகி இருக்கிறது.
8. அழகு பொருந்திய வளமை
10. இதைத் தலையில் வைத்து ஆடுவது ஒரு கலை
12. மாமியின் மகன்
14. காற்று வீசாவிட்டால் மரக்கிளைகள் இது அற்றுக் கிடக்கும்
15. மிளகு போட்டுத் தயாரிக்கும் இது ஜீரணசக்தியைக் கொடுக்கிறது.
19. வாழை
20. பங்கு
21. .....என்றால் கூட்டு என்று பொருள்



பிரவேசக் கட்டணம் சதம் 50



இரண்டு கட்டங்களுக்கும் பிரவேசக் கட்டணம் ரூபா 1-00 செலுத்தினால் இந்த மூன்றாவது விடையை இனாமாக அனுப்பலாம்.



பிரவேசக் கட்டணம் சதம் 50

பெயர் .....

விலாசம் .....

.....

அனுப்பும் மொத்த கூப்பன்களின் தொகை.....

கட்டணத்தின் தொகை ரூ.....ச.....

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்.....

போட்டி அனுப்பும் விலாசம்:

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 24,

த. பெ. இ. 1183, கொழும்பு-12.

ஒரு கூப்பன் மட்டுமே நிரப்பியிருந்தாலும் இரண்டு கட்டங்களுக்கும் பிரவேசக் கட்டணம் அனுப்பப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமையின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தைப் புதைப்பதற்கான தகுந்த பாத்திரத்துடன் இதை அவர் அனுப்பியிருக்கிறார்." ஆனந்த பரவசத்துடன் இருதயத்தை முத்தமிட்டபடியே "என்னை என் தந்தை நேசித்தார் என்பதை நான் எப்போதுமே தெரிந்துள்ளேன். ஆனால் இப்போது இந்த இருதயத்துக்கு அவர் செய்துள்ள மரியாதையின்மூலம் என் மேல் கொண்டுள்ள அன்பை நன்கு காட்டியுள்ளார். அவருக்கு எனது நன்றியைத் தெரிவியுங்கள்; அத்துடன் இதுவே அவருக்கு நான் தெரிவிக்கும் கடைசி நன்றி என்பதையும் மறவாமற் போய்ச் சொல்லுங்கள்."

இப்படிக் கூறிவிட்டு மறுபடியும் இருதயத்தை முத்தமிட்டு அவள் விட்ட பெருமூச்சானது அவள் கண்வாங்காது பார்த்துக் கொண்டிருந்தது அந்த இருதயத்தைப்பற்றி ஒன்றும் தெரியாமல் விழித்து நின்ற பணிப்பெண்களை மனமுருகப்பண்ணியது. "ஹே! எனக்கு இவ்வளவு இன்பம் தந்த ஹிருதயமே வாழ்வின் உயர்வு தாழ்வுகளில் நின்றும், பீடைகளினின்றும் நீ விடுதலையடைந்துவிட்டாய். என் ஆத்மிகக் கண்களால் உன்னை எத்தனையோ தடவை பார்த்த பின்னரும் என் ஊனக்கண்களால் இனியும் உன்னைப் பார்க்கபண்ணும் என் குரூரபுத்தி சபிக்கப்படுமாக. உனது பிறவியின் பயனை நீ அடைந்துவிட்டாய். நாம் அனைவரும் அவாவிக்கொண்டிருக்கும் அந்த ஸ்தானத்தை நீ அடைந்து விட்டாய். நீ ஒரு பொன் சமாதிக்குரியவன் என்பதை உனது எதிரிகூட ஒப்புக் கொள்ளுகிறான். இனி உன் உத்தரகிரியைக்கு இருப்பதெல்லாம் உனக்கு இவ்வளவு பிரியமாக இருந்த ஒருத்தியின் கண்ணீர் மட்டும்தான். அதனை நீ இவ்வளவு விருப்பமாக வேண்டிய என் கண்ணினாலேயே நீ பெறுவாய்..... ஈவிரக்கமற்ற தந்தையே!.....நீ ஒரு சொட்டுக் கண்ணீரும்விடாமல் எவ்வித நெற்றிச் சுழிப்புமின்றி சாகவேணுமென்று நான் சபதம் ஏற்றேன். ஆனால் எதனையும்விட அதிகம் அழகான இவ்விருதயத்தைக் காணும்போது என்னில் எழும் மிருதுவான மனோ எழுச்சிகள் என்னால் தாங்க முடியாதுள்ளது. ஆம்! என் கண்ணீரால் இவ்விருதயத்துக்குத் தாரை வார்க்கிறேன். இதனைச் செய்ய என்னை அனுப்பும்படி உன்னைக் கடவுள் தூண்டியுள்ளார். என் மகிழ்ச்சிக்கும் இன்பத்துக்கும் காரணமாயிருந்த ஏ! இருதயமே, எனது இயற்கைக் கண்ணீரானது உனக்குச் சேரவேண்டிய மரியாதையைச் செய்தபின், நானும் உன்னுடன் மற்ற உலகத்துக்கு வந்துவிடுவேன். உன்னைத் தாண்டிய அப்பொருளுடன் எனது ஆவியும் ஒன்று கலக்குமட்டும் நான் என்ன பேசுகிறேன்? இவ்வளவு பெருமிதத்துடன் நான்வர்ணித்த இந்த ஹிருதயம் எனது இருதயத்தின் ஆவியத்தனையையும் கொண்டுளது. அந்த ஆவிதான் எனது ஆவியையும் அழைப்பதாகக் கூறுகிறது. தன்னைவிட்டுப் பிரிந்து அரைக்கணமும் இருக்கவேண்டாமென்று கூறுகிறது....."

இளவரசியின் பிரலாபங்களும், அவளிடமிருந்து எழுந்த விம்மல்களும் அவளது கண்களிலிருந்து தாரை தாரையாக வடிந்து பாத்திரத்தை நிரப்பிய கண்

(15-ம் பக்கம் பார்க்க)

சிறு கதை:

அந்த உடை

"சாந்தினி"

"என்ன கமலம் கிணற்றுக் கயிற்றை பிடித்துக்கொண்டு யோசிக்கிறாய். ஏதோ இன்றைய வாலிபர்கள் தங்கள் காதலை பறிகொடுத்தமாதிரி யல்லவா நின்று யோசிக்கிறாய். அப்படி என்ன பிள்ளை எண்ணங்கள் இந்தநேரத்தில்?"

"இல்லை மாமி அப்படி ஒன்றும் இல்லை. என்ன உங்களை இந்தப்பக்கம் காணவில்லை."

"எனக்கு இரண்டு நாளாக உடம்பு சுகமில்லை. தண்ணீரில் திரியவேண்டாம் என்று இராசையா பரியாரியின் வேண்டுகோள். ஆகையால்தான் இப்பக்கமே தலைகாட்டவில்லை."

"உங்கள் வீட்டில் பெரிய ஆரவாரமாக இருந்ததே. ராசதுரையின் குரல்போல் கிடந்தது. என்னவாம் மாமி.

"ஓம் பிள்ளை. அவன்தான் தெரியாதே ஒன்றில் தொடங்கினால் அவ்வளவுதான் ஏதோ நாஷனல் போட வேண்டுமாம். அன்று பாஷையைப்பற்றி கர்ஜித்தான் இன்று என்ன வென்றால் உடுப்புப் பிரச்னைக்கு வந்து விட்டான். எங்கேயோ இந்த முச்சந்திவழியே பொறுக்கிக் கொண்டு வந்து இங்கே ஒரேமுழக்கம். இம்! அதேன் கேட்பான்."

"என்ன மாமி, அப்போ கால்சட்டை மேல் சட்டை எல்லாம் ஒரு பக்கம் போயிடுமோ?"

"அப்படி என்று தான் சுருட்டுக்கார சின்னத்தம்பி பத்திரிகையில் வாசித்ததாக கூறினான். அவனுடைய பேச்சை விடு பிள்ளை. ஆம் பிள்ளைகள் விரும்பினது போல உடுக்கட்டும். கொழும்பிலை பிள்ளை ஏதோ பாஷன் எண்டு கூறிக்கொண்டு உடம்பெல்லாம் தெரிய உடுத்துக் கொண்டு தெருவழிய திரியிறுளவையாம், உண்மைதானே?"

"அவளவையப்பற்றி என்ன மாமி சொல்லுறது. அவளவை அப்படி உடுத்துக் கொண்டு புறப்பட, மதிப்பாகக் கூட்டிக்கொண்டு திரிகிறகணவன்மாரையல்லவா கேட்க வேண்டும்."

"அதுவுஞ்சரிதான். இப்ப முளைக்க முன்னம்பெடியங்க எல்லாம் சீகரெட் குடிக்கப் பழகிவிடுகிறார்கள். உன்ரை பெடியன் ஆனந்தனும் குடிக்கிறவனே."

"என்ன மாமி சொல்லுறாய். கொழும்பிலை இருந்தாலும் என்ரை பிள்ளைகளை நான் காவாலிகளாக விடுவேனே. வெத்திலை கூட அவன் போடமாட்டான்."

"இல்லைப் பிள்ளை. உன்னைப்பற்றி எனக்குத் தெரியாதா, என்ன? என்ரை பேரப்பெடியன் ஏதோ பீடி குடித்திட்டான் என்று நேற்று தகப்பன் கட்டி வைத்து அடித்தான். அதுதான் கேட்டனான்."

"அப்படித்தான் குடுக்க வேண்டும். சரிமாமி வேலைகளை முடித்துவிட்டு அந்தப் பக்கம் வாறன்."

பிள்ளைகளின் விடுமுறைக்காக ஊருக்கு வந்து இருந்த அறிவு கூட மங்கிப் போய் விட்டது. கொழும்பில் இருந்தால் ரேடியோப் பெட்டியாவது கத்தும். செய்தி ஏதாவது எட்டும். இங்கேயோ எல்லாம் அடுத்த வீட்டு மாமிதான். அவள் ஒரு செய்தி ஏஜெண்டுக்குச் சமமானவள். அவள் காதை எட்டி விடாத செய்திகள் எதுவுமே இருக்காது.

தண்ணீர் குடத்தை தூக்கிக் கொண்டு வீட்டை அடைந்தேன். அப்போது என் கணவர் எங்கேயோ செல்வதற்கு தயாராக இருந்தார்.

என் கணவர் ஒரு ரயில்வே பென்சனியர். இரு கண்மணிகள்போல் எங்களுக்கு இரண்டே குழந்தைகள். கமலாவும் ஆனந்தனும். அவர் ஓய்வெடுத்த பிறகு எவ்வளவோ மாறிவிட்டார். முக்கியமாக தனது உடையில் அவ்வளவாக கவனம் செலுத்துவதே கிடையாது. ஆங்கில உடைதரித்து எவ்வளவு நீட்டாக ஆபீஸ்சென்றவர் இப்போது வேஷ்டியையும் நீட்டுக்கை பெனியனையும் தவிர வேறு உடை தரிப்பதேயில்லை.

அவர் புறப்படுவதற்கு முன் இந்த உடுப்புப் பிரச்னையைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று எண்ணினேன்.

"உங்களைத்தானே ஏதோ உடுப்புப் பிரச்னை ஒன்று வரப்போகிறதாம். எல்லோரும் வேஷ்டி பெனியன்தான் போடவேணுமாம் நிஜம்தானே?"

"ஏதேது 'நியூஸ்' எல்லாம் எங்கிருந்தோ கிடைத்துவிட்டதே!"

"சும்மா விளையாடாதேங்கோ மெய்தானே?"

"கமலம் இங்கேவா. இதெல்லாம் வெறும் பேச்சு இவை நடைமுறைக்குவரும் என்று நினைக்கிறாயா?"

"அப்படி என்றால் இதெல்லாம் வீண் வாய்பேச்சுத்தானே?"

"உனக்கொரு சம்பவம் சொல்லத்தான் வேண்டும். அடுப்பிலே ஏதும் இருக்குதா?"

"இல்லை இல்லை சொல்லுங்கோ"

"நீ ஏன் இவ்வளவு அக்கரை எடுத்து இந்த உடுப்புப் பிரச்னையைப்பற்றி கேட்கிறாய் என்றுகூட எனக்கு நன்றாகத் தெரியும். முன்நான் இந்த மேல் நாட்டு உடைகளை வெறுத்து இப்பேர்பட்ட உடைகளை அணிய தொடங்கியபோது நீ என்னுடன் ஒரு வாரமாக கதைக்காமல் இருந்ததைக் கண்டு நான் வருந்தியது உண்மைதான் கமலம். இன்று உன் மகனுக்கும் சட்டத்தால் இந்நிலை ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுகிறாய் இல்லையா?

"கமலம்! ஒருவனுடைய கௌரவம் இந்த உடைகளில்தான் இருக்கிறது என்று எண்ணுதே. அது தப்பு. அறிவும் குணமும் இருந்தால் அதுவே போதும். வேறு ஒன்றும் தேவையில்லை. இந்த இரண்டும்தான் இன்றைய மனிதர்களிடம் இல்லை. அறிவு இருந்தால் அவனிடம் குணம் இருக்காது. குணம் இருந்தால் அவனிடம் அறிவு கிடையாது. இப்படித்தான் மனிதர்கள் வாழ்ந்தார்கள். வாழ்ந்து கொண்டும் இருக்கிறார்கள்.

"இன்றுஅறிவாளிகள்தான் இந்த பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். ஏன் எழுப்பினார்கள் தெரியுமா?"

"அம்மா காப்பி" என்று கத்திக்கொண்டு என் ஆனந்தன் குறுக்கே வந்தான். என்றுமில்லாத ஒரு பெரிய பிரசங்கத்தை செய்து கொண்டிருந்த என் கணவர் உடன் நிறுத்தினர். பதினெட்டு வயது வந்தும் மாடுபோல் வளர்ந்தும் இன்னும் இந்த செல்லப்புத்தி அவனை விட்டுப் போகவில்லை.

ஏதோ மிஞ்சி ஆறிப்போய் கிடந்த டீயை அவனிடம் கொடுத்தேன். அவசரத்தில் குடித்துவிட்டு எங்கேயோ பறந்துவிட்டான். விடுமுறையல்லவா. பிள்ளைகள் வீட்டிலா இருக்கும்!

"கமலம்" என்று மீண்டும் அழைத்தார் என் அவர்.

"சென்ற ஞாயிறு கொழும்பில் நான் படம்பார்க்கச் சென்றது உனக்கு ஞாபகம் இருக்கிறதுதானே?"

"ஆமாம் நீ ஒன்றும் சொல்லாமல் மாட்டாய். இந்த [illegible] பார்க்கத்தான் கொள்ளை ஆரம்பித்த பிறகுதான் பிட்டியில் இருக்கும் அந்த புது படமாளிகைக்கு சென்றிருந்தேன். நான் எதிர் பார்த்தபடியே கயிறுபோல் கூட்டம் வளைந்து நின்றது. என் இடத்தில் சென்று நின்றேன். சரியாக 75 நிமிடங்கள் படம் தொடங்க இருந்தது. நான் நின்று இரண்டு நிமிடத்தில் பத்து இளைஞர்கள் என்னை தொடர்ந்து நின்றார்கள். இவர்கள்என்னை பார்த்துப் பேசிய பேச்சு என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. அப்பப்பா என் வாழ்க்கையிலேயே இப்படி ஒருபோதும் அனுபவிக்கவில்லை. இதையெல்லாம் அன்று உன்னிடம் கூறவில்லை. வருந்து வாய் என்றே விட்டுவிட்டேன். என்னைப் பார்த்து பேசுவதற்கு என்ன இருக்கிறது என்றுதானே யோசிக்கிறாய். வேறு ஒன்றும் இல்லை கமலம் என் உடைதான். என் உடையைப் பார்த்ததுத்தான் மேலும் கீழும் பார்த்து விழித்தார்கள். "மறந்துபோய் தமிழ் படம் நடக்கிறது என்று வந்துவிட்டாரோ" என்றார் ஒருவர். "கொழும்பிற்கு புதிதாக வந்திருக்கிறார்" என்றார் மற்றொருவர். "யாழ்ப்பாணம் எக்ஸ்பிரஸ்" என்றான் இன்னுமொரு துடுக்கன். இப்படி எத்தனை என்னால் தாங்க முடியவில்லை. ஆத்திரம் வந்தது அடக்கிக் கொண்டேன்.

"அப்பாடி! —ஒருவழியாக "டிக்கெட்" விற்க தொடங்கினார்கள். மெல்ல மெல்ல எறும்பு ஊருவது போல் கூட்டம் நகர்ந்தது. எனது "டிக்கெட்"டை பெற்றுக் கொண்டு உட்சென்றேன். சில கண்கள் என்னை பார்த்தன. இல்லை, என்னையல்ல எனது உடையை. ஒரு கரையோரத்தில் சென்று அமர்ந்தேன். எனது பக்கத்தில் இருக்கும் "சீட்டில்" ஒருவரும் வரவில்லை. வருவார்கள்—என்னைக் கண்டதும் வேறு பக்கம் திரும்பிக் கொண்டு வேறு ஆசனத்திற்கு சென்று விடுவார்கள். ஏன் வந்தோம் என்றுக்கூட எனக்குதோன்றியது. போய் விடுவோமா என்றுகூட எண்ணினேன். கியூவரிசையில் நின்ற அந்த வாலிபர்கள் என்னை சுட்டிக்காட்டி கேலி செய்து கொண்டிருந்தனர்.

"உந்த உடுப்பு எண்டால் அவங்களுக்கு என்னவாக்கும். யார் அந்தப் பொடியங்கள்—சிங்களவங்களோ" இடைமறித்துக் கேட்டேன்.

"இல்லை. அவர்கள் எங்களுடைய தமிழ் பிள்ளைகள் தான். அரைகுறைத் தமிழும் அரைகுறைஆங்கிலமும் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு தமிழனை தமிழ் உடை அணிந்ததற்காக தமிழ் இளைஞர்கள் கேலி செய்வதா? அதை நினைக்க எனக்கு ஆத்திரம்தான் கிளம்பியது"

என்னுடைய அவர் ஆவேச வெறிபிடித்தவர் போல காணப்பட்டார். அவர் கண்களிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர் உருண்டது.

"ஏன் எங்கண்டை தமிழ் பொடியங்கள் இப்படிக் கெட்டுப்போனங்கள்"

"அந்தப் பிள்ளைகளில் குற்றம் சுமத்த முடியாது. நானும் படிக்கிற காலத்தில் அப்படித்தான் இருந்தேன். உத்தியோகம் பார்த்த வேளையிலும் தேசிய உடை என்றால் காறி உமிழ்ந்தேன். [illegible] பின் தன் கண்களை வீதிக்கு ஓட்டினர். இருவர்-இரண்டு உழவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் உடலை துவைத்து கட்டியிருந்து வெள்ளை வேட்டிகள் அலங்கரித்தன. வைத்தகண் வாங்காது அவர்களையே அவர் பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்ன யோசிக்கிறியள்"

"அதோ நமது பண்பாட்டின் உண்மையான பிரதிநிதிகள்"

அலைபாயாவில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ளின் கதியையும் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்.

நான் எண்ணுவதையும் நம்புவதையும் தேவன் அறிவான். இம்முயற்சியிலேயே கடவுள் இருக்கிறார். அவரில்லாதிருந்தால் சென்ற சில தினங்களே நான் வாழ்ந்திருக்க முடியாது. புத்துணர்ச்சியும் உற்சாகமும் அவரின் உதவியாலேயே எனக்குக் கிட்டின.

பெரும்பான்மை மக்கள்—வெள்ளையர்களும் கறுத்தவர்களும்—என்னைத் தொடர்ந்து போராடும்படி கூறுகிறார்கள்.

ஒரு நல்ல செயலை உயிரைப் பொருட்படுத்தாது போராடித்தான் நிருபிக்க முடியும்.

—பிளிட்ஸ்

காரை நகரில் ஹர்த்தால்

சென்ற மாதம் 20ம் திகதி நடைபெற்ற ஹர்த்தாலைக் காரைநகர் மக்களனைவரும் நல்லெண்ணத்துடன் நன்கு வரவேற்று ஒற்றுமையை நிலைநாட்டினர்கள். அன்று காரைநகரில் உள்ள சகல கடைகளும் பூட்டப்பட்டிருந்தது. பாடசாலைக்குப் பிள்ளைகள் போகாதபடியால் அரைவாசிக்கு மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டிருந்தது. பெற்றோல் நிலையங்கள், நெற்குத்தும் மில்கள், சங்கக் கடைகள் மற்றும் பல ஸ்தாபனங்களும் மூடப்பட்டிருந்தன.

தமிழில் தபாற் கல்வி

★ ஆங்கிலம்
★ சிங்களம்
★ ஹிந்தி

ஆகியன ஆறுமாதங்களில் போதிக்கப்படுகின்றன.

G. C. E.-கு உரிய
75 ஆங்கிலக் கட்டுரைகள் ரூ. 3-00
50 தமிழ்க் கட்டுரைகள் ரூ. 3-00

விவரங்களுக்கு எழுதுக.

S. KUMARASWAMY, B. A (Cey.).
SHANTI COLLEGE,
7 - 18th Lane, Colpetty,
COLOMBO - 3.

"ரெனி"

மூளைப் பலவீனம், நரம்புப் பலவீனம், மறதி, மயக்கம், நித்திரை பங்கம், இந்திரிய ஸ்கலிதம், மூலச்சூடு, திரேக வரட்சி, உஷ்ணம், ஊரல், தடிப்பு, சொரி, உடம்பு கைகால் நடுக்கம், இருதயத் துடிப்பு, பித்த மயக்கம், வயிற்று நோவு, இரத்தக் கொதிப்பு போன்ற நோய்களை நீக்கி, இரத்தத்தையும் சுத்திசெய்து தாதுவையும் கட்டுப்படுத்தும்.

கிடைக்குமிடம்:

சென்ற் மேரி வைத்தியசாலை,
201, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாட்டிய தாரா"

"நாட்டியதாரா" என்றதும் ஒரு நடன கலாதாராவின் வாழ்வைச் சுற்றி படம் ஓடப்போகிறதோ என்ற ஆவலுடன் இருந்தேன். கலையின் அமர தாரகையான ஒரு 'ஆடிப் பிழைக்கும்' கலைஞர் படத்தில் கதாநாயகியாவார் என்ற ஒரு தனிப் பெருமை வேறு. திரை விலகியது. படம் 'ஓட' ஆரம்பித்தது.

'முடியுடை வேந்தர்' என்கிறார்களே அந்தரகத்தைச் சேர்ந்த கதாபாத்திரங்கள் தோன்றின.

தேவராஜன் ஒரு மன்னன். பாலராஜனுக்கு 'பட்டாபிஷேகம்' செய்து வைத்து உள்ளம் பூரிக்கிறான். மந்திரி மதியூகி தன் மகள் லலிதாவுடன் மன்னரிடம் வருகிறான். தன் மகளைக்கொண்டு அரசன் மகனுக்கு மாலை சூட்டுவிக்கிறான். 'எதிர்கால முடிச்சு'த் திட்டத்தை மந்திரி சொல்லி வைக்கிறான். அரசருக்கு, ஆத்திரம் பொங்குகிறது. 'அரசபரம்பரை—அந்தஸ்து' எல்லாம் பூதாகாரமாக அவர் சிந்தனையை உலுப்புகின்றன.

மந்திரி மதியூகன் மனம் சிறுகிறது. வஞ்சம் தீர்க்க திட்டமிடுகிறான். சூழ்ச்சியால் அரசனை கைது செய்கிறான். 'உயிர் தப்பிய' அரச மகன் சிரஞ்சீவி 'நாட்டு' மக்கள் மத்தியில் வளர்கிறான். அரசனுக்கு விசுவாசமாக இருந்த சேவகன் சிறைக் கோட்டத்தில் தள்ளப்படுகிறான். அவனது மகள் தாரா நாட்டிய தாராவாகிறாள். அழகையான அவள் தெருவில் ஆடிப்பாடிப் பிழைக்கிறாள்.

வஞ்சகத்தால் நாடாளும் மதியூகன் மகள் லலிதாவுக்கு பிறந்த நாள் கொண்டாட்டம். மகாராணியின் 'ஆரம்' அவளுக்கு அளிக்கப்படுகிறது. ஆனால் அதை நாட்டியதாரா 'பிக்பக்கட்' அடித்துவிடுகிறாள். அதைப் பெறுவதற்கான பிரயத்தனம் நடக்கிறது. சிரஞ்சீவி அதை 'கண்டெடுத்து' கொடுக்கிறான். லலிதாவின் பரிசும்-பார்வையும் கிடைக்கிறது. லலிதாவின் காதலை மறுத்த சிரஞ்சீவி கொள்ளைக்காரனை குற்றம்சாட்டப்படுகிறான். அவனை காப்பாற்ற தாரா 'சம பேத தான' யுக்திகளை எல்லாம் கையாளுகிறாள். இறுதியில் இருவரும் சிறைக்கூண்டில், இரத்தம் கொட்டச் சித்திரவதை.

சிறையிலிருந்து தப்பி தாரா வீட்டில் தலைமறைவாய் வாழ்ந்த அரசர் விரைகிறார். நயவஞ்சகம்—மதியூகனின் பேராசை அழிகிறது.

'நாட்டியதாராவில்' எந்த வித புதுமையுமில்லை. பழமைக்குப் பெருமையுமில்லை. மன்னர்கள்—மதியூகத்தால் சிம்மாசனத்தை பெற விழையும் மந்திரிகள், இதுதான் அரசபரம்பரைகளின் சரித்திரம். மன்னராட்சி முறையின் சரிதை.

மக்களை 'ஆட்டு மந்தைகள்' என்று மதியூகன் கூறுகிறான். அவனது கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்துக் கிளம்பாத வெறும் 'ஆட்டு மந்தைகளாகவே' மக்கள் சித்தரிக்கப்படுகிறார்கள்.

மந்திரியின் அக்கிரம ஆட்சியை எதிர்க்க ஒரு 'ஆண்' இல்லையே என்கிறாள் தாரா. இறுதியில் மன்னவன் மகன் சிரஞ்சீவி அந்த 'வீரனாக' வருகிறான். கொடுங்கோன்மையை எதிர்க்கக் கூடிய வீரர்கள் மன்னர் பரம்பரையில்தான் தோன்ற முடியுமா? மக்கள் மத்தியில் இருந்து அத்தகைய வீரச் செம்மல்கள் தோன்ற முடியாதா?

மற்றெல்லாத் தென்னாட்டுப் படங்களைப்போலவே இப்படமும் அரசரை 'உயர்ந்தவராக' சித்தரித்து உண்மையில் கெட்டவர்கள் அவர்களுக்குப் பின்னால் உள்ள 'மந்திரிகளே' என்று காட்டுகிறது—தற்கால சமூகப் படங்கள் 'வில்லனை' சிருஷ்டிப்பது போல. பேராசை பிடித்த மந்திரியின் வஞ்சனைகளை அம்பலமாகி 'செங்கோல் ஆட்சி' மீண்டும் 'நல்கோல்' ஆட்சி நடத்துகிறது. அரசர் ஆளும் முறையில் இருந்த கோளாறு மந்திரிகளின் சூழ்ச்சிதானா? அல்லது வாழ்வை—சரித்திரத்தை உருவாக்குவதில் மக்களுக்கு எவ்வித இடமுமளியாது மக்களை 'மந்தைகளாக' கருதி ஆண்ட அந்த ஆட்சி அமைப்பின் கேடா? பழைய கால சரித்திரத்தை நிச்சயமாக படங்களில் கொண்டு வரலாம். ஆனால் பழைமை என்றதுக்காக மன்னர்களின் 'அதிகார வட்டத்திற்குள்' நடக்கும் 'ஏட்டிபோட்டி'கள்தானா ஞாபகத்தில் வர வேண்டும்? மக்கள் சரித்திரத்தில் வகித்த பங்கை மூடிமறைத்து வெறும் 'செம்மறிக்கூட்டமாக' காட்டுவதுதான் பழமைக்கு பெருமை தரும் விதமா?

கதை—கருத்து எப்படி இருந்தாலும் 'நாட்டிய தாரா' பொழுதுபோக்க விரும்பும் ரசிகர்களுக்கு நல்ல விருந்தாக அமையலாம். பாட்டுகள், நடனங்கள், 'ஸ்டன்ட்' சம்பவங்கள், வாட்போர்கள் நிறைந்து காணப்படும் படம் ரசிகர்களை கவரத்தவறுதல்லவா? அபிமான நடிகர்களான நாகேஸ்வரராவும், அஞ்சலி தேவியும், ராமராவும் நடித்திருக்கிறார்கள்.

சினிமாஸ் லிமிட்டட்ஸ்தாபனத்தார் வெளியிட்டுள்ள 'நாட்டியதாரா, ரசிகர் பெருங் கூட்டத்தை தன் பக்கம் நாடவைக்கும்.

—என்.



சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் வெளியிடவிருக்கும் 'டாக்டர் சாவித்திரி'யில் ஒரு காட்சி. "என் வாழ்வையே உனக்கு எழுதி ஒப்படைத்து விடுகிறேன்" என்று "வாழ்வு உயிலை" சமர்ப்பிக்கிறார் திரு என். எம். நம்பியார் எம் என் ராஜத்திடம்?

கிழக்கிலங்கை கண்டறியாத கடுப்..

4-ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதால் அரசாங்க வைத்தியசாலைகளில் இட நெருக்கடி கணிசமான முறையில் ஏற்பட்டுள்ளதோடு அதிகாலையிலிருந்தே மருந்துச் சாலைகளில் நீண்ட "கியூ" வரிசையுமாகவே இருக்கிறது. குடிதண்ணீர் பிரச்னை ஒரு புறம் சகிக்க முடியாத நிலையில் வாட்டிவருகிறது. கிணறுகள் எல்லாம் குறிப்பிடக்கூடிய அளவிற்கு வற்றிவிட்டது. மட்டக்களப்பு பட்டினத்தில் குழாத்தண்ணீர் விநியோகம் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை கையாளப்பட்டுவருகிறது குறிப்பிடத்தக்கது. அதிகாலையில் ஆண்களும், பெண்களும், நீராடுவதற்காக ஏரிகளுக்கும், குளங்களுக்கும் படையெடுக்கத் தொடங்கியதோடு கடல் நீரில் நீராடவும் முன்வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. குடிநீர் பெறுவதற்காக பெண்கள் குடமும் கையுமாக காடுமேடாக அலைந்து திரிவது பெரும் கண்ணராவியாக இருக்கிறது. இந்த கோரவரட்சியால் இராக்காலங்களில் காட்டு மிருகங்கள் நாட்டுப் புறங்களுக்கு படையெடுக்கத் தொடங்கிவிட்டது. பட்டப் பகலில் பொத்துவில் வீதியிலும் கல்லோயா பள்ளத்தாக்கிலுள்ள உகனை வீதியிலும் மட்டக்களப்பு—பொலநறுவை வீதியில் வாகனேரி என்னும் இடத்திலும் காட்டு யானைகள் வீதியில் செல்லும் வாகனங்களைத் துரத்திக்கொண்டு வருவதாக தினசரி செய்திகள் எட்டிக்கொண்டிருக்கிறது. புதர்களிலுள்ள பாம்புகள்கூட இருக்க முடியாது வீதிகளில் நடமாடத் தொடங்கிவிட்டது. கால் நடைகள் புல் இல்லாக் கொடுமையால் நகர்ப் புறங்களில் ஒட்டப்பட்டிருக்கும் விளம்பரக் கடுதாசிகளையும் குப்பை கூளங்களையும்சாப்பிட்டுவருகிறது. மார்க்கெட்டுகளில் காய்கறிகளைக் காண்பது துர்லபமாக இருக்கிறது. ஆனால் ஆறு குளங்கள் வற்றியதால் மார்க்கெட்டுகளின் மீன் வரவு குறைந்துள்ளதோடு மீன் வேண்டுவதற்கு யாருமில்லாது கண்ட கண்ட இடங்களிலெல்லாம் மீன்கள் குவித்து வைக்கப்பட்டிருக்கிறது குறிப்பிடத்தக்கது. விதிகள் பகல் 10 மணிக்குக் கூட பாதசாரிகள் நடந்து செல்ல முடியாதவாறு புழுதியும் அக்கினிச் சுவாலையுமாகவே இருக்கிறது. காரியாலயங்களில்கூட இருக்க முடியாது என சர்க்கார் சிப்பந்திகள் லீவு போட்டுவிட்டு வீட்டிலே இருக்கிறதாகவும் சொல்லப்படுகிறது. கிழக்கு மாகாணத்தில் கடும் வரட்சியாக இருந்த போதிலும் மாலை வேளைகளில் குளிர் தாங்க முடியாது இருக்கிறது ஞாபகமூட்டத்

எதிர்வரும் பொதுத் தேர்தலில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

களிலுள்ள தமிழ்ப் பாடசாலைகள் எப்படிப் படிப்படியாகச் சிங்களப் பாடசாலைகளாக மாற்றப்பட்டனவோ அதேபோல் தமிழ்ப் பாடசாலை மொழி மாற்றத்திலும் சிங்களப் பாடசாலைகளாக மாற்றப்படும் என்பது திண்ணம். அதனால் வேலையை இழப்பவர்கள் தமிழாசிரியர்களே.

சிங்கள மொழி மாற்றம் தமிழாசிரியர்களுக்கு வெறும் மொழிப் பிரச்னை மாத்திரமல்ல. அவர்களின் சீவாதாரமான உரிமைகளைப் பாதிக்கும் தொழில் பிரச்னையாகும். ஆகவே இவ் விஷயத்தில் தமிழாசிரியர்களும், ஆசிரிய சங்கங்களும் உறங்கிக்கிடப்பது தமிழிற் கேற்பட்ட சாபக்கேடாகும்.

பாண்டிய மன்னனின் அரவணைப்பிலே சங்கம் வைத்துத் தமிழை வளர்த்தவர்கள் பண்டைய புலவர்களே. இவர்களின் சந்ததியில் வந்தவர்களாகக் கூறிப் பெருமைப்படும் தமிழாசிரியர்கள் சங்கம் வைத்துத் தமிழை வளர்க்க முற்படுவதில் தவறில்லை. இதுவரை காலமும் அவர்கள் பல தவறுகளை அறிந்தோ அறியாமலோ செய்திருக்கலாம். ஆனால் இனிமேல் அவர்கள் செய்யும் கருமங்களை தீர ஆலோசித்தே செய்யவேண்டும்.

அரசாங்க ஆதிக்கத்தைப் பெறுத எம்மொழியும், அம்மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் தமக்கென ஒரு சொந்த அரசை நிறுவாதவரை தம் மொழியையோ தம் நிலையையோ உயர்த்த முடியாதென்பது சரித்திரம் கண்ட உண்மை. தமிழ் மொழியே மன்னர்களால் வளர்க்கப்பட்டது.

பொருப்பிலே பிறந்து
தென்னன் புகழிலே
வளர்ந்து சங்கத்(து)
இருப்பிலே இருந்து வைகை
ஏட்டிலே தவழ்ந்த பேதை

என்று வில்லிபுத்தூரார் இயற்றிய பாரதத்தின் சிறப்புப் பாயிரத்தில் அவர் மகனார் வரந்தருவார் தமிழைக் குறித்துக் கூறுகிறார். இது தமிழ் மொழி வளர்ச்சியைக் குறிக்கும் உண்மைச் சான்றாகும். இதிலிருந்து தமிழ் மொழி பாண்டிய மன்னனின் ஆதரவிலே, புலவர்கள் நிரம்பிய சங்கத்திலே வளர்க்கப்பட்டது என்பது புலனாகும். ஆகவே தமிழாசிரியர் சங்கங்களோ, அல்லது தமிழ் சங்கங்களோ, தமிழரசின் ஆதரவின்றி தமிழ் மொழியை அல்லது அம் மொழியைச் சீவாதாரமாகக்கொண்ட ஆசிரியர்களின் நிலையை உயர்த்த முடியாது.



"நாட்டியதாரா" படத்தில் ஒயிலாக வளையும் மெல்லிடையாள் குப் பதிலாகாக ஓங்காரமாக மின்விடும் வாள்கள் உரையினை. றன. மயிர்க் கூச்செரியும்வாள் போர் நடக்கிறது



"இரு இரு என் இதயத்தை கொள்ளையடித்த உள்ள 'கொள்ளைக் காரனை' கூண்டில் ஏற்றுகிறேன்" என்று திட்டமிடுகிறாளா ஆந்திரத்து அழகி. ஆடிப் பாடிப் பிழைத்த அந்த நாட்டிய தாரா முன் கூட்டியே அவனின் இருதயத்தை கொள்ளை கொண்டு விட்டாளே. இந்த இரு 'கொள்ளைக் காரர்'களும் 'அரசன்' கோட்டையில் அடைபடப்போகிறார்கள் என்பதை அறிவார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் உரிமைப் போராட்டத்தில் தமிழர் பங்கு

கட்டுப்பாடான அஹிம்சை இயக்கமே நல்ல வழி

ஐக்கியமே மூக்கியமென மொழிந்து வந்த ஐக்கிய தேசியக் கட்சி 'சிங்களம் மட்டுமே' என்ற தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் அக்கட்சியின் அத்திவாரக் கொள்கைக்கே பங்கமேற்படுத்திவிட்டது. ஐக்கிய தேசிய கட்சி தனி சிங்களக் கட்சியாக மாறிவிட்டது என்பதைத் தமிழ் மக்கள் இப்பொழுது ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இதனால் இந்த நாட்டின் நிர்வாகத்திலும் பொது வாழ்விலும் தமிழ் மொழிக்குத் தக்க அந்தஸ்து அளிப்பதில் இன்று பெரும் பிரச்னை ஏற்பட்டிருக்கின்றது. இலங்கைவாழ் 80 லட்சம் மக்களில் 23 லட்சம் மக்கள் பேசும் மொழியை எந்த ஜனநாயக ஆட்சியும் புறக்கணிக்க முடியாதென்பதை அரசியல் அறிஞர்கள் அறிவர். சிங்களம்தான் பொது மொழியாக வேண்டுமென்று சொல்வது தமிழ் மொழிக்குள்ள ஆற்றலையும் பெருமையையும் அவமதிப்பதாகும். சிங்களத்தைத் தமிழர் மீது திணிக்கும் பாசிச மனப்பான்மை தடுக்கப்பட வேண்டும். இந்த நேரத்தில் தமிழ் மக்கள் தம்மை, தமது மொழியைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

'இன்று உலக வழக்கிலுள்ள மொழிகள் 2999. அவற்றுள் நாகரிகம்வாய்ந்த மக்களாற் பேசப்படுபவை சுமார் 15 மொழிகள்தான். அவற்றுள் ஒன்று தமிழ். அது மிகப் பழமையான மொழிகளுள் ஒன்று, இவ்வாறு மொழி ஆராய்ச்சி நிபுணரான பேராசிரியர் மாக்ஸ்முல்லர் ஒப்புக் கொண்டிருக்கின்றார். அத்தகைய அருந்தமிழ் மொழி இன்று ஈழத்தில் அழித்தொழிக்கப்படுமளவிற்கு ஆளும் கட்சியும் மற்றைய சிங்களத் தலைவர்களைக் கொண்ட கட்சிகளும் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன. இந்த நாச வேலை இன்று நேற்று ஏற்பட்டதல்லவென்பதைத் தமிழ் மக்கள் அறிவார்கள்.

இலங்கைக்குக் கிடைத்த சுதந்திரம் சிங்களவருக்குப் புதிதாக இருக்கலாம். ஆனால் தமிழர்களுக்குச் சுதந்திரம் புதிதல்ல. மொகன்சதரோ—கரப்பா காலந் தொடக்கம், பரத கண்டம் முழுவதையும் ஈழ நாட்டையும் தமிழர்கள் ஆதிக்கஞ் செலுத்திச் சுதந்திரத்துடன் வாழ்ந்தார்கள்.

ஈழ வேந்தனாகிய இராவணனும் தமிழன்தான் என்பதைத் தமிழர்கள் அறிவது போல் சிங்கள மக்களும் அறிவர். இந்த உண்மையை அவர்களால் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. 1815ம் வருடம் கண்டியரசனாகிய ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் தமிழ் மொழியை மதித்து வளர்த்தான். ஆங்கில அரசாங்கத்திற்கும் கண்டிய தலைவர்கட்குமிடையில் ஏற்பட்ட உடன்படிக்கையில் தமிழில் கையெழுத்திட்டிருப்பதை இன்று சிலர் மறைக்க எண்ணுவது ஏனோ? விக்டோரியா மகாராணி காலத்தில்-1826ல் ஈழத்தில் வாழ்ந்த சேர் முத்துக்குமார சுவாமியே முதன்முதல் ஆசியாக் கண்டத்திலேயே சேர் பட்டம் பெற்றவரென்பதை எவரால்தான் மறுக்க முடியும்?

இலங்கைச் சட்ட நிரூபண சபையில் தமிழரே முதன்மை வகித்துச் சுதந்திரத்திற்குப் பாடுபட்டதையும், சுதந்திர தாகத்தைச் சிங்களத் தலைவர்களுக்கு ஏற்படுத்தியதையும் அதே சிங்களத் தலைவர்களின் பிள்ளைகளும்—மருமக்களும்—உறவினரும் உணர முடியாமல் மனம்போன போக்கெல்லாம் போய்க்கொண்டிருக்கின்றார்கள். 1914ம் ஆண்டு சிங்களச் சாகியத்திற்கே சாவுமணி அடிக்கப்பட்டபோது—அவர்தம் உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்தேற்பட்டபோது அவர்களைக் காப்பாற்றிய பெருமை தமிழரையே சாரும். தேசிய காங்கிரஸை ஏற்படுத்திச் சிங்களத் தலைவர்கட்கு சுதந்திரம் என்ற சொல்லைக் கற்பித்துவைத்த தமிழன் சந்ததியினர் இன்று இன்னலடைந்து அரசியல் உரிமை இழந்து இருப்பதை தமிழ் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சேர் பொன். இராமநாதன், சேர் பொன் அருணாசலம்போன்ற தனிப் பெருந் தலைவர்கள் இல்லையேல் இன்று இந்நாடு சுதந்திரமடைந்திருக்க முடியுமா? தமிழ் மக்கள் அயராவுழைப்பும் மூளையும் இலங்கையை உருவாக்கியதென்பதைச் சிங்களத் தலைவர்கள்—புத்த பிக்குகள் மறந்துவிட்டார்கள்.

சிங்களத் தலைவர்கள் கூறுவதுபோல் இந்த நாடு அவர்கட்கு எவ்வளவு சொந்தமோ அதுபோல் நூற்றுக்கு நூறு தமிழ் மக்களுக்கும் சொந்தம் என்பதை மறக்கக்கூடாது. சொந்த நாட்டில்—சுதந்திர நாட்டில் அரசியல் அனாதைகளாக—வாய் பேசாத பொம்மைகளாக ஆக்கப்பட்டிருக்கின்றார்கள் தமிழ் மக்கள்.

எந்த ஒரு நாட்டு மக்களின் சிறப்புக்கும் அடிப்படைத் தத்துவமாக இருப்பது அந்நாட்டினரின் தாய்மொழி. அத்தாய்மொழி அம்மக்களின் இரத்தத்திலுள்ள உயிர்ப்பினும் உயிரினும் அதிகம் போற்றிக் காப்பாற்றப்பட வேண்டியது. அத்தகைய தாய்மொழிக்குத் தீங்கு ஏற்பட்டால் அதைத் தடுத்துத் தாய்மொழியைக் காப்பாற்றுவது நமது முதற் கடமையாக இருக்கவேண்டும்! இது தமிழ்த் தென்றல் திரு வி. க. கருத்தாகும்.

ந. சிவபாதம்

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவெதங்குங் காணோம்" என்பதனால்—"தமிழ்மொழியின் சிறப்புக் கண்டார் இங்கமரர் சிறப்புக் கண்டார்" என்பதனால்-மங்கையொருத்திதரும் சுகமும் எங்கள் மாந்தமிழ்க் கீடில்லை" என்பதனால்—தமிழ் மொழி ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்று தமிழ் மக்கள் விரும்பவில்லை. "தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்பதனால் தான் தமிழ்மொழி அரியணை யேறி அரசோச்ச வேண்டுமென்று விரும்புகின்றோம். எனவேதான் "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத் தமிழெனச் சங்கே முழங்கு" என்கிறோம். ஒரு மொழி ஆதிக்கத்தால் ஏனைய மொழிகள் நசுக்கப்படுமானால் அவற்றின் கலை, கலாச்சாரம், மானபிமானம் எல்லாவற்றிற்கும் சவக்குழி வெட்டியதாகும். எனவே தமிழ் மக்கள் கலை—கலாச்சாரம்—பண்பு காப்பாற்றப்பட வேண்டில் தமிழ் மக்கள் விழித்தெழ வேண்டும். உரிமை வேட்கைப் போராட்டத்தில் ஈடுபடத் தயாராக இருக்க வேண்டும். "தமிழுக்கு இன்னல் செய்வோனே என் தாய் தடுத்தாலும்விடேன்" என்ற உள்ள வைராக்கியத்துடன் வீறுபெற்றெழ வேண்டும்.

"சிங்களம் இந்நாட்டில் பெரும்பான்மையோரால் பேசப்படும் மொழி. ஆகவே தேசிய மொழியாக்குகின்றோம்" என்று ஆட்சியாளர்கள் கூறுகின்றார்கள். இதை கவனித்தால் சிங்கள நுழைப்பு மொழிப் போராட்டமல்ல கலைப்போராட்டம், கலாசாரப் போராட்டம் என்பது விளங்கும். மொழி விஷயத்தில் சிறுபான்மை, பெரும்பான்மை பார்ப்பது ஜனநாயகமாகும் என்று எந்த அரசியல் அகராதி சொல்லுகின்றது? "தற்கால ஜனநாயகத்தால் பலவகைப்பட்ட அபாயங்கள் ஏற்படுகின்றன. அவற்றுள் எல்லாம் மிகப் பயங்கரமானது சிறுபான்மையினரின் உரிமைகளுக்கும்—சுதந்திரத்திற்கும் சதா ஏற்படும் அபாயமாகும் என பிரபல நூலாசிரியர் திரு டபிள்யு எஸ். மெக்கனி "ஜனநாயகம்" என்றொரு கட்டுரையிற் கூறுகின்றார். அவர் கூற்று நமது நாட்டில் நிரூபணமாகி வருகின்றது. அதை ஆணிவேரோடு அசைத்து அழித்துவிட வேண்டும்.

தேசியம் என்பதெல்லாம் [illegible] காகி விட்டது. பிரதேச

வாழும் நாடாகி புத்தமதம் நிலவும் நாடாகிவிடும் என்பதை நாம் மறக்கக்கூடாது. சிங்களமே தேசிய பாஷையென்பது தமிழர்கள் ஈழத்தில் வாழ்ந்தார்கள், வாழ்ந்து வருகின்றார்களென்பது பழங்கதையாய்ப் பகற்கனவாய் செய்வதற்கு எடுக்கும் சூழ்ச்சி திட்டமேயாகும். இதில் நயவஞ்சகமும், சர்வாதிகாரமும் தொனிக்கின்றன. இந்நாட்டில் இன்

(9-ம் பக்கம் பார்க்க)

திடுக்கிடும் சம்பவங்களுள்ள
'ஹி.ஐ.டி.சந்துரு'
துப்பறியும் நாவலை
"ஆனந்த விகடனி"ல் படியுங்கள்!

தமிழ் உரிமைப் போராட்ட நிதி

தமிழ் மொழி, தமிழ்ப் பேசும் இனம், தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் பிரதேசம் ஆகிய எல்லாம் அழிந்தொழியுமோ என்னும்படி அபாயகரமான தாக்குதல்களுக்குள்ளாகியிருக்கின்றன. முதற்கண், உயிரினும் மேலான தாய்மொழியை—தமிழ் மொழியை—பாதுகாக்க வேண்டியிருக்கிறது. மொழி அழிந்தால் இனம் அழியும்; இனம் அழிந்தால் ஈழத் தமிழகம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும்.

மொழிப் போராட்டம், இனப் போராட்டம், நிலப் போராட்டம் யாவையும் நடத்தி வெற்றிகாண வேண்டிய தவிர்க்க முடியாத கடமை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒன்றைத்தான் சார்ந்திருக்கிறது. ஏனென்றால் தமிழ் அரசுக் கட்சியொன்றுதான் இந்த அபாயத்தை ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்துரைத்து, அன்றுமுதல் இன்றுவரை நிலையான கொள்கையோடு குலையாத உறுதியோடு தமிழ் உரிமைக்காக போராடி வருகிறது.

1949ம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தோம். கட்சியின் கொள்கைகளை தமிழ்ப் பேசும் மக்களாகிய உங்கள் திருமுன் படைத்தோம். அக்கொள்கைகளின்மீது 1952ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டோம். எங்கள் கொள்கைகளை அப்போது தமிழ்ப் பொதுமக்களாகிய நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் எங்களைத் தோற்கடித்தீர்கள். ஆயினும்நாங்கள் தளரவில்லை. காரணம் எங்கள்நோக்கம் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதல்ல. தமிழ் மொழியைத் தமிழ் இனத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதே எங்கள் இலட்சியமாக இருந்தது. எனவே எங்கள் கொள்கைகள் என்றுவது வெற்றி காணும் என்ற நம்பிக்கையோடும் உறுதியோடும் தமிழ்ப் பணியை ஆற்றி வந்தோம்.

இன்று நாங்கள் எடுத்துக் கூறிய கொள்கைகளையே மாற்றாரும் ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டுவிட்டது. அரசாங்கத்தோடு ஒட்டியிருந்தவர்களும் ஆதரிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. தமிழ்ப் பேசும் மக்களுக்கு வேறு வழி இல்லை என்ற உண்மை புலனாகிவிட்டது.

இந்த நிலையில் எங்கள் போராட்டத்தை மேலும் மும்முரமாகத் தொடர்ந்து நடத்த வேண்டியிருக்கிறது. இதற்கு வேண்டிய ஊழியர்களும், உழைப்பாளிகளும் இருக்கிறார்கள். திட்டமும் கொள்கையும் இருக்கின்றன. திறமையும் உறுதியும் இருக்கின்றன. வேண்டியிருப்பது நிதி ஒன்றுதான்.

வேண்டிய நிதியைத் தமிழ்ப் பேசும் மக்களாகிய நீங்கள்தான் தந்து தமிழ் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டியிருக்கிறது. சத்தியாக்கிரக அடிப்படையில் பலவிதமான போராட்டங்களை நடத்த நாம் திட்டமிட்டுள்ளோம். இதற்கு நிதி தேவை.

பொதுத் தேர்தல் எதிர்நோக்கி வருகிறது. தமிழ்ப் பேசும் மக்கள் இந்த நாட்டில் வாழ்வதா மாள்வதா என்பதைத் தீர்மானிக்கும் ஒரு பலப் பரீட்சையாக இந்தப் பொதுத் தேர்தல் அமையப் போகிறது. தேர்தலுக்கு முன்பு மக்களிடையே போதிய பிரசாரம் செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கும் நிதி தேவை.

எனவே தமிழ்ப் பேசும் பொதுமக்கள் தங்களால் இயன்ற நிதியுதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். நிதியுதவி அளிப்பவர்கள் தங்கள் பெயர்களைப் பகிரங்கப்படுத்த விரும்பாவிட்டால் அவை இரகசியமாக வைக்கப்படும். நிதி அனுப்புபவர்கள் யாவருக்கும் பற்றுச் சீட்டுகள் அனுப்பப்படும்.

"நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்"

நிதி அனுப்ப வேண்டிய முகவரி:

கௌரவ பொருளாளர்,
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி.
16, அல்பிரட் ஹவுஸ் கார்டன்,
கொழும்பு—3.

இங்ஙனம்,

கு. வன்னியசிங்கம்
தலைவர், இ. த. அ. கட்சி.

ஜே. வி. செல்வநாயகம்
பொதுச் செயலாளர்.
இ. த. அ. கட்சி.

20—1—56.

Advt.

எல்பின்ஸ்டன் ரெக்ஸி
காலை 10-30, பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9-30
அஞ்சலிதேவி, பி. கண்ணாம்பா,
கே. தங்கவேலு, வி. நாகையா,
எஸ். வரலட்சுமி நடித்த
"நாகபஞ்சமி"
மகத்தான 5-வது மாதம்!
கெயிட்டி
பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கும்
குலேபகாவலி
மகத்தான 5-வது வாரம்!
செல்லமஹால்
காலை 10-30, பிற்பகல் 2-00, மாலை 6-00, இரவு 9-30
"நீதிபதி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்மதி புதிய மருமக்கள்

1. செல்வி காந்திமதி நாகராசா மட்டக்களப்பு.
2. கே. செல்லமுத்து, சாவகச்சேரி.
3. வீ. கணேசமூர்த்தி, கல்லடி உப்போடை.
4. வி. சபாரத்தினம், காரைநகர்.
5. வி. கந்தையா, மட்டக்களப்பு.
6. சே. சிவராசா, உடுப்பிட்டி.
7. க. வீரகத்தி, காரைநகர்.
8. செல்வி சி. குணபூஷணி, கைதடி.
9. செ. மு. பாரூக், மாத்தளை.
10. அ. அ. மஹ்மூது, மாத்தளை.
11. ஏ. எம். முகம்மது வெலிகம.
12. எம். ரி. எம். அமீன், தங்கல.
13. சா. தரேஷ், புத்தளம்.
14. க. தம்பிராசா, சாவகச்சேரி.
15. செல்வி சரோஜினி கணபதிப்பிள்ளை, யாழ்ப்பாணம்.
16. ந. பொ. கனகலிங்கம், நல்லூர்.
17. ஏ. முத்துமுகம்மது, ஹால்கரேஞ்ஞெயா.
18. எஸ். எச். ஹமீது, றம்புக்கன.
19. ஆ. சற்குணம், நாவலப்பிட்டி.
20. க. சபாரத்தினம், கரவெட்டி.
21. த. அருளாநந்தம், அல்வாய்.
22. செல்வி கா. சாந்த நாயகி, சாவகச்சேரி.
23. ப. செபமோகரத்தினம், வேலணை.
24. இ. பிரணகார்த்திகர சர்மா, கோப்பாய்.
25. ச. தங்கராசா, குருக்கள் மடம்.
26. அ. மூசின், மாத்தளை.
27. சின்னப்பு விஜயபாலன், கொள்ளுப்பிட்டி.
28. பொ. தி. சம்பந்தன், யாழ்ப்பாணம்.
29. வை. கந்தசாமி, தெல்தொட்ட.
30. பா. ச. ஜெகதீசன், மட்டக்களப்பு.
31. செல்வி க. குணநாயகி, மட்டக்களப்பு.
32. மீ. ஜெய்னுலாப்தீன், கண்டி.
33. து. பாலசிங்கம், யாழ்ப்பாணம்.
34. மு. தில்லைநாயகம், கரவெட்டி.
35. இ. ஆ. இரத்தினராசா, புத்தூர்.
36. தா. சுப்பிரமணியம், திருகோணமலை.
37. க. தியாகராசா, மட்டக்களப்பு.
38. ப. முரசு, புத்தளம்.
39. எம். வை. எம். மீயாத், ஹெம்பாதகம.
40. ஏ. ஜீ. ஆனந்தம், யாழ்ப்பாணம்.
41. செல்வி க. சிவசோதி, மூல்லைத்தீவு.
42. செல்வி கு. பூமணி, பெரியபோரை தீவு.
43. ச. யோகலிங்கம், சாவகச்சேரி.
44. இ. தியாகராசா, நீர்வேலி.
45. எம். எல். அகமது லெவ்வை, கல்முனை.
46. க. மாணிக்கம், புங்குடுதீவு.
47. வி. வாரித்தம்பி, மீசாலை.
48. செ. பாலச்சந்திரன், மருதானை.
49. சி. பொன்னம்பலம் காந்தான்குடி.
50. செ. இரத்தினசிங்கம், யாழ்ப்பாணம்.

வளர் மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்.

அன்பான மருமக்களே!

'வளர்மதி'யின் வளர்ச்சிக்கு மக்கள் காட்டும் ஆர்வம் மாமாவைத் திகைக்க வைத்திருக்கிறது! பிரதி வாரமும் சுமார் 100 மருமக்கள் எழுதுகிறார்களென்றால் பாருங்களேன்.....!

மருமக்கள் இலக்கங்களுடன் மருமக்கள் ஜாபிதா இவ்வாரம் வெளியாகிறது. எல்லா மருமக்கள் பெயர்களும் வரிசைக்கிரமமாக வெளியிடப்படும். அங்கத்தவர்களும் மற்றவர்களும் விஷயங்களை எழுதலாம்.

1, 2, 3ம் இலக்க மனுப்பத்திரங்கள், ஒவ்வொன்றும் 3 தடவைகள் வெளியிடப்பட்டன. இனி 1, 2, 3, 4, 5, 6 இப்படி இலக்கங்கள் தொடரும்.

'சந்திராவின் படம்' பலரின் சிந்தனையைத் தூண்டியுள்ளது. 'என் பெயரையே பூர்த்திக் கதைக்கு வைத்துவிட்டீர்களே மாமா' என்று மட்டக்களப்பு மருமகள் வீ. சந்திரா எழுதியிருக்கிறாள். அதிகமானோர் தங்கள் கதைகளை அனுப்பியிருக்கிறார்கள். பூர்த்திக் கதை முடிவு சிக்கிரம் வெளியிடப்படும். மகிழ்ச்சிதானே.....

மிக்க அன்புள்ள,
சுதந்திரன் மாமா.

குணமும் குற்றமும்

"குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்" என்பது வள்ளுவர் கூற்று. மனிதனுகப் பிறந்த சகலருக்கும் குணமும் குற்றமும் வருவது உலக இயல்பு. நற்குணமுள்ளவனுய் வர விரும்புபவன் நற்குணமுள்ளவனை நினைக்க வேண்டும். தீய குணமுள்ளவனின் மனம் எப்போதும் எரிந்துகொண்டே இருக்கும்.

பிறரை ஆதரிப்பவனும் நேசிப்பவனும் தருமம் செய்பவனும் நற்குணம் உள்ளவன். ஓர் மரத்தில் காயும் கனியும் கலந்திருப்பது போல மனிதனில் குணமும் குற்றமும் கலந்திருக்கும். பிறரை ஆதரிக்காதவனும் தருமம் செய்யாதவனும் தீய குணமுள்ளவன் என்றே சொல்ல வேண்டும். நற்குணமுள்ளவன். நற்செய்கை செய்தால் தீய குணமுள்ளவன் அதைக் குற்றமென்றே கூறுவான். நற்குணமுள்ளவர் எப்போதும் உலகத்தாரால் போற்றப்படுவர். மானிடப் பிறவி எடுத்தமக்களிடையே குணமும் குற்றமும் தோன்றச் செய்யும்.

—செல்வி கு. பத்மாவதி
மண்டூர்

நாம் செய்ய வேண்டிய சில

காலையி லெழுவோம்—நன்றுய்
கடவுளைத் தொழுவோம்
வேலைகள் செய்வோம்— சோம்பலை
வெட்டி வீசிடுவோம்.

தோட்டவேலை செய்வோம்—பலபல
தொழில்கள் கற்றிடுவோம்
நாட்டின் வறுமையை—விரட்ட
நன் முயற்சி செய்வோம்.

வள்ளுவம் படிப்போம்—அந்த
வழி வழி நடப்போம்
கொள்ளை நீதி சொல்லும்—ஔவை
குறை வறப் பயில் வோம்

கவிதைகள் புனைந்திடுவோம்—நல்ல
கட்டுரை வரைவோம்
புவியோர் மெச்சிடும்—பெரியோர்
போல வாழ்ந்திடு வோம்.

அ. சிவசுந்தரம்,
திரியாய்.

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக் குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப்பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால்பெட்டி இல 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

வளர் மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 2.

பெயர்.....

பாடசாலை.....

விலாசம்.....

.....

....

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம்

வளர்மதி

வானிடை உலவிய சந்திரன் கானிடை புகுந்துவிட்டால் உலகம் இருட்டமைதியில் ஆழ்ந்து விடுகின்றது; வெண்ணிலவு இல்லையே என்ற வேதனை, களிப்பு களி நடம்புரிந்த எம் உள்ளத்தையும் இருட்டாக்கிவிடுகின்றது. துள்ளிக் குதித்து பள்ளிக்கோடும் பாலர் தொடக்கம் பல்லுவிழுந்த கிழவர்வரை பால் நிலவைப் பார்ப்பதில் ஒரு தனி இன்பம் பெறுகிறார்கள். மழலை கொட்டும் குழவிக்கு, மதி காட்டி மகிழ்வூட்ட அன்னையாள் முற்றம் ஏகுவாள். கண்கள் காரிருளைக் கிழிக்கும் திங்கள் நோக்க, அவள் அமுதவாய் அம்புலி அம்புலி என்று இனிமையான பண்ணிசைக்க பச்சைக்குழந்தை தன் பிஞ்சுக்கரம் தட்டி, எக்காளமிட்டுச் சிரிக்கும். சந்திரன் ஆட்சியிலே, வலைஞரும், கவிஞரும், கருத்தொருமித்த காதலரும் பெருமகிழ்வெய்துவர். வலைஞர் தம் வலைதூக்கி, துடுப்பின் துணைகொண்டு, திசையறிந்து திகிலின்றி நெடுந்தூரம் கடலிலே அலைகிழித்துச் செல்வர். காயும் தேன் நிலவின் இன்பம் நுகர காதலர் நறுமணம் கமழும் நல்ல நந்தாவனம் நோக்கி ஏகுவர். கவிஞர் இயற்கை இனிய இடம் தேடி, தம் கற்பனைத் திறத்தால் கலை வடிக்கப் போவர்.

இத்தகைய இருள் நீக்கி இனிமை கொடுக்கும் காரிருள் விரோதியைக் காணவில்லையென்றால் யாழும் குழலும் குழைத்த மொழி பேசும் குழந்தைகளுக்குத் துக்கம். பள்ளிச் சிறுருக்கு வெளியே செல்லப் பயம், வலைஞர் வலையே தொடமாட்டார்கள். கவிஞர் இயற்கையையே காணமாட்டார்கள். அவர்கள் எண்ணமெல்லாம் தேய்ந்துபோன சந்திரன் எப்போ வாழ்ந்து வருவான் என்பதுதான். ஆகாயத்தைப் பார்த்துப் பார்த்து அவர்கள் கழுத்தும் சுளுக்கெடுத்துவிடும். தேய்ந்துவிட்ட சந்திரன் வளர்மதியாகி வளர, வளர அவர்கள் உள்ளமும் வளர்ந்துகொண்டே போகிறது. மதிமறைந்ததால் தடைப்பட்டுப்போன சில தொழில்களும் மறுமுறையும் வளர்ச்சி பெறுகின்றன. எனவே மண்ணிலுள்ளோர் எண்ணத்தில் மங்காத வாழ்வு பெற்றுவிட்ட வளர்மதியே நீவாழ்க! மாணவர் சிந்தைக்கு பெருவிருந்தளிக்கும் சுதந்திரன் வானத்து வளர்மதியே நீயும் வாழ்க!

—பொ. தி. சம்பந்தன்.

தெரிந்து கொள்ளுங்கள்

1. உலகத்திலே முதன் முதலாகச் சீனப் பாஷையில் தான் அகராதி தோன்றியது.

2. உலகத்திலேயுள்ள அகராதிகளுக்குள் மிகப் பெரியது சீன அகராதியே. 1150 பாகங்களைக்கொண்ட இவ்வகராதி இப்பொழுது பிரிட்டிஷ் கண்காட்சிச்சாலையில் இருக்கிறது.

3. உலகத்திலே மிகவும் விரைவாகப் பேசக்கூடிய பாஷை பிரான்ஸ். விநாடி ஒன்றுக்கு 350 சொற்களுக்குமேல் பேசலாம்.

4. உலகத்திலே மிகநீண்ட திண்ணை தென்னிந்தியாவிலிருக்கும் இராமேஸ்வரம் கோவில் திண்ணையே. இது 2145 அடி நீளமுடையது.

5. சிலந்திகள் மலைகளிலே மற்றைய உயிரினங்களைக் காட்டிலும் அதிக உயரத்திலே வசிக்கக்கூடியன.

6. நாய் குரைக்குஞ் சத்தத்தைப் பூமியின் தரைமட்டத்திலிருந்து நான்குமைல்களுக்கு மேல் கேட்க முடியும்.

7. மற்றைய மிருகங்களைக் காட்டிலும் கூடிய காலம் வசிக்கக்கூடியது திமிங்கலமே. இது 500 ஆண்டுகள் வரை வாழும்.

—ச. மகேந்திரன்

மாமா பதில்

எஸ். சிவகுமார், கொழும்பு

உமது நீண்ட கடிதத்தைப் படித்தேன். உமது முயற்சிகளுக்கு மாமாவின் பூரண ஆதரவுண்டு. வெளிவரவில்லையேயென நிறுத்தாமல் தொடர்ச்சியாக எழுத வேண்டும். சரிதானே?

வீ. கணேசமூர்த்தி, கல்லடி—உப்போடை

எல்லோரும் தவறுவது இயற்கைதானே கணேஷ்.... கவிதையும் நன்று. ஆனுல் கவிமணியின் கவிதையை நினைவுக்குக் கொண்டுவந்தது!

நா. பரமலிங்கம், யாழ்ப்பாணம்

"தமிழகத்தின் தலைசிறந்த கவிஞ"னைப் பார்வையிட்டேன்.

பி. இராமக்குட்டி, தம்பிலுவில்

விடுகதைகள் கிடைத்தன. வெளியிட முயலுவேன்.

செல்வி எஸ். தனலட்சுமி, மட்டக்களப்பு

"கொய்யாப் பழக்குலை" இனிப்பாகவே இல்லையே..... நல்ல முயற்சிதான்.

அ. சிவசுந்தரம், திரியாய்

நன்றுக கவிதை எழுதுகின்றீரே.....நிறைய எழுதி அனுப்பவும். பொருத்தமானவைகளை மாமா வெளியிடமாட்டேனு என்ன?

செல்வி க. தபோநிதி, நுகேகொட

"சூரியோதயம்" நன்று. பாடசாலையிற் படிக்காதவர்களும் "வளர்மதி"யில் சேரலாம்.

செல்வி வீ. சந்திரா மட்டக்களப்பு

"உண்மைச் சினேகிதி"யின் "ஒற்றுமை"யைப் பார்வையிட்டேன். திறமையுடன் எழுதியிருக்கிறீரே..... மாமாவின் பாராட்டுதல்கள்! தொடர்ந்து எழுதலாமல்லவா?

எச். ஏ. வர்ணகுலசூரிய திருகோணமலை

ஒலி அலைகள் பற்றிய பிழையைக் கவனமாகக் கண்டுபிடித்து விட்டீரே! 16, 18 வயதுள்ள இளைஞர் வளர்ச்சிக்குத்தான் "வளர்மதி" உதவுகிறது. பெரிய கதைகளை வெளியிட இடமில்லையே.....

செல்வி ரி. ஜெயலட்சுமி மண்டூர்

"பூள்ஸ்காப்" என்ற ஆங்கிலச்சொல் கருத்தை இன்னும் தெளிவாக விளக்கவே உபயோகப்பட்டது. தமிழில் எழுதினுல் உண்மையில் இனிமையாகத்தான் இருக்கும்.....! அருமையான கேள்விதான்.

எம். சபாரத்தினம், சித்தாண்டிகுடி

மாமாவுக்கு ஆயிரக்கணக்கில் கேள்விகள் வருகின்றன சபாரத்தினம்! வரிசைக்கிரமமாகத்தானே பதிலளிக்க வேண்டுமில்லையா..... தாமதத்திற்கு அதுவேதான் காரணம்.

மு. பாரூக், கண்டி

சித்திரங்களை வரைந்து அனுப்பவும். சிறந்ததாகவிருந்தால் வெளியிடலாம் பாரூக்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்:

"சம்பளப் பிரச்னையைவிட பாஷைப் பிரச்னையே முக்கியம்"

ஹட்டன் தமிழாசிரியர் சங்க கூட்டத்தில் திரு. திருச்செல்வம்

"தமிழ் மொழிக்குஇன்று பேராபத்து எற்பட்டுள்ளது.தமிழாசிரியர்களாகிய எமக்குச் சம்பளப் பிரச்னையைவிட முக்கியமானது பாஷைப்பிரச்னையே. இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு தமிழாசிரியர் சங்கம் முன்வரவேண்டும். இல்லையேல் தம்மை தமிழாசிரியர் என்று நாமஞ்சூட்டி அழைப்பதையே மாற்றிக் கொள்ள நேரிடு மென்பதை எச்சரிக்க விரும்புகிறேன்."

இவ்வாறு சமீபத்தில் ஹட்டன் அர்ச்யோன் பொஸ்கோ கல்லூரியில் நடந்த மத்திய மாகாணத் தமிழாசிரியர் சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் ஆசிரியர் திருச்செல்வம் பேசுகையில் கூறினர்.

"இதுவரை காலமாக அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் தொழிற் சங்கமாகப் பதியப்படாமலிருந்த பெரும் குறை இப்போது நீங்கிவிட்டது. இது நம்மனோவருக்கும் மகிழ்ச்சி தருவதாகும். நமது சங்கம் தொழிற்சங்கமாகப் பதியப்படாதிருந்தமையில் கடந்த காலத்தில் சுயபாஷா ஆசிரியர்களின் பிரதி நிதிகளாக நமது சங்கப்பிரதிநிதிகளை அரசாங்கம் ஏற்கப் பின்வாங்கியது. இனிமேல் அரசாங்கம் அவ்விதம் செய்ய முடியாது." என்று சங்கத் தலைவர் திரு த. ச. சண்முகதாசன் கூறினர்.

பின்பு ம. மா. த. ஆ. ச. வருடாந்தக் கூட்டத்தை இவ்வாண்டு பங்குனிமாதம் 17 ம் திகதி நாவலப்பிட்டியில் நடத்துவது தென்று தீர்மானிக்கப்பட்டது.

திருவாளர்கள் நா. முத்தையா, என். மகாலிங்கம் முதலியோர் பேசிய பின்னர் தமிழ் மக்களிடையே ஐக்கியத்தை உருவாக்கப் பிரசாரம் செய்வதற்கு ஒருகுழுவினர் நியமிக்கப்பட்டனர். அக்குழுவினர் வெளியிடும் முதலாவது பிரசுரத்திற்கு 50 ஆயிரம் துண்டுப் பிரசுரங்களைத் தமது சொந்தச் செலவில் அச்சிட்டுத் தருவதாக திரு நா.முத்தையாகூறினர்.

மத்தியமாகாணத் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி திரு. டொ. சை. க. வணசிங்கா பேசுகையில் அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கம் இதுவரை தொழிற்சங்கமாகப் பதியப்படாதிருந்த குறை நீக்கப்பட்டுவிட்டதென்றும், ஒரு தொழிற் சங்கத்தின்பெலனும், அதை அரசாங்கம் கௌரவிக்கும் தகமையும் வேண்டுமானால் அதன் அங்கத்தினர் தொகையைப் பெருக்கியிருத்தல் வேண்டுமென்றும் கூறினர்.

இஸ்லாமிய முன்னேற்ற சங்கம்

முகத்துவாரம் இஸ்லாமிய முன்னேற்ற சங்கத்தின் விசேஷப் பொதுக் கூட்டமொன்று சமீபத்தில் நடைபெற்றது. கீழ்கண்ட உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:—

போஷகர்: ஓ. ஏ. மர்ஜான், உப போஷகர்கள்: ஜனப் எம். எம். ரசீத், ஜனப் எச். ஏ. மர்ஜான், டாக்டர் இஸ்ட் எம். செய்டீன், தலைவர்: அல் ஆலிம் எம். எச். எம். ஷவாப்தீன், உப தலைவர்: ஜனப் ஐ. எஸ். தான், கூட்டுக் காரியதரிசிகள்: ஜனப் டி. எம். ரஹீம், ஜனப் எம். என். எம். ஷவாப்தீன், விளையாட்டு காரியதரிசி: ஜனப் எல். டி. மர்ஜான், மார்க்க காரியதரிசி: ஜனப் எம். வை. எம். ஏ. அஸீஸ், நடப்பு காரியதரிசி: ஜனப் இஸட் எம். இஸ்ஸடீன், கௌரவ பொக்கிசாதிபர்: ஜனப் எம். எம். புஹாரி, உபபொக்கிசாதிபர் ஜனப் எஸ். டி. எம். மசாஹிம், நூல் நிலைய அதிபர்: ஜனப் கே. எம். எம். சனூன், உப நூல் நிலைய அதிபர் ஜனப் எம். எல். எம். சனூன், கமிட்டி அங்கத்தவர்கள்: ஜனப் டி. ஈ. எஸ். மர்ஜான், ஜனப் ஏ. ஆர். ஏ. சுக்கூர், ஜனப் ஏ. ஸி. எம். அன்சாரி, ஜனப் ஏ. எம். எம். முகியித்தீன், ஜனப் டி. பி. சேஜோயோ, மார்க்க கமிட்டி அங்கத்தவர்கள்: ஜனப் எஸ். ஏ. ரஹீம், ஜனப் ஏ. டிபிள்யு எம். மசாஹிர், ஜனப் ஏ. எம். பாசீ, கணக்கு பரிசோதகர்: ஜெ. எஸ். நூர்த்தீன்.

துறை நீலாவணையில் பூரண வெற்றி

துறைநீலாவணை தமிழ் அரசுவாலிப முன்னணியினர் சென்ற மாதம் 20ந் திகதி நடத்திய ஹர்த்தாவில் மகத்தான வெற்றியடைந்துள்ளார்கள். அன்று காலை 6 மணியிலிருந்துகடைகள் யாவும் மூடப்பட்டும், கறுப்புக் கொடிகள் தெருக்கள், வீடுகள் யாவற்றிலும் தொங்கவிடப்பட்டும், பாடசாலைக்கு பிள்ளைகளைப் போகாமல் தடுத்து நிறுத்தியும் விவசாகிகளை வயல்களுக்குப் போகாமல் தடுத்தும், கிராமம் எங்கெனும் அமைதியாக ஹர்த்தாலை அனுஷ்டிக்கும்படி செய்தார்கள்.

இளங்கோ மன்றம்

இளங்கோ மாணவர் மன்றம் துவக்க விழா சமீபத்தில் செட்டியார் தெரு 121 இலக்க இல்ல மேல்மாடியில் உள்ள பாரதி அரங்கில் திரு வீர. சோம. வீரப்ப செட்டியார் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்கண்டவர்கள் பேசினர்கள்:

உ. தமிழ்செல்வன், இரா. சிலையப்பன், ஆ. சிதம்பரநாதன், க. பழனிச்சாமி, வீர. சோமசுந்தரம், ஆ. காளையப்பன்.

கீழ்கண்டவர்கள் மன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர்: உ. தமிழ்செல்வன், பொருளாளர்: வீர. சோமசுந்தரம், செயலாளர்: இரா. சிலையப்பன். கூட்டத்தின் இறுதியில் தமிழுக்கு சம அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும் என்று ஆட்சியினரைக் கேட்டுக்கொள்வதென்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேறியது.

தாளங்குடாவில் உண்ணாவிரதம்

தாளங்குடாவில் ஹர்த்தால் தினமன்று கன்னித் தமிழ் கலங்கமுறும் நிலையயிட்டு கறுப்புக் கொடியேற்றி கண்ணகை அம்மன் கோயில் வீதியில் இளைஞர் சங்கத்தினர் எட்டு ஆண்களும் வீரப்பெண்மணிகள் இருவரும் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர். இதேயிடத்தில் 72 வயது கிழவியும் தமிழ் பாஷை சரித்திரக் குறிப்புக் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கம்பளை தமிழாசிரியர் சங்கம்

கம்பளை தமிழாசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் சென்ற 18-2-56ல் கம்பளை அர்ச். சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு கே. சுப்பையா தலைமையில் மௌனப் பிராத்தனையுடன் ஆரம்பமாகிச் சென்ற ஆண்டு அறிக்கை தனதிகாரி அறிக்கை என்பன இடம் பெற்றன. பிரதம பேச்சாளரான அ. இ. த. ஆசிரிய சங்கக்கௌரவ காரியதரிசி திரு கு. வி. செல்வத்துரை கடந்த 10 வருடங்களில் "தமிழாசிரியர் சங்கம் சாதித்தவை என்ன" என்ற விடயம்பற்றி வேண்டிய மேற்கோள்களுடன் விரிவுரை ஆற்றினர்.

இவ்வருட உத்தியோகத்திற்குத் தலைவராக திரு கே. சுப்பையாவும் உபதலைவர்களாக திருவாளர்கள் எஸ். பொன்னையா, ஸீ. சிவப்பிரகாசம் என்போரும் காரியதரிசியாக திரு மு. செல்லையாவும் உபகாரியதரிசியாக திரு வீ. பொன்னையாவும், தனதிகாரியாக திரு பொ. தம்புவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் நிறைவுரையுடனும் காரியதரிசியின் நன்றியுரையுடனும் கூட்டம் இனிது நிறைவேறியது.

சாம்பற்றீவில் திரு இராஜவரோதயருக்கு ஆதரவு

சாம்பற்றீவில் சென்ற 26-2-56 ல் நடந்த இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி வாலிபமுன்னணிக் கூட்டத்தில் திரு க. சி. சுப்ரமணியம் பேசுகையில், பொதுத்தேர்தல் வந்துவிட்டது. அத்தோடு பல கட்சிகளும் வந்துவிட்டது. தேர்தல் முடிந்தும் கட்சிகளும் முடிந்துவிடும். ஆகவே தமிழ் பேசும் மக்களுக்காக தொடர்ந்து பாடுபட்டு வரும் கட்சி தமிழ் அரசுக்கட்சியேதான். ஆகையால் அக்கட்சியில் அபேட்சகராக நின்று போட்டியிடும் திருவாளர் என். ஆர். இராஜவரோதயருக்கு எங்கள் வாக்குரிமையைக் கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். சபையோர் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். மேலும் தேர்தலுக்குத் தேவைப்படும் ஏனைய செலவுகட்கு பொது மக்களிடமிருந்து நிதி சேகரிப்பதற்கென திரு இ. செல்லத்துரை, பொ. இராசதுரை, வே. இராசதுரை, க. அருமைத்துரை, க. காத்திகேசு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் நிதி சேகரிப்பதில் தீவிர முயற்சி செய்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இ. தி. மு. க. செயலாளருக்கு பிரிவுபசாரம்

இ. தி. மு. க. பொரளைக் கிளையின் முன்னாள் செயலாளர் திரு ஞா. சி. அன்பழகன் அவர்கள் தாயகம் செல்வதை முன்னிட்டு சென்ற 26-2-56 திரு பூ. கா. சோமநாதன் தலைமையில் ஓர் பிரிவுபசாரக் கூட்டம் நடைபெற்றது.

திரு அன்பழகனின் சேவையைப் பலர் பாராட்டிப் பேசிய பின்னர் தைத்தறி துண்டு அணிவித்து வாழ்த்தி கௌரவிக்கப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்கொட்டகலை ஜில்லாக்கமிட்டியைச் சேர்ந்த டெவன் தங்காப்பு-நடுத்தோட்டம் பளிங்குமலை ஆகிய தோட்டங்களில் தோட்டக்கமிட்டிக் கூட்டங்கள் நடைபெற்றன.

கூட்டத்திற்கு ஜில்லாதலைவர் எம். எஸ். செல்லசாமி தலைமை வகித்தார்.

இ. தொ. கா. பொதுக் காரியதரிசி எஸ். சோமசுந்தரம், ஜில்லாகாரியதரிசி எம். ஆர். ரெங்கையா இ. ஜ. கா. மாதர் சங்கத் தலைவி திருமதி டி. சரோஜினி ராமானுஜம் அம்மையார், மாதர் சங்க காரியதரிசி திருமதி ராமசுப்ரமண்யம் ஆகியோர்களும் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

கீழ்க்கண்டவர்கள் தோட்டக்கமிட்டி உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

டெவன் தோட்டக்கமிட்டி

தலைவர்: எஸ். ஏபரஹாம், உப தலைவர்: மூக்கன், பொக்கிஷதார்: ஏ. பழனிமுத்து, காரியதரிசி: ஏ. பெரியசாமி, உப காரியதரிசி: எம். சன்னாசி கமிட்டி மெம்பர்கள் (14) பதினான்கு பேர்களும்.

மாதர் கமிட்டி

தலைவி: பி. செவனுயி, காரியதரிசி: எம். சின்னம்மா, பொக்கிஷதார்: ஏ. தெய்வானை பன்னிரண்டு கமிட்டி மெம்பர்களும். தொண்டர் கமிட்டி தலைவர்: எம். வைத்திலிங்கம், காரியதரிசி: எஸ். ஜெபமாலை, பொக்கிஷதார்: ஆர். அருளப்பன் ஆகியோர்களை கொண்ட இருபத்திரண்டு தெண்டர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தங்காப்பு தோட்டக்கமிட்டி

தலைவர்: வி. ஏ. சின்னையா, உப தலைவர்: டி. செவனு, காரியதரிசி: பி. சாமிநாதன், பொக்கிஷதார்: பி. கருப்பன் கமிட்டி மெம்பர்கள் பதின்மூன்று பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

மாதர் கமிட்டி

தலைவி: ஆர். அழமேலு, உப தலைவி: பி. பாவாய், காரியதரிசி: கே. மீனாக்ஷி, பொக்கிஷதார்: பி. கருப்பாயி கமிட்டி மெம்பர்கள் பதினைருபேரும் பன்னிரண்டு பேர்களை கொண்ட தொண்டர் கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

பளிங்குமலை தோட்டக்கமிட்டி

ஜில்லாக்கமிட்டித்தலைவர் எம். எஸ். செல்லசாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு இ. ஜ. கா. இ. தொ. கா. முன்னாள் தலைவர் எஸ். தொண்டமான் அவர்களும் ஜில்லாக் காரியதரிசி சி. எம். ஆர். ரெங்கையா தலவாக்கலை பிரதிநிதி ஆர். ஜேசுதாசன், ஏ. ராமன் ஆகியோர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

கீழ்கண்டவர்கள் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ். மாணிக்கம், உபதலைவர்: வி. பழனிமுத்து, காரியதரிசி: வி. பி. சின்னையா, உபகாரியதரிசி: எஸ். பி. வேலு பதினைந்து பேர்கள் கொண்ட கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது.

தமிழ் வாலிப முன்னணி

கிளிவெட்டி தமிழ் வாலிபர் முன்னணி சமீபத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

சங்க உத்தியோகஸ்தர்களாகப்பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: பூ. விநாயகமூர்த்தி, உப தலைவர்: வ. சிவானந்தராஜா, இணைக் காரியதரிசிகள்: அ. தங்கத்துரை, வ. சுந்தரலிங்கம். தனதிகாரி: ஜே. நடராசா, செயற் குழு உறுப்பினர்கள்: கே. கோணமலை, ந. இளையதம்பி, க. இராசரட்னம், வே. செல்லத்துரை, கோ. காளியப்பு, வே. சபாரட்ணம், குமாரசேகரம், துரைசபிள்ளை.

அடிமையின்...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ணீரும் அவளை மேலும் பேச விடாமல் தடுத்தன. பேராசிரியத்தில் மூழ்கிய அவளைச் சுற்றியிருந்த பணிப்பெண்களும் மனமிழகிக் கண்ணீர் வடித்தனரே தவிர, இச் சோககரமான காட்சிக்கான காரணத்தை அறிந்து கொள்ள முடியாமலேயே இருந்தனர். அவர்கள் வடித்த கண்ணீர் இவளது கண்ணீருடன் பெருக்கெடுத்தோட ராஜகுமாரியின் துக்கத்துக்கான காரணங்களை தாங்களும் விம்மியழுதவண்ணமே கேட்டனர். ஆனால் ஆழ்ந்த சோகத்தில் மூழ்கிவிட்ட இளவரசியோ வழிந்த கண்ணீரைத் துடைத்தபடியே தலையை உயர்த்தியவளாய் மேஜை திடத்தை மறுபடியும் வரவழைத்துக் கொண்டாள். ஹே! என் பிரிய ஹிருதயமே! உனக்கு நான் செய்ய வேண்டியவற்றை எல்லாம் நிறைவேற்றிவிட்டேன். இனி நம்மிருவர் ஆவியும் ஒன்று படுவதைத் தவிர வேறொன்றுமில்லை" என்று சொல்லிக்கொண்டே குப்பியில் தான் வைத்திருந்த விஷத்தை ஒரு பாத்திரத்தில் கலக்கி எவ்விதப் பயசாயலுமின்றி மடக்மடக்கென்று கடைசிச் சொட்டு வரைக் குடித்தாள். கையிலிருந்த இருதயத்தை மேலும் இறுகப் பற்றிக் கொண்டே படுக்கையில் விழுந்தாள். காதலனது இருதயம் தனது இருதயத்தை அழுத்தும் வண்ணம் அதனைத் தன்மார்புடன் அணைத்தபடியே கிடந்தாள்.

அவள் பருகிய திராவகம் என்னவென்பதை அப்பணிப் பெண்கள் அறியாவிட்டாலும் நடந்தவற்றை உடனே அரசனுக்கு அறிவித்தனர். ஆனால் அரசன் வருவதற்குள் நேரம் பிந்திவிட்டது. அவன் வருவதற்கு முன்பே அவள் படுக்கையில் விழுந்துவிட்டாள். தன் துரோகச் செயலை எண்ணிக் கண்ணீர் பெருக்கி அழுவதல்லாமல் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் ஸிகிஸ்மோண்டோ அவளைப் பார்த்து மிகவும் தணிவான குரலில் "என் தந்தையே எனக்காக நீ கண்ணீர் வடியாதே. அது உபயோகமற்றதும் நான் விரும்பாததுமாகும். என்மேல் நீ கொண்டுள்ள அன்பில் கடுகளவாவது மிச்சமிருக்குமாகில், கைஸ்காட்டுடன் நான் ரகசியமாகச் சந்தோஷித்திருப்பதை நீ விரும்பமாட்டாயாதலால் எங்களிருவரது உடலையும் பகிரங்கமாகப் பிரசித்தமான ஓரிடத்தில் வைத்துத் தகனம் செய்வாயாக. இவ்வார்த்தைகள் அரசனை மேலும் சோகத்திலாழ்ந்தவே விம்மி விம்மி அழுதுகொண்டே அவன் அறையைவிட்டு வெளியேறினான். அவன் அறையை விட்டு வெளியே சென்றும் செல்லாமலு மிருக்கும் போதே, தனது கடைசி நேரம் சமீபித்து விட்டது என்பதை உணர்ந்த ராஜகுமாரி தன் காதலனது இருதயத்தை தன் மார்புடன் அமுக்கிப்பிடித்தவண்ணமே அங்குள்ள பெண்களின் பக்கம் திரும்பி அவர்களுக்குப் பிரியாவிடை கூறினாள். அடுத்தகணம் கண்கள் மூடின. அவளும் பிரக்ஞை இழந்து அப்படியே இறந்து போனாள்.

கைஸ்காட்டினதும் இளவரசி ஸிகிஸ்மோண்டாவினதும் சோகக் கதை இதுதான். வயோதிபடான் கிறெட்டின் சோகம் வர்ணனையை மிஞ்சியது. தான் செய்த கொடும்பாவத்துக்காக மனம் வருந்தினான். ஸாலேற்றே தேச மக்கள் அனைவரும் அழுது புலம்பினர். ஒரே தீப்பிழம்பு அந்த இரு காதலர்களின் உடல்களையும் அணைத்துக் கொண்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பொழுது ஏககாலத்தில்
நான்கு திரைகளில் காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு)
ஸைபயர் (கொழும்பு)
வெம்பிளி (கண்டி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

ஏ. வி. எம். தயாரிப்பாளரின்

நாகதேவதை

(தமிழ் நாகபஞ்சமியின் வரலாறு)

யமுனா, சௌகார் ஜானகி,
நாகேந்திரராவ், மோகன்,

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் டாக்டர்
சிங்களப் பட நடனப் புகழ்

இ.வி. சரோஜா நடித்தது.

ஆதவனை அந்தரத்திலே நிறுத்திய
கற்பரசியின் காதை!

மெய்சிலிர்க்க வைக்கும் நாகங்களின் உன்னத நடிப்பு!!

இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 196ம் இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு அச்சகத்தில் அச்சிடப்பட்டு 1956 மார்ச் 11ந் திகதி பிரசுரம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org